★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK


# தினகரன்
THINAKARAN
தினகரன் (Sinhala)
2022 டிசம்பர் 14 புதன்கிழமை
1932 - 2022

வரு. 90 இல. 295 | Wednesday 14, December, 2022 | 16 பக்கங்கள் | 50/-

## தேசிய மீலாத்தின ஞாபகார்த்த முத்திரை இன்று வெளியீடு

### பிரதம அதிதியாக அமைச்சர் அலி சப்ரி பங்கேற்பு

*ஏ.எஸ்.எம். ஜாவித்*



புத்தசாசன மதவிவகார அமைச்சு முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 2022ஆம் ஆண்டின் தேசிய மீலாத் தினத்தை முன்னிட்டு ஞாபகார்த்த முத்திரை வெளியிடும் நிகழ்வு இன்று (14)

06

## அதிசிறந்த ஊடகவியலாளர்களாக லேக்ஹவுஸ் நிறுவனத்துக்கு ஆறு விருதுகள்



பத்திரிகை ஆசிரியர் சங்கம், இலங்கை பத்திரிகை பேரவையுடன் இணைந்து நடாத்திய 2022 ஆம் ஆண்டுக்கான அதி சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு, நேற்று (13) கல்கிஸ்ஸை மவுண்ட்லெவின்யா ஹோட்டலில் நடைபெற்றது. தினகரன் இணை ஆசிரியர் மர்லின் மரிக்கார் உட்பட லேக் ஹவுஸ் நிறுவனத்தின் சிலுமின, தினமின ஊடகவியலாளர்கள் ஆறு பேருக்கு இவ் விருதுகள் கிடைத்துள்ளன. அத்துடன் ஊடகத்துறையில் சிறப்பாக சேவையாற்றிய ஐவர் வாழ்நாள் சாதனையாளராக கௌரவிக்கப்பட்டனர்.

### பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்களில்

# போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்கு விசேட செயலணி

### உடனடி நடவடிக்கைக்கு ஜனாதிபதி பணிப்பு



**ஒழுக்கமின்றி செயல்படும் மாணவர்களின் மாணவர் தகுதியை இரத்துச் செய்தல் போன்ற முடிவுகளை எடுக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி தெரிவிப்பு**

பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில் ஐஸ் உள்ளிட்ட போதைப் பொருள் பாவனையை தடுப்பதற்காக, விஷேட போதை பொருள் மற்றும் ஆபத்தான ஒளடத பாவனையை தடுக்கும் விசேட செயலணியொன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் (12) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஆலோசனை வழங்கியுள்ளார்.

விஷேட போதை பொருள் மற்றும் ஆபத்தான ஒளடதங்களை தடுப்பதற்கான செயலணியில் திருத்தம் செய்து, இந்த விசேட செயலணியை அமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு நீதி அமைச்சர் அலி சப்ரி, பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியதாக போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன அமைச்சரவை முடிவுகளை தெரிவிக்கும் ஊடக சந்திப்பில் நேற்று (13) தெரிவித்தார்.

அத்துடன் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகத் தொகுதிக்குள் போதைப்பொருள் வருவது தொடர்பாக விரிவான ஆய்வொன்றை நடத்துமாறு, பாதுகாப்பு பிரிவினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியதாகவும் அமைச்சர் தெரிவித்தார். பல்கலைக்கழகங்களில் ஒழுக்கமற்ற நடவடிக்கையில் ஈடுபடும் மாணவர்களுக்கு

06

## முடிவுக்கு வந்தது தபால் ஊழியர் வேலைநிறுத்தம்!

### அனைத்து செயற்பாடுகளும் வழமை



தபால் ஊழியர்கள் நேற்று (13)அடையாள வேலை நிறுத்தத்தை முடிவு செய்து வழமை போன்று பணிக்குத் திரும்பியதாக தபால் மாஅதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த தபால் மாஅதிபர், கடந்த 12ஆம் திகதி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த அனைத்து கட்டுப்பாட்டு அலுவலகங்களும் செயல்பட்டதாக தெரிவித்தார்.

பிரதான காரியாலயம், 10 பிரதி தபால் மாஅதிபர் அலுவலகங்கள், பிரதேச தபால் அதிகார சபை அலுவலகங்கள், மாவட்ட அதிகாரசபை அலுவலகங்கள் தமது கடமைகளில் ஈடுபட்டதாக கூறினார்.

தபால் அலுவலகங்கள், உப தபால் அலுவலகங்களில் 90% நேற்றுமுன்தினம் (12) மூடப்பட்டிருந்தன. ஆனால் அனைத்து அலுவலகங்களிலும் நேற்று (13) பணி நடவடிக்கைகள் நடைபெற்றதாக கூறலாம்.

அவர்களின் கோரிக்கைகளில், மேலதிக, மேலதிக நேர கொடுப்பனவு அல்லது புதியவற்றை அறிமுகப் படுத்த முடியாது, தபாலை விற்பனை செய்வது போன்ற கலந்துரையாடல்களோ அல்லது தனியார் மயப்படுத்துவதோ போன்ற கதை ஒரு போதும் இல்லை.

06

## எதிர்கால நோக்கை அரசிடம் முன்வைக்க தேசிய இளைஞர் தளம் கைகொடுக்கும்

03

## தபால் திணைக்களத்தை தனியார் மயமாக்கும் திட்டம் எதுவுமில்லை

### அமைச்சர் பந்துல குணவர்தன திட்டவட்டமாக தெரிவிப்பு



தபால்திணைக்களத்தின்வருவாயை அதிகரிப்பதற்கான முற்போக்கான முன்மொழிவுகளுடன் கலந்துரையாடுவதற்கு தயாராக இருந்தால், தபால் தொழிற்சங்கங்களை சந்திக்க அரசாங்கம் தயாரென, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், ஆறு கோரிக்கைகளை முன்வைத்து தபால் தொழிற்சங்கங்கள் முன்னறிவிப்பின்றி முன்னெடுத்துள்ள தொழிற்சங்க நடவடிக்கை நியாயமானதல்ல என்றார்.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில், அதிகபட்ச மாதாந்த மேலதிக நேர வரம்பை 240 மணிநேரமாக அதிகரிக்க வேண்டுமென்ற

06

## மின் கட்டண நிலுவையை செலுத்த 02 வார அவகாசம்

### அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டதாக தெரிவிப்பு



தற்போது நிலுவையிலுள்ள மின் கட்டணத்தை செலுத்த அமைச்சர்களுக்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கப்படுவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித்தார். பல அமைச்சர்கள் மின்சாரக்கட்டணங்களை செலுத்தாதுள்ளனர். இதனைக் கருத்திற் கொண்டு புதிய செயல் முறையொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக

06

## இலங்கை - இந்திய கப்பல் சேவை 2023 ஜனவரி முதல்

### அமைச்சர் நிமல்சிறிபால டி சில்வா தெரிவிப்பு



இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அமைச்சில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலிலே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக காங்கேசன்துறைக்கும் பாண்டிச்சேரிக்குமிடையிலான கப்பல் சேவை எதிர்வரும் ஜனவரி மாத மத்தியில் ஆரம்பிக்கப்படுமென அமைச்சர் குறிப்பிட்டார்.

06

## முகக்கவசம் அணிவது மாணவர்களுக்கு நல்லது



### சுகாதாரத் தரப்பு அறிவுரை

பாடசாலைகள் நேற்று முதல் திறக்கப்பட்ட போதிலும், நாட்டில் தற்போது நிலவும் காலநிலை மாற்றத்தை கருத்திற்கொண்டு, பாடசாலை மாணவர்கள் தொடர்ந்தும் முகக்கவசம் அணிவது சிறந்ததென சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

06

## யாழ். பலாலி அபிவிருத்திக்கு இந்தியா உதவும்



### தயாராகவே உள்ளதாக உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

யாழ்.பலாலி சர்வதேச விமான நிலைய வசதிகளை மேம்படுத்தவும், விரிவுபடுத்தவும் இலங்கையுடன் இணைந்து பணியாற்ற தயாராக உள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சென்னைக்கு இடையே விமான சேவை மீண்டும் ஆரம்பமானதை குறிக்கும் வகையில், நேற்று முன்தினம் விமான நிலையத்தில் நடைபெற்ற

06

### 24 உள்ளூராட்சி மன்ற மாநகர சபை , 41 நகர சபை, 276 பிரதேச சபைகள்

## உள்ளூராட்சி மன்ற தேர்தல் 2023 பெப்ரவரி இறுதியில்



24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகளுக்கு 8,327 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தலை, இம்மாத இறுதி வாரத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிடவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர்

06

## இந்திய – இலங்கை கடற்படை தளபதிகள் சந்தித்து உரையாடல்



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் ஆர். ஹரி குமார், இலங்கை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் நிசாந்த உலுகேதென்னவை சந்தித்தார். இரு நாடுகளதும் கடற்படை ஆளுமைகளை விருத்தி செய்யும் செயற்பாடுகளை வலுவாக்குதல், மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துதல் குறித்து இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.



## வெளிநாட்டிலிருந்து பொதி வந்துள்ளதாக நிதி மோசடி

### முறையிட விசேட தொலைபேசி இலக்கங்கள்

03




### அரசியல் கைப்பாவைகளாக பயன்படுத்தப்படும்

## பல்கலை மாணவர்கள் வன்முறையில் ஈடுபாடு

03

## சிறுநீரக மோசடி விவகாரம் 10 பேரிடம் வாக்குமூலம்

### CID க்கு வைத்தியசாலை ஆதரவளிப்பு



பொரளை கொட்டா வீதியிலுள்ள தனியார் வைத்தியாலையில் இடம்பெற்றதாக கூறப்படும் சிறுநீரக மாற்று மோசடி தொடர்பில் இதுவரை 10 பேரிடம் வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளன. இவ்விடயம் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு முழுமையான விசாரணைகளை மேற்கொள்கிறது.

06

### அம்பாறை, மன்னார் நகரசபைகள்

## மாநகர சபைகளாக தரமுயர்த்த அங்கீகாரம்

### பிரதமரின் யோசனைக்கு சாதக பதில்

அம்பாறை மற்றும் மன்னார் நகர சபைகளை மாநகர சபைகளாக தரமுயர்த்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகள், அலுவலக வசதிகள் மற்றும் மனித வளங்களைப் பயன்படுத்தி, மேலதிக நிதியைச்

06

### சட்டவிரோதமாக கடத்தப்பட்ட

## 2,400 கிலோ கிராம் மஞ்சள் கண்டுபிடிப்பு

### யாழ்.மானிப்பாயில் இருவர் கைது



யாழ்.மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக பெருந்தொகையான விரலி மஞ்சளை கடத்திய இருவரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

06

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 80 Kg போதைப்பொருள் பறிமுதல்

### இந்திய ரூபாவில் 256 கோடி என மதிப்பீடு

### இராமநாதபுரம் பகுதியில் பொலிஸார் அதிரடி

**38 Kg –ஐஸ்,**
**50 Kg கஞ்சாஎண்ணெய் பறிமுதல், 2 பேர் கைது**

*திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது*

இலங்கைக்கு கடத்துவதற்காக கொண்டு வரப்பட்ட இந்திய ரூபாவில் 256 கோடி ரூபா மதிப்பிலான 38 கிலோ ஐஸ் மற்றும்

06

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்




# மதுபோதையில் ஆட்டோ ஓடிய இராணுவ சிப்பாய் கைது

மது போதையில் முச்சக்கர வண்டியை செலுத்தி விபத்துக்குள்ளாக்கிய இராணுவ வீரர் ஒருவரை இராகலை பொலிஸார் நேற்று முன்தினம் (12) மாலை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள இராணுவ வீரர் இராகலை மந்திரித்தென்ன பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

இவர் நேற்றுமுன்தினம்(12) மாலை மது அருந்திவிட்டு தனது முச்சக்கர வண்டியில் பெண் ஒருவரையும், இவரின் நண்பரான விமானப்படை வீரரையும் ஏற்றி வந்துள்ளார். இதன் போது வேக கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கர வண்டி இராகலை தபால் கந்தோர் அருகில் பிரதான வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் பயணித்த பெண் பலத்த காயங்களுக்கு உள்ளானதுடன், விமானப்படை வீரர் மற்றும் வண்டியை செலுத்திய இராணுவ வீரர் ஆகியோர் சிறு காயங்களுடன் தப்பியுள்ளனர்.



தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த இராகலை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவினர் அவர்களை மீட்டு பலத்த காயத்திற்கு உள்ளான பெண்ணை இராகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

அதேநேரத்தில் சிறு காயங்களுடன் மீட்கப்பட்ட இராணுவ வீரர் மற்றும் விமானப்படை வீரர் ஆகியோரை பொலிஸார் பரிசோதித்த போது இவ்விருவரும் அளவுக்கு அதிகமாக மது அருந்தியிருந்தமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து இரு வீரர்களையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்ற பொலிஸார் மது அருந்திவிட்டு வாகனத்தை செலுத்திய குற்றச்சாட்டில் இராணுவ சிப்பாயை கைது செய்ததுடன் விமானப்படை வீரரை போதை தெளியும் வரை பொலிஸ் காவலில் வைத்து பின் வீட்டுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

அத்துடன் இராணுவ சிப்பாய் செலுத்திய முச்சக்கர வண்டியை தடுத்துவைத்த பொலிஸார் இராணுவ சிப்பாயை வலப்பனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

(ஆ.ரமேஸ்)

# மூன்று பிள்ளைகளுக்கு நஞ்சூட்டி தானும் நஞ்சருந்திய தாய் கைது

## வலப்பனை, மத்துரட்ட பொலிஸ் பிரிவில் சம்பவம்

வலப்பனை, மத்துரட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எலமுள்ள மாரதுவெல எனும் இடத்தில் 25 வயதான இளம் தாய் ஒருவர், தனது மூன்று பிள்ளைகளுக்கும் நஞ்சூட்டியதுடன், தானும் நஞ்சருந்தி உயிரை மாய்த்துக்கொள்ள முயற்சித்துள்ளார்.

இச்சம்பவம் (12) மாலை இடம்பெற்றுள்ளதாக மத்துரட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் விடயம் அறிந்த அயலவர்கள் உடனடியாக தாய் மற்றும் பிள்ளைகள் மூவரை காப்பாற்றியதுடன் இது தொடர்பில் 119 அவசர பொலிஸாருக்கும் அறிவித்துள்ளனர்.

இச்சம்பவ இடத்திற்கு விரைந்த மத்துரட்ட பொலிஸார், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு குறித்த தாயை கைதுசெய்துள்ளனர்.

தனது கணவர் தன்னையும், பிள்ளைகளையும் கவனிப்பதில்லை, உண்ணுவதற்கு உணவு பொருட்கள் பெற்று தருவதில்லை, பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப உபகரணங்கள் பெற்று தருவதில்லை. இதனால், தொடர்ந்து பட்டினிச் சாவை எதிர்கொள்கிறோம். இதனாலேயே நஞ்சருந்தி உயிரை மாய்த்து கொள்ள முயன்றதாக அவ்விளம் தாய் விசாரணையில் தெரிவித்துள்ளார். ஆறு, ஐந்து மற்றும் ஒரு வயதுகளையுடைய பிள்ளைகளுக்கே இத்தாய், நஞ்சூட்டி உள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் மத்துரட்ட பொலிஸார், தாய் மற்றும் பிள்ளைகளை வலப்பனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ஆ.ரமேஸ்)

# கவனிப்பாரற்று காணப்படும் தமிழ் பாடசாலை கட்டடம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

நிவித்திகல, கொலம்பகம தமிழ் வித்தியாலயத்தின் பழைய கட்டிடமும் காணியும் கவனிப்பாரற்று காணப்படுவதாக பிரதேச மக்கள் முறையிடுகின்றனர்.

1998ஆம் ஆண்டில் இப்பாடசாலையை வேறொரு இடத்துக்கு இடம் மாற்றும் முயற்சியால் இக்கட்டிடம் கைவிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக சுமார் 24 வருடங்களுக்கும் மேலாக இப்பாடசாலை கட்டிடம் சிதைவடைந்தும் காணி காடுவளர்ந்தும் கவனிப்பாரற்று காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே பாடசாலை நிர்வாகம் மற்றும் இப்ரதேச சமூகமும் ஒன்றிணைந்து இக்காணியையும் கட்டடத்தையும் பாடசாலையின் ஏனைய தேவைகளுக்கு அல்லது எதிர்கால நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த ஆவண செய்ய வேண்டும் அல்லது பிரதேச பொது மக்களது பொதுப் பயன்பாட்டிற்கு பயன்படுத்த வேண்டும் என பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.

# வைத்தியசாலை சிற்றூழியர் போதை வில்லைகளுடன் கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

போதை பொருள் வைத்திருந்த கேகாலை போதனா வைத்தியசாலை சிற்றூழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சிவில் உடையில் சென்ற பொலிஸார் இவரை நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

அவரிடம் 40 போதைவில்லைகளும் போதைவில்லைகள் விற்பனை செய்த பணமும் இருந்துள்ளது. விசாரணையின் போது, இவர் நீண்ட காலமாக இச்செயலில் ஈடுபட்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.





ஸம் ஸம் பவுண்டேசன் அமைப்பின் ஏற்பாட்டில் 25 மில்லியன் ரூபா செலவில் கண்டி மாவட்டத்திலுள்ள 4,230 பாடசாலை மாணவர்களுக்கு இலவசமான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. கண்டி மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் ஸம் ஸம் பவுண்டேசன் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் முப்தி யூசுப் ஹனிபா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே கலந்து கொண்டு சிறப்பித்தார்.

# ஹற்றன், காசல்ரீ நீர்த்தேக்கத்தில் வயோதிப பெண் சடலமாக மீட்பு

ஹற்றன் விசேட, நோட்டன் பிரிட்ஜ் தினகரன் நிருபர்கள்

ஹற்றன் காசல்ரீ நீர்த்தேக்கத்திலிருந்து நேற்று (13) வயோதிப பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஹற்றன், காபெக்ஸ் பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் கமலம் வயது 75 என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ் வயோதிப பெண் நேற்று முன்தினம் மாலை காணாமல் போனதையடுத்து அவரது உறவினர்கள் நேற்று முன்தினம் இரவு வரை தேடியும் எவ்வித தகவலும் கிடைக்கப்பெறாத நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.



சடலம் மீட்கப்பட்ட காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு அருகிலுள்ள சனசமூக நிலைய கட்டத் தொகுதிக்கு சென்ற நீதவான் நீதிமன்ற நீதிபதி, சடலத்தை பார்வையிட்ட பின் பிரேத பரிசோதனைக்காக சடலம் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முன்னாள் உபவேந்தர் மீதான தாக்குதல் சம்பவம்: அறுவர் கைது

(எம்.ஏ.அமீனுல்லா)

பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் மற்றும் அவரது மகனைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் ஆறு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் (12) இரவு பேராதனை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த அவர்களை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் மாத்தளை, நிட்டம்புவ, சந்தலங்கல, கிரித்தலே, ஹேனகமுவ மற்றும் கலகம்வத்தை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 23 முதல் 25 வயதுக்கு உட்பட்டவர்களாவர் என அறியவருகிறது.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 06 சந்தேக நபர்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அக்குறணையில் டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

## பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எச்சரிக்கை

(அக்குறணை குறூப் நிருபர்)

அக்குறணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நோயாளர்கள் தொகை அதிகரித்து வருவதாக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சஞ்ஜீவ குருந்துகஹமட தெரிவித்தார்.

அக்குறணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இதுவரை நூறிற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாகவும் டெங்கு பரவுவதை தடுக்க முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை பொதுமக்கள் மேற்கொள்ளவேண்டும்என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய கால நிலை டெங்கு பரப்பும் நுளம்புகள் அதிகளவில் உருவாக காரணமாகியுள்ளதாகவும் பொது மக்களின் ஒத்துழைப்பு இன்றி இதனைக் கட்டுப்படுத்த முடியாது என்றும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அவர் தெரிவித்தார்.

# கலேவெல பிரதேச சபையில் பட்ஜெட் நிறைவேற்றம்

மாத்தளை சுழற்சி நிருபர்

கலேவெல பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச சபையின் தலைவர் எம்.பி.ஆர்.ஜெயத்திலக்க அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் சமர்ப்பித்தார். இதன்போது வரவு செலவு திட்ட அறிக்கை சபையில் பிரதேச சபை தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் வாக்கெடுப்புக்கு விடுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 1 உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி 1 உறுப்பினருமாக மொத்தம் 21 பேர் ஆதரவாகவும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஐந்து உறுப்பினரும் பொதுஜன பெரமுன உறுப்பினர் ஒருவரும் இதற்கு எதிராகவும் வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவர் அன்றைய தினம் சபைக்கு சமூகமளிக்கவில்லை. அடுத்த ஆண்டுக்கான மொத்த வருமானம் 12 கோடியே 57 இலட்சத்து 22,800 ரூபா எனவும் மொத்த செலவுத் தொகை 9 கோடியே 34 இலட்சத்து 3500 ரூபா எனவும் தலைவரால் சபையில் அறிவிக்கப்பட்டது.



தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்

THINAKARAN

2022 டிசம்பர் 14 புதன்கிழமை

தொழுகை நேரம்

12 முதல் 14 வரை

சுபஹ் - 04.51
லுஹர் - 12.06
அஸர் - 03.28
மஃரிப் - 05.57
இஷா - 07.12

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் கார்த்திகை 28

ராகுகாலம் : பகல் : 12.00 - 1.30வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை

யோகம்: சித்த அமிர்தயோகம்

திதி: சஷ்டி



# எதிர்கால நோக்கை அரசிடம் முன்வைப்பதற்கு தேசிய இளைஞர் தளம் கை கொடுக்கும்

**- ஜனாதிபதி**



நாட்டின் எதிர்காலம் பற்றிய தமது நோக்கை அரசாங்கத்திற்கு முன்வைக்க "தேசிய இளைஞர் தளம்" இளைஞர்களுக்கு கிடைக்கும் ஒரு சிறந்த சந்தர்ப்பமாகுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் கொண்டாடப்படவுள்ள 75 ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்துடன் இணைந்து உருவாக்கப்படவுள்ள, தேசிய இளைஞர் தளத்துக்கு, (National youth Platform) பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்பு தொடர்பில் நேற்று (13) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான பூர்வாங்கத் திட்டம், இளைஞர் விவகாரம் மற்றும் நிலையான அபிவிருத்திக்கான ஜனாதிபதியின் பணிப்பாளர் ரந்துல அபேவீரவினால் முன்வைக்கப்பட்டது.இங்கு பல்கலைக்கழக உபவேந்தர்கள் இது தொடர்பான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைத்தனர்.

நாட்டின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் இன்றைக்கு அல்லாமல், அடுத்த 25 வருடங்களுக்காகவே தயாரிக்கப்பட வேண்டும் என்றும் அதற்காக இளைஞர்களின் பங்களிப்பு அதிகபட்சமாக பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இன்னும் 25 வருடங்களில் சுதந்திர தின நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாடும் போது, நாட்டின் இளைஞர்கள் இந்த நாட்டின் தலைவர்களாக இருப்பார்களென்றும் குறிப்பிட்டார்.

எனவே, இளைஞர்கள் தாங்கள் விரும்பும் அபிவிருத்தியடைந்த நாட்டைக் கட்டியெழுப்ப, தேசிய இளைஞர் தளத்தின் ஊடாக தமது நோக்கு, திட்டங்கள் மற்றும் ஆக்கத்திறன்களை அரசாங்கத்திற்கு முன்வைக்க முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இலங்கையில் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் நோக்கில் கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், கண்டி மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்புடன் செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, அந்த மாவட்டங்களில் உள்ள சுற்றுலாத் தலங்களைக் கண்டறிந்து, அவற்றை சுற்றுலா வலயங்களாக மேம்படுத்துவது தொடர்பான திட்டங்கள், முன்மொழிவுகளை இளைஞர்களுக்கு சமர்ப்பிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

06

# வெளிநாட்டிலிருந்து பொதி வந்துள்ளதாக நிதி மோசடி

## முறையிட விசேட தொலைபேசி இலக்கங்கள்



வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பற்றியோ அல்லது உங்களுக்கு பொதிகள் வந்துள்ளதாக கூறியோ வரும் அழைப்புக்கள், குறுந்தகவல்களை உரிய வகையில் ஆராயாமல் எவரினதும் வங்கி கணக்குகளுக்கு பணம் வைப்பிலிடவோ? அல்லது வேறு வழிகளில் பணம் அனுப்பவோ? வேண்டாமென இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வு பிரிவு பொதுமக்களை கோரியுள்ளது.

வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்காக அனுப்புவதாக உறுதி வழங்கியும், பல்வேறுப்பட்ட பொருட்கள் உள்ளிட்ட பொதிகளை பெற்றுக் கொள்வதற்காக சுங்க வரி செலுத்த வேண்டியுள்ளதாக கூறியும் நிதி மோசடியில் ஈடுபடுகின்றமை தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

தொலைபேசி அழைப்பு, குறுந்தகவல், மின்னஞ்சல் மற்றும் சமூக வலைத்தளங்களூடாக போலி தகவல்களை வழங்கி, நிதி மோசடியில் ஈடுபடுகின்றமை தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினரிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளுக்கமையவே இந்த அறிவுறுத்தலை மத்திய வங்கி விடுத்துள்ளது.

எனவே உரிய முறையில் ஆராயாமல் எவரினதும் வங்கி கணக்குகளுக்கு

06

# இந்திய கடற்படை கப்பல் சஹ்யாத்ரி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது



**ஸாதிக் ஷிஹான்**

இந்திய கடற்படைக்குச் சொந்தமான ஐ என் சஹ்யாத்ரி கப்பல், நேற்றுக்காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

நல்லெண்ண விஜயமாக கொழும்பு துறைமுகத்துக்கு உத்தியோகபூர்வமாக வருகை தந்த கப்பலை, இலங்கை கடற்படையினர் கடற்படை சம்பிரதாய முறைப்படி வரவேற்றனர்.

கெப்டன் எம்.எம்.தோமஸ் தலைமையில் வருகை தந்த ஐஎன்எஸ் சஹ்யாத்ரி என்ற இந்தக்கப்பல், 143 மீட்டர் நீளமானதாகும். இக்கப்பல் சுமார் 390 கடற்படை பணியாளர் குழுவைக் கொண்டது.

மேற்படி கப்பல் தங்கியிருக்கும் காலத்தில், இரு கடற்படைகளுக்கு இடையேயான ஒத்துழைப்பையும் நல்லுறவையும் மேம்படுத்தும் வகையில், இலங்கை கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பல நிகழ்ச்சிகளிலும் இவர்கள் பங்கேற்பர்.

இதேவேளை, டிசம்பர் மாதம் (16) புறப்படவுள்ள

06

# அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த முடிந்துள்ளது



சந்தையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்த அமைச்சினால் முடிந்திருப்பதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் அமைச்சர் நளீன் பெர்னாண்டோ தெரிவித்தார். வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிலேயே (05) இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய அமைச்சர் குறிப்பிடுகையில், மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் திறந்த சந்தையின் விலைகளுடன் ஒப்பிடுகையில், நவம்பர் மாதத்தில் அத்தியாவசியப் பொருட்களைக் குறைந்த விலையில் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளது. இதன்படி, திறந்த சந்தையில் ஜூலை மாதம் ஒரு கிலோ பருப்பு 595 ரூபாவாக இருந்தது டிசம்பரில் லங்கா சதொச நிறுவனத்தில் ஒரு கிலோ பருப்பு 389 ரூபாவாகக் குறைந்திருக்கிறது.

06

**வடக்கு, கிழக்கில் கால்நடைகளின் உயிரிழப்பு**

# குளிரால் ஏற்பட்ட திடீர் அதிர்ச்சி காரணமென அறிக்கை சமர்ப்பிப்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாடுகள் மற்றும் ஆடுகளின் சடுதியான உயிரிழப்புக்கு தொற்று நோயல்ல, குளிரால் ஏற்பட்ட அதிர்ச்சியே காரணமென பேராதனை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் விசாரணையில் உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த சில நாட்களாக நிலவிய மோசமான வானிலை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பசுக்கள், எருமைகள் மற்றும் ஆடுகள் உள்ளிட்ட 1,660 கால்நடைகள் உயிரிழந்துள்ளன. அத்துடன் மேலும் பல கால்நடைகள் சுகயீனமடைந்துள்ளன.

விலங்குகளின் இந்த திடீர் மரணங்கள் தொடர்பில் முறையான விசாரணை நடத்தி அறிக்கையை சமர்ப்பிக்கும்படி, விவசாய, வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

இதன்படி, விசாரணைகளை முன்னெடுத்த பேராதனை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கால்நடைகள் உயிரிழந்தமை தொடர்பான விசாரணை அறிக்கையை விவசாய அமைச்சரிடம் வழங்கியுள்ளது.இதன்படி, விலங்குகள் இறந்ததற்குக் காரணம் தொற்றுநோய் அல்ல, மாறாக கடுமையான குளிரால் ஏற்பட்ட அதிர்ச்சியே காரணம் என்று அறிக்கை காட்டுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள விலங்குகள் அதிக வெப்பமான காலநிலைக்கு பழக்கப்பட்டவை. திடீர் வானிலை மாற்றங்களினால் ஏற்படும் கடும் குளிரை தாங்கிக் கொள்வதில் அவற்றுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளது.

இதனால், ஏற்பட்ட அதிர்ச்சியினால் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மண்மேடு சரிந்ததில் இளைஞர் ஒருவர் பலி

## இரத்தினக்கல் அகழ்கையில் துயரச் சம்பவம்

கெசல்கமஓயா, காப்புக்காட்டில் அனுமதிப்பத்திரமின்றி இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர், மண்மேடு சரிந்து விழுந்ததில் உயிரிழந்தார்.

அனுமதியின்றி இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த இவ்விளைஞர், காசல்ரி நீர்த்தேக்கத்துக்கு பிரதானமாக தண்ணீர் செல்லும் கெசல்கம ஓயா காப்புக்காட்டில் (12)

சிக்குண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இங்குள்ள

மண் மேட்டில் சிக்கி விழுந்தே இவர் உயிரிழந்ததாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ டின்சினன் பகுதியைச் சேர்ந்த கனகரத்தினம் குகேந்திரன் (வயது 22) என்பவரே இதில் உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞன் நேற்று முன்தினம் பிற்பகல் 03 மணியளவில், தனது வசிப்பிடத்தை ஒட்டியுள்ள கெசல்கமுஓயா காப்புக்காட்டில் மற்றுமொரு குழுவினருடன் இணைந்து மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்தார்.

உடன் இருந்தவர்களும், அயலவர்களும் இணைந்து மண் மேட்டில் புதையுண்ட இளைஞனை, சுமார் 02 மணி நேர போராட்டத்தின் பின்னர் மீட்டபோதும்,அவரது உயிரை காப்பாற்ற முடியாமல் போனது.

உயிரிழந்த இளைஞனின் சடலம் பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

**அரசியல் கைப்பாவைகளாக பயன்படுத்தப்படும்**

# பல்கலை மாணவர்கள் வன்முறையில் ஈடுபாடு



பல்கலைக்கழக மாணவர்கள் அரசியல் கைப்பாவைகளாகி வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுவது கவலைக்குரிய விடயம் என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பேராசிரியர் அதுல சேனாரத்னவிடம் தெரிவித்துள்ளார்.

சில பல்கலைக்கழக மாணவ குழுவினர், அரசியல் கட்சிகளின் கைப்பாவைகளாகி வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுவது கவலைக்குரிய விடயம் எனவும் தற்போது அப் பல்கலைக்கழக மாணவர்கள் தங்களுக்கு கல்வி கற்பித்த பேராசிரியர்களையே தாக்கும் நிலைமைக்கு ஆளாகியுள்ளமை நம்ப முடியாத ஒன்று எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ (13) நேற்று பாராளுமன்ற தொகுதிக்கு வருகை தந்த சந்தர்ப்பத்தில், பேராதனை பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் அத்துல சேனாரத்னவுக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி அவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக கடும் கண்டனம் தெரிவித்தார்.

மேலும், இச்செய்தி கேட்டு, தான் மிகவும் வருத்தம் அடைந்ததாகவும் முன்னாள் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சமூகத்தைப் பற்றிய விழிப்புணர்வுடனிருந்து அக்கறையுடன் நடவடிக்கையில் ஈடுபடும் புத்திசாலிகளே பல்கலைக்கழக மாணவர்கள்.

இவ்வாறானவர்கள் தங்களுக்கு கற்பித்த பேராசிரியரை தாக்கியதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

தன்னையும் தனது குடும்பத்தாரையும் இலக்காகக் கொண்டு இந்த தாக்குதல் இடம் பெற்றுள்ளது. சில மாணவர்கள் ஐஸ் போன்ற போதைப் பொருட்களை பெற்றுக் கொண்டிருந்தார்களா? என்ற சந்தேகம் தமக்கு ஏற்படுகிறது. இவ்வாறான நிலைமைக்கு ஏன் மாணவர்கள் உள்ளானார்கள்? என முறையான விசாரணையை மேற்கொள்ள வேண்டும்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து மாணவர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்காக தலையிடுமாறு சிரேஷ்ட பேராசிரியர் அதுல சேனாரத்ன, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்தார்.



தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 28ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஊலா பிறை 19

### குறள் தரும் சிந்தனை



அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்

தவறு செய்கின்றவர் கண்ணீர் விடுமளவுக்குக் கண்டித்து, அறிவுரை வழங்கக் கூடிய ஆற்றலுடையவரின் நட்பையே தெளிவான நட்பாக எண்ண வேண்டும்.

## போதைப்பொருள் பேராபத்திலிருந்து இளம்பராயத்தினரை மீட்பது அவசியம்!

இலங்கையின் இளம் பராயத்தினர் முகம் கொடுத்துள்ள பாரிய சவாலாக போதைப் பொருள் குற்றங்கள் விளங்குகின்றன. இவ்வாறான சவாலையும் அச்சுறுத்தலையும் இந்நாட்டு இளம்பராயத்தினர் உள்ளிட்ட முழுசமூகமும் முன்னொருபோதும் எதிர்கொண்டதில்லை.

இன்றைய நவீன அறிவியல் யுகத்தின் முக்கிய சமூகப் பிரச்சினைகளில் ஒன்றாக போதைப்பொருட்கள் குற்றங்களை மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

போதைப்பொருட்கள் உடல், உள ஆரோக்கியத்திற்கும் சமூக நலன்களுக்கும் மாத்திரமல்லாமல் நாட்டுக்கே தீங்கு விளைவிக்கக் கூடியனவாகும். இது தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள உண்மை.

அப்படியிருந்தும் சட்டவிரோதமான முறையில் போதைப்பொருட்கள் நாட்டுக்குள் வந்து சேர்வதும், அதன் விற்பனையும், பாவனையும் மாத்திரமல்லாமல் போதைப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட குற்றங்களும் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன.

பொலிஸாரின் தரவுகளின்படி, கைப்பற்றப்படும் சட்டவிரோத போதைப்பொருட்களின் அளவிலும் போதைப்பொருள் விற்பனையிலும் பாவனையிலும் அதிகரிப்புகள் ஏற்பட்டிருப்பது நன்கு தெளிவாகிறது.

அதேநேரம் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி உயிரிழக்கும் இளம்பராயத்தினர் நாட்டின் பல பிரதேசங்களிலும் பதிவாகும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக யாழ்குடாநாட்டில் மாத்திரம் பத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கடந்த சில மாதங்களுக்குள் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர்.

அதேநேரம் போதைப்பொருள் பாவனையுடன் சம்பந்தப்பட்ட இளம் பராயத்தினர் திருமண குடும்ப வாழ்வில் நாட்டமற்றவர்களாக இருப்பதும் பரவலாக அவதானிக்கப்பட்டுள்ளது. ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருள் பாவனை மக்கள் மத்தியில் எவ்வளவு தூரம் மோசமான வகையில் ஊடுருவி பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது என்பதை இவை எடுத்துக் காட்டக் கூடியனவாக உள்ளன.

இந்நாட்டு இளம் பராயத்தினரை இலக்காகக் கொண்டுதான் எல்லா விதமான போதைப்பொருட்களும் நாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றன. விற்பனையும் செய்யப்படுகின்றன.

இற்றைக்கு இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் தலைநகரிலும் அதனை அண்டிய ஒரு சில பிரதேசங்களிலும் காணப்பட்ட இப்போதைப் பொருட்களின் பாவனை இன்று பட்டிதொட்டியெல்லாம் வியாபித்து விட்டது. இவற்றின் பாவனைக்கு உள்ளாகி இருப்பவர்களில் பெரும்பகுதியினர் இளம் பராயத்தினராக இருப்பதும் மறைக்க முடியாத உண்மையாக உள்ளது.

இவ்வாறான நிலையில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளவர்களுக்கு சிகிச்சை அளிக்கவென வருடாவருடம் பெருந்தொகைப் பணத்தை செலவிட வேண்டிய நிலைக்கும் நாடு முகம்கொடுத்துள்ளது. இதனை சுகாதாரத் துறைத் தரவுகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இப்போதைப்பொருட்களின் பாவனை காரணமாக பல குடும்பங்கள் சிதைந்து சின்னாபின்னமாகியுள்ளதோடு, வறுமையின் பிடிக்குள்ளும் வலிந்து தள்ளப்பட்டுள்ளன. பல குடும்பங்கள் தெருவுக்கும் வந்துள்ளன. இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக எடுத்து நோக்கும் போது போதைப்பொருட்களின் மூலம் தனிநபருக்கோ, சமூகத்திற்கோ, நாட்டுக்கோ எந்த நன்மையுமே கிடைப்பதில்லை என்பது தெளிவாகிறது.

அப்படி இருந்தும் போதைப்பொருட்களை விற்பனை செய்பவர்களதும் பாவிப்பவர்களதும் எண்ணிக்கை குறைந்ததாக இல்லை.

இவ்வாறான சூழலில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு சமூக ஆலோசனை வழங்கும் வேலைத்திட்டமொன்று கொழும்பு வடக்கு பிரிவில் மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோனின் ஏற்பட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ள 1200 பேருக்கு சேவைகள் வழங்கப்பட உள்ளன.

போதைப்பொருள் குற்றங்களில் இருந்து இளம் பராயத்தினரை விடுவிப்பதை இலக்காகக் கொண்டுதான் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்திய இவ்வாறான திட்டங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட வேண்டும். அதன் தேவை பரவலாக உணரப்பட்டுள்ளது. அப்போதுதான் போதைப் பொருள் குற்றங்களில் இருந்து இளம் பராயத்தினர் உள்ளிட்ட முழு நாட்டு மக்களையும் விடுவிக்கக் கூடியதாக இருக்கும்.

இன்றைய இளம் பராயத்தினர்தான் நாளை நாட்டையும் சமூகத்தையும் நிர்வகிக்கக் கூடியவர்களாவர். அவர்கள் மத்தியில் சமீப காலமாக போதைப்பொருள் குற்றங்கள் வேகமாக அதிகரித்து வருகின்றன. அவ்வாறு ஏற்பட்டு வருகின்ற அதிகரிப்பு நாட்டின் நாளைய பொறுப்புக்களை ஏற்க ஆளில்லாத நிலையைத் தோற்றுவித்து விடுமோ என்ற அச்சநிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நலன்களை கருத்தில் கொண்டு போதைப்பொருள் குற்றங்களை கட்டுப்படுத்தி, இளம்பராயத்தினரை மீட்டெடுப்பதில் ஒவ்வொருவரும் கூடுதல் அக்கறை காட்ட வேண்டும். அதுவே நாட்டை உண்மையாக நேசிக்கும் அனைத்து பிரஜைகளதும் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# வடக்கையும் தெற்கையும் இணைக்கும் உறவுப்பாலம்

நாட்டின் வடக்கையும் தெற்கையும் ஒன்றிணைத்து நல்லிணக்கம், அறிவு மற்றும் செயல் திட்டங்கள் பரிமாறல் வேலைத்திட்டத்தின் நோக்கில் கொழும்புக்கு விஜயம் செய்த வடமாகாணத்தின் யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் உள்ளிட்ட உள்ளூராட்சி சபைகளின் மக்கள் பிரதிநிதிகளுக்கு மொரட்டுவை மாநகரசபையிலும் பெருவரவேற்பு அளிக்கப்பட்டது.

மொரட்டுவை மாநகரசபைக்கு வருகை தந்த யாழ்ப்பாணம்மேயர் வி.மணிவண்ணன்,யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் ஜே.சீலன் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுக்கு மொரட்டுவை மேயர் சமன்லால் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. மாநகரசபை உறுப்பினர்களும் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மொரட்டுவை மாநகராட்சியின் பிரிவுகளைச் சுற்றிப் பார்வையிட்ட வடமாகாண உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள் இந்த மாநகரசபையின் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பான சிறப்பு வேலைத் திட்டத்தையும் விஷேடமாகப் பார்வையிட்டனர். அத்துடன் மேற்படி திட்டம் சம்பந்தமாகவும் கேட்டறிந்து கொண்டனர்.

மொரட்டுவை மாநகரசபையின் கழிவுப்பொருள் முகாமைத்துவம் சம்பந்தமான களஆய்வு நிகழ்வில் USAID அமைப்பின் சார்பில் அதன் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பணிப்பாளர் நிலங்கா விஜயநாயக, திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிபுணர் ஜே.ஏகநாயக்க, கொள்ளளவு முகாமையாளர் ஏ. சண்முகராஜா உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மொரட்டுவை மாநகராட்சி மன்றத்துக்கான விஜயத்தின் ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணம் மேயர் வி.மணிவண்ணன் மற்றும் மொரட்டுவை மேயர் ஆகியோரினால் மாநகராட்சிமன்ற வளவில் மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன. வடக்கு மற்றும் மொரட்டுவை பிரதேசங்களைப் பிரதிபலிக்கும் வகையில் ஞாபகார்த்த பரிசில்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

மொரட்டுவை மேயருக்கு மத்திய அரசினால் கிடைக்கப் பெற்ற நிதி ஒதுக்கீட்டின் மூலம் மொரட்டுவை தொகுதியில் கடற்றொழிலில்ஈடுபடும்மக்களுக்கானசைக்கிள் வண்டி வழங்கும் நிகழ்வும் வடமாகாண உள்ளூராட்சி உறுப்பினர்களின் விஜயத்தின்போது சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது. யாழ்ப்பாண மேயர் மணிவண்ணனும் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு பைசிக்கிள் வண்டிகளை கையளித்து வைத்தார்.



## மொரட்டுவை மாநகரசபைக்கு வருகை தந்த வடமாகாண உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கு அன்பான வரவேற்பு





வடமாகாண உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நல்லெண்ணம், பல்வகை அறிவுப் பரிமாற்றம மற்றும் கள ஆய்வு விஜயம் மாகாணங்களின் மக்களை ஒன்றிணைக்கும் காரணியாகவும் அமையும். இந்த முறைமை மாற்றம் செயற்பாட்டுக்கு (System Change) முன்மாதிரியாக அமைவதற்கு பூரண ஒத்துழைப்பு நல்கும் மொரட்டுவை பிரதேச பிரஜைகளுக்கு தனது கௌரவமான நன்றிகளைத் தெரிவிப்பதாக மொரட்டுவை மேயர் இந்த விஜயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

எம்.எஸ்.எம்.முன்தஸிர்...
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# தவறான தகவல்களை நம்பி வெளிநாட்டு தொழிலுக்கென செல்வோரின் வேதனைகள்!

உண்மைக்குப் புறம்பாகத் தெரிவிக்கப்படுகின்ற தகவல்களின் அடிப்படையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் செல்வோர் சந்திக்கின்ற துன்பங்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொறுப்புக் கூறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தவறான தகவல்களின் அடிப்படையில் குறிப்பாக சுற்றுலா, கல்வி போன்ற விசா மூலம் வெளிநாடு செல்வோர் மற்றும் வேலைவாய்ப்புகளுக்கென வெளிநாடு செல்பவர்கள் போன்றோர் தங்களது தொழிலில் சந்திக்கின்ற சிக்கல்கள் குறித்து பணியகம் தலையிட முடியாத நிலைமை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது .

ஆகவே, வெளிநாடு செல்லும்அனைவரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக வழிகாட்டல்களுக்கு இணங்கியவாறு நடந்து கொள்வது மிக முக்கியம் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் மகேந்திர குமாரசிங்க வலியுறுத்தியுள்ளார்.

கண்டி மாவட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் உயர்கல்வியை எதிர்பார்த்திருப்போரின் நன்மை கருதி, கண்டி மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் மகேந்திர குமாரசிங்க குறிப்பிட்டதாவது:

## பணியகம் பொறுப்புக் கூற முடியாது என்கிறார் தலைவர் மகேந்திர குமாரசிங்க





வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் என்பது ஒரு வெளிநாட்டு முகவரோ அல்லது நிலையமோ அல்ல, தொழிலாளர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் ஓர் அரச நிறுவனமாகும். சுற்றுலா அல்லது உயர்கல்விக்காக விசா பெற்று நாட்டை விட்டு வெளியேறும் சிலர் முழுநேர வேலைகளில் ஈடுபட்டு வருவதாக அறிய வருகின்றது. இவ்வேளையில் ஏற்படும் சட்டச் சிக்கல்களில் எமது அலுவலகம் தலையிட முடியாது. சுற்றுலா அல்லது கல்வி விசாக்கள் தொடர்பாக எந்த சட்ட பூர்வ கடமையும் எமக்கு இல்லை.

மேலும் மத்தியகிழக்கில் மட்டும் பணிப்பெண்களுக்கான வேலைகள் காணப்படவில்லை. ஜேர்மனி, அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் பல்வேறு தொழில் துறை சார்ந்த வேலைவாய்ப்புகள் இருக்கின்றன.

பங்களாதேஷ், இந்தியா, நேபாளம் போன்ற நாடுகளுடன் இலங்கை போட்டியிட வேண்டியுள்ளது. மொழிஅறிவு, தொழில்திறன், அனுபவம், திறன்கள் மட்டுமின்றி ஒழுக்கமும் மிக முக்கியம். ஜப்பான் போன்ற நாடுகளில் நேர்காணல்களின் போது கூட வணக்கம் சொல்லும் மரியாதையைக் கூட அவதானிக்கின்றனர். இவ்வாறான அறிவினையை கூட நாம் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது".

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கோப் குழுவின் தலைவரும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் பண்டாரவின் யோசனையின் அடிப்படையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் கண்டி மாவட்ட செயலகம் ஆகியன இணைந்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தன.

இந்நிகழ்வில் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார, கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னக்கோன், மேலதிக மாவட்ட செயலாளர் உத்பல ஜயரத்ன, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மத்திய மாகாண பொதுமுகாமையாளர் எஸ்.யாப்பா ஆகியோர் கலந்து கொண்டனர்.

எம்.ஏ.அமீனுல்லா...

# மருதமுனையில் களைகட்டிய கல்முனை பிரதேச செயலக கலை, கலாசார இலக்கிய விழா

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையுடன் கல்முனை பிரதேச செயலகம் மற்றும் கலாசார அதிகார சபை இணைந்து நடத்திய 'கல்முனை பிரதேச கலை இலக்கிய விழா_2022' அண்மையில் மருதமுனை கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது.

கல்முனை பிரதேச செயலக கலாசார அதிகார சபையின் அதிகாரபூர்வ தலைவரும், கல்முனை பிரதேச செயலாளருமான ஜே.லியாகத் அலி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார்.

அத்துடன் மாவட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ரீ.எம்.றிம்ஸான், பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றம்ஸான், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ், கலாசார அதிகார சபையின் தலைவர் ஏ.எம்.பறக்கத்துள்ளாஹ், தலைமைக் கிராம உத்தியோகத்தர் யூ.எல்.பத்றுத்தீன் ஆகியோருடன் ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர் ஏ.எச்.ஏ.ழாஹிர், எம்.என். சுகைப் ரூமி, எஸ்.தஸ்தக்கீர், எஸ்.எல்.ஜெமீல், இம்திஸா ஹஸன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.ஜாபிர், ஏ.ஆர்.எம்.றிஸாட் ஆகியோர் அனுசரணையாளர்களாகக் கலந்து கொண்டனர்.



பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எம்.எச்.பவுசுல் ஹிபானாவின் நெறிப்படுத்தலில் பிரதம அதிதி, விஷேட அதிதிகள், சிறப்பு அதிதிகள் மற்றும் அதிதிகள் மாலை அணிவித்து பாரம்பரிய பொல்லடி கலாசார நிகழ்வுடன் வரவேற்கப்பட்டனர். மேலும் கிறாத் மற்றும் தேசிய கீதத்துடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இங்கு பொல்லடி,ஹஸீதா, கவிதை, பாடல், பேச்சு மற்றும் ஜீனாராஜ் குழுவினரின் 'காளிக்கோடு' நாடகம், கவிதாயினி மசூறா சஹுறுதீனின் தலைமையில் கவியரங்கு போன்ற கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன.

இங்கு பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டி நிகழ்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பங்குபற்றிய ஏனையோருக்கும் அதிதிகளால் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. கல்முனை பிரதேச செயலக கலாசார அதிகார சபையின் செயலாளர் கவிஞர் ஆசிரியர் எம்.எம்.வஜிலி, ஊடகவியலாளர் ஏ.எல்.எம்.ஷினாஸ் ஆகியோர் நிகழ்வை தொகுத்து வழங்கினார்கள். நிகழ்வில் கலைஞர்கள்,மாணவர்கள்,மற்றும் பெற்றோரும் கலந்து கொண்டனர்.

பி.எம்.எம்.ஏ.காதர்...
(மருதமுனை தினகரன் நிருபர்)

# இந்தியாவின் பலத்தை உலகெங்கும் நிரூபிக்க கிடைத்துள்ள வாய்ப்பு




**ஜி20 நாடுகளின் தலைமைப் பதவியை இந்தியா ஏற்றிருப்பது, நாட்டின் பலத்தை உலகம் முழுவதும் வெளிப்படுத்த ஒரு தனித்துவமான வாய்ப்பு என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.**

ஜி20 நாடுகளின் உச்சிமாநாட்டை சிறப்பாக நடத்துவது தொடர்பாக டெல்லியில் சமீபத்தில் இடம்பெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டத்தில் தலைமையேற்று உரையாற்றுகையிலேயே மோடி இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜி20 உச்சிமாநாட்டுக்கான நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பதில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஒத்துழைப்பு அவசியம் எனவும் இதன் போது அவர் வலியுறுத்தினார்.

அத்துடன், இந்த மாநாட்டின் மூலம் வழக்கமான பெரிய பெருநகரங்களுக்கு அப்பால் இந்தியாவின் சில குறிப்பிட்ட பகுதிகளை உலகுக்கு காட்சிப்படுத்த முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

சர்வதேச அளவில் வலுவான கூட்டமைப்பாகக் கருதப்படும் ஜி20 நாடுகளின் உச்சி மாநாடு அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் 9, 10ஆம் திகதிகளில் இந்தியாவில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது

அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் அமித்ஷா, ராஜ்நாத் சிங், நிர்மலா சீதாராமன், ஜெய்சங்கர், பியூஷ் கோயல், பிரகலாத் ஜோஷி, பூபேந்தர் யாதவ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி மற்றும் பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்கள், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே உட்பட பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர

கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி "இந்தியா ஏற்றுள்ள பதவி முழு நாட்டிற்கும் சொந்தமானது. இன்று இந்தியா மீது உலகளாவிய ஆர்வமும் ஈர்ப்பும் நிலவுகிறது. ஆண்டு முழுவதும் நடைபெறும் நிகழ்வுகளின் போது ஏராளமான பார்வையாளர்கள் இந்தியாவுக்கு வருவார்கள். ஜி20 கூட்டங்கள் நடைபெறும் இடங்களின் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கும் உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் உள்ள வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார்.

கூட்டம் நிறைவடைந்த பின்னர் அதில் கலந்து கொண்ட மு.க.ஸ்டாலின், ஜி.கே.வாசன், மல்லிகார்ஜுன கார்கே, மம்தா பானர்ஜி, நவீன் பட்நாயக், அரவிந்த் கெஜ்ரிவால், ஜெகன் மோகன் ரெட்டி, சீதாராம் யெச்சூரி, டி.ராஜா, சந்திரபாபு நாயுடு உள்ளிட்ட தலைவர்களுடன் பிரதமர் மோடி உரையாடி மகிழ்ந்தார்.





## இந்தியாவின் முக்கியத்துவத்தையும், பொருளாதாரத்தையும் உயர்த்துவதற்கு ஜி20 மாநாடு வழிவகுக்கும்

1999 ஆம் ஆண்டு ஜி20 கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு முதன்மையாகப் பொருளாதார மாற்றங்கள், நிதி நெருக்கடி உள்ளிட்ட விஷயங்களைக் கவனித்துச் செயல்பட்டு வருகிறது. 19 நாடுகள் மற்றும் ஐரோப்பிய யூனியன் இதில் உறுப்பினர்களாக இருக்கின்றன. பொருளாதாரத்தைக் கடந்து காலநிலை மாற்றம், உலகளாவிய கடன், நாடுகளுக்குத் தேவையான மின் ஆற்றல் தொடர்பான விவாதங்களும் இந்தக் கூட்டமைப்பால் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக, ஒவ்வோர் ஆண்டும் உறுப்பினராக இருக்கும் ஒரு நாடு தலைமை தாங்கி இந்தக் கூட்டமைப்பின் உச்சிமாநாட்டை வழிநடத்திச் செல்லும். அந்த வகையில் இந்தாண்டு 17 ஆவது மாநாட்டை இந்தோனேசியா நடத்தி முடித்திருக்கிறது.

அடுத்த ஆண்டுக்கான மாநாட்டுக்கு இந்தியா தலைமை தாங்கவிருக்கிறது. நடந்து முடிந்த உச்சிமாநாட்டில் ஜி20 தலைமை இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் அடையாளபூர்வமாக ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதன் பிறகு 2022 டிசம்பர் 1 ஆம் திகதி ஜி20 தலைமையை இந்தியா முறைப்படி ஏற்றுக் கொண்டது. தலைமை ஏற்கப் போவதால் ஜி20 உறுப்பு நாடுகள் மத்தியில் இந்தியாவின் மதிப்பு உயர்ந்திருக்கிறது. சமமான மற்றும் நிலையான வளர்ச்சி, பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு, தொழில்நுட்பம் சார்ந்த மேம்பாடு, காலநிலை நிதி உதவி, உலகளாவிய உணவு பாதுகாப்பு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு என இவை அனைத்தும் இந்தியாவுக்கு ஜி20 மாநாட்டில் இலக்குகளாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

மேலும், உறுப்பு நாடுகளிடையே நிலவும் பிரச்சினைகளை சுமுகமாக முடித்து, கூட்டமைப்பு நாடுகளை ஒற்றுமையாக வைத்து, வழிநடத்துவதும் இந்தியாவின் பொறுப்புகளில் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

உலக நாடுகள் மத்தியில் இந்தியாவின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த நிலையை அடைய இந்தியா மேற்கொண்ட முக்கிய நடவடிக்கைகள் ஏராளம்.

ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் ரஷ்யா_உக்ரைன் போருக்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளால் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அப்போது நடத்தப்பட்ட வாக்கெடுப்பைப் புறக்கணித்து நடுநிலை வகித்தது இந்தியா. அமைதி ஏற்படப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனக் கூறி பிரச்சினையிலிருந்து விலகி நின்றது. இந்தியா, உக்ரைனுக்கு ஆதரவளிக்காமலிருந்தது சர்ச்சையைக் கிளப்பியது. ஆனால் அரசியல் வல்லுநர்கள் பலரும், `ரஷ்யா_இந்தியா நட்பு நாடுகளாக இருந்து வரும் சூழலில் அதற்கு எதிராக இந்தியா வாக்களிக்க விரும்பவில்லை' எனக் கூறினர்.

இந்த முடிவு அமெரிக்கா_இந்தியா இடையிலான உறவை விரிசலடையச் செய்யும் எனக் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், நடந்து முடிந்த உச்சிமாநாட்டில் அமெரிக்க_இந்திய உறவு சீராக இருப்பது உறுதியானது.

பொருளாதாரத் திறன், எதிர்காலத் திட்டமிடல், பிற நாடுகளுக்குப் பொருளாதார உதவி, பாதுகாப்பு, செல்வாக்கு ஆகியவற்றின் அடிப்படையில் உலகில் சக்திவாய்ந்த நாடுகள் பட்டியலில் இந்தியா 4 ஆவது இடத்தில் இருக்கிறது. கொரோனா பொதுமுடக்கம் உள்ளிட்ட பிரச்சினைகளைக் கடந்து இந்தியா பொருளாதார முன்னேற்றம் அடைந்திருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு 11 ஆவது இடத்திலிருந்த இந்தியா, தற்போது பொருளாதாரத்தில் 5 ஆவது இடத்துக்கு முன்னேறியிருக்கிறது. உலகில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக இந்தியா விளங்குகிறது.

உலக நாடுகள் மத்தியில் இந்தியாவின் மதிப்பு கூடியிருக்கிறதா என்பது தொடர்பாக அரசியல் விமர்சகர் ரமேஷ் சேதுராமன் கருத்துத் தெரிவிக்கையில் "இந்தியா கொரோனா காலத்திலும் தன் பொருளாதாரத்தின் நிலையைக் கடந்து ஏனைய நாடுகளுக்கு மருந்துகளை அளித்தது. இதனால், உலக அளவில் இந்தியா முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. அதேபோல் இந்தியாவின் மக்கள்தொகை என்பது உலக நாடுகளுடன் கணக்கிடும்போது, அதிக நுகர்வோர்கள் கொண்டது. அதனால், எது சார்ந்த தொழிலாக இருப்பினும் அனைவரின் முதல் தேர்வாக இந்தியாவே இருக்கிறது. மற்றொரு மக்கள்தொகை அதிகம் கொண்ட சீன நாட்டில் தொழில் தொடங்குவதில் இருக்கும் கட்டுப்பாடுகளால் உலக நாடுகளுக்கு மத்தியில் இந்தியாவின் இருப்பு அவசியமாகிறது" என்றார்.

கொரோனா தடுப்பூசியைத் தயாரிப்பதில் முதல் நாடாக இருந்தது இந்தியா. இந்திய நாட்டின் தேவையைக் கடந்து, 98 இற்கும் அதிகமான நாடுகளுக்குத் தடுப்பூசி வழங்கப்பட்டது. குறிப்பாக, பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் வளரும் நாடுகளுக்குத் தடுப்பூசிகளை அனுப்புவதில் இந்தியா கவனம் செலுத்தியது. இவற்றில் பங்களாதேஷ், மியன்மார், நேபாளம், பூட்டான், மாலைதீவு, பிரேசில், இலங்கை, மொராக்கோ, தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான், மெக்ஸிகோ, காங்கோ, நைஜீரியா ஆகிய நாடுகள் குறிப்பிடத்தக்கவை.

பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்த போதும் இந்தியா மற்ற நாடுகளுக்குச் செய்த உதவிகள் உலக நாடுகளைத் திரும்பிப் பார்க்க வைத்தன. இதனால்தான் உலக அரங்கில் இந்தியாவின் குரல் ஓங்கி ஒலிக்கிறது.

இதேவேளை ஜி20 கூட்டமைப்புக்கு எதிர்வரும் 2024ஆம் ஆண்டு நவம்பர் 30ஆம் திகதி வரை இந்தியா தலைமை வகிக்கும். ஜி20 நாடுகள் கூட்டமைப்பில் கடந்த 1999ஆம் ஆண்டு இந்தியா உறுப்பினராயியது. இந்தக் கூட்டமைப்பில் கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து நேரடியாகப் பங்கேற்று வருகிறார்.

இந்தியா, அமெரிக்கா, சீனா, ரஷ்யா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஜெர்மனி, கனடா, பிரேஸில், தென்னாபிரிக்கா, தென்கொரியா, ஆர்ஜென்டீனா, மெக்சிகோ, பிரான்ஸ், இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், துருக்கி, சவூதி அரேபியா, ஐரோப்பிய யூனியன் ஆகியவை ஜி20 கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ளன.

## உலகில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக இந்தியா



## பிரதமர் நரேந்திர மோடியின் கரங்களில் G20 தலைமைத்துவம்

**எஸ். சாரங்கன்...**

# ரஷ்ய தேசிய முதலீட்டு கைத்தொழில் வங்கியுடன் கைகோர்த்த மக்கள் வங்கி

## இலங்கைக்கு இலகுவாக பணம் அனுப்புவதற்கு வசதி

**ரஷ்யாவில் இருந்து இலங்கையிலுள்ள கணக்குகளுக்கு திறன்மிக்க மற்றும் சௌகரியமான வழியில் நிதிப்பரிமாற்றங்களைச் செய்வதற்கு புதுமையான வழியில் பணம் அனுப்பும் பொறிமுறையை எளிதாக்குவதற்காக, மக்கள் வங்கி ரஷ்யாவில் உள்ள தேசிய முதலீட்டு கைத்தொழில் வங்கியுடன் அண்மையில் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டது.**

இந்த ஏற்பாட்டின்படி, இலங்கையில் உள்ள பயனாளிகள், குறிப்பாக சேவை வழங்குநர்கள், ஏற்றுமதியாளர்கள் போன்றோர் நிதியை விரைவாகவும், செலவின் அடிப்படையில் திறன்மிக்க வழியிலும் பெற்றுக் கொள்ள முடியும். மிக முக்கியமாக, ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு தாங்கள் வருகை தருவதற்கு முன்னர் இலங்கையில் மக்கள் வங்கியில் உள்ள ஒரு கணக்கிற்கு, ரஷ்யாவில் உள்ள தேசிய முதலீட்டு தொழில்துறை வங்கியின் ஊடாக இடைநிலை வங்கியின் தொடர்பு இல்லாமல் பணத்தை அனுப்பி வைக்க முடியும்.

இலங்கைக்கு வந்ததும், சுற்றுலாப் பயணிகளுக்கு டெபிட் அட்டைகள் வழங்கப்படும், அவை அனுப்பப்பட்ட நிதியிலிருந்து தங்குதடையின்றி கொடுப்பனவுகளை செலுத்தப் பயன்படும்.

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைத் தலைவரான சுஜீவ ராஜபக்ஷ இக்கூட்டாண்மை தொடர்பில் கருத்து வெளியிடுகையில், 'ரஷ்ய கூட்டமைப்பில் உள்ள இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து தேசிய முதலீட்டு தொழில்துறை வங்கியுடன் இணைந்து இந்த ஏற்பாட்டை மக்கள் வங்கி மேற்கொள்ள முடிந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த கொடுப்பனவுத் தளத்தின் அறிமுகமானது, இலங்கைக்கு வருகை தரும் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளுக்கு தமது சுற்றுப்பயணத்தின் போது சிரமமின்றி பணம் செலுத்துவதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். 818 ஏ.டி.எம் மையங்கள், 315 பண வைப்பு மையங்கள் மற்றும் 743 கிளைகள் கொண்ட எமது சொந்த வலையமைப்பு, நாடு முழுவதும் அவற்றை எளிதாக அடையப்பெற இடமளிக்கும். இது உள்நாட்டு சுற்றுலா தொடர்பான வணிகங்களின் வளர்ச்சிக்குப் பங்களிக்கும்" என்று குறிப்பிட்டார்.

மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பொது முகாமையாளருமான ரஞ்சித் கொடித்துவக்கு இது தொடர்பில் தெரிவிக்கையில், "ற்றுலாப் பயணிகள் அல்லது இலங்கைக்கு நிதியை அனுப்ப விரும்பும் எந்தவொரு தரப்பினருக்கும் வங்கிக் கட்டணங்களை கணிசமாகக் குறைக்கும் வகையில் இந்த வசதியை வழங்க மக்கள் வங்கியால் முடியும். இந்த ஒத்துழைப்பின் முக்கிய நோக்கமானது, முறையான நிதியியல் வழிமுறையின் மூலம் இலங்கைக்கு பெறுமதியான அந்நியச் செலாவணி வரவை அதிகரிப்பதாகும். ரஷ்ய சுற்றுலாப் பயணிகளுக்கான சிறந்த மற்றும் வேகமாக வளர்ந்து வரும் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக இலங்கையின் ஈர்ப்பினை மேம்படுத்துவதுடன், நாட்டின் அந்நிய செலாவணி மட்டத்தை மேம்படுத்துவதற்கு இந்த முயற்சி பங்களிக்கும்" என்று குறிப்பிட்டார்.





# சாதனையாளர்களுக்கு கௌரவம் வழங்கும் பணியில் காயல் ஷேக் முகமதுவின் புதல்வர்

**மறைந்த இஸ்லாமிய பாடகர் சங்கநாத செம்மல் மறைந்த காயல் ஏ. ஆர். ஷேக் முகமது அவர்களின் மகன் டொக்டர் ரஸ்மிருமி ஆவார். இவர் மறைந்த இந்தியப் பிரதமர் நேரு அவர்களால் உருவாக்கப்பட்ட 'பீப்பிள் ஃபோரம் ஒஃப் இந்தியா' மற்றும் 'நேஷனல் ஆக்டிங்' தலைவராகப் பதவி வகித்து வருகிறார்.**

இந்தியா முழுவதும் இதன் மூலம் தன்னுடைய சமூக சேவைகளை கடந்த எட்டு வருடங்களாக அவர் செய்து வருகிறார். சென்னையில் ஏற்பட்ட வெள்ளத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, உடை மற்றும் மருத்துவ உதவிகள் என்று பல்வேறு உதவிகளை வழங்கினார். தொடர்ந்தும் பல சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்.

சர்வதேச சாதனையாளர்கள் அறக்கட்டளை என்ற ஒரு அறக்கட்டளை நிறுவனத்தைத் தொடங்கி சமூகத்தில் அடையாளம் காணாத இளம் சாதனையாளர்களை மற்றும் முதுமை நிறைந்த சாதனையாளர்களை அடையாளம் கண்டு அவர்களை வெளிச்சத்துக்கு கொண்டு வருகிறார்.

"இந்தச் சேவையை உலகம் முழுவதும் நாம் வழங்கிக் கொண்டிருக்கின்றோம். அவர்களுக்கு விருதுகள் வழங்கி அவர்களை வெளிச்சத்துக்கு கொண்டு வந்து கொண்டிருக்கிறோம். பல்வேறு துறையைச் சார்ந்த சாதனையாளர்களுக்கு மட்டுமில்லாமல் கஷ்டப்பட்ட மக்களுக்கு உதவித் தொகை மருத்துவம் உணவு உடை போன்றவைகளையும் இந்த அறக்கட்டளை மூலம் நாங்கள் செய்து கொண்டு வருகின்றோம்" என்று அவர் தெரிவித்தார்.

"சமீபத்தில் ஏ. ஆர். எஸ் இன்டர்நேஷனல் ஆர்கெஸ்ட்ரா என்ற ஆர்கெஸ்ட்ரா வை தொடங்கி திறமையுள்ள இளம் பாடகர், பாடகிகளை உருவாக்கி வருகிறோம். சுமார் ஏழு பல்கலைக்கழகங்கள் என்னை அழைத்து கௌரவ முனைவர் பட்டம் வழங்கியுள்ளன. இந்தியா மட்டுமன்றி பல்வேறு நாடுகளுக்கு அழைக்கப்பட்டு 120 விருதுகளுக்கு மேல் எனக்கு கொடுக்கப்பட்டுள்ளன. கடந்த மாதத்தில் இலங்கைக்கு வந்திருந்தேன். அப்போது பல பாகங்களுக்கும் சென்று பல சாதனையாளர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவித்தோம்.

அடுத்த மாதம் இலங்கைக்கு வரவுள்ளேன். பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பல சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்க இருக்கின்றோம். அறக்கட்டளையின் சார்பாக 40 நாடுகளுக்கு மேல் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன".

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

**திருச்சி ஷாகுல் ஹமீது...**







உடப்பு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீபார்த்தசாரதி ப் பெருமாள் ஆலயத்தில் வருடாந்த கார்த்திகைத் தீபத்திருவிழா புதன்கிழமை (7)நடைபெற்றது. ஆலயத்தில் விஷேட பூஜையும், வசந்த மண்டபத்தில் சுவாமிக்கு அலங்காரப் பூஜையும், பின்னர் சுவாமி உள்வீதி, வெளி வீதி சுற்றியதுடன் ஆலய முன்றலில் சொக்கபனை கொளுத்தப்பட்டது. (உடப்பு குறூப் நிருபர்)

## யாழ். மண்ணில் "எழில், சுகந்தி"




யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் நாளை 15ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4:30 மணிக்கு எழில், சுகந்தி குறுந்திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இத்திரைப்படங்களின் தயாரிப்பாளர் சி.விமல்ராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.



அநுராதபுரம் திறப்பனை வகயாகுளம் பகுதியில் நாற்பது மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விவசாய வெளிக்கள பாடசாலையை, அண்மையில் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, மக்களின் பாவனைக்காக திறந்துவைப்பதையும் கலந்துகொண்ட பொதுமக்களையும் படத்தில் காணலாம். (படம்: அநுராதபுரம் தினகரன் நிருபர்)

## தபால் திணைக்களத்தை தனியார்...

கோரிக்கையை நடைமுறைப்படுத்துவது சாத்தியமற்றதெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

"தபால் திணைக்கள ஊழியர்களின் சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகளுக்கான செலவுகள் அதன் வருடாந்த வருமானத்தை விட அதிகம். 2021 ஆம் ஆண்டில், திணைக்களத்தின் வருமானம் 7.1 பில்லியன் ரூபாவாக இருந்தது, அதே சமயம் சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகளுக்கான செலவுகள் 12.8 பில்லியன் ரூபாவாக இருந்தது. இந்த வருடத்துக்கான திணைக்களத்தின் மொத்தச் செலவுகள் மாத்திரம் சுமார் 15 பில்லியன் ரூபாவாகும்" எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தபால் திணைக்களத்தை தனியார்மயமாக்குவதற்கு அரசாங்கம் எந்த முடிவையும் எடுக்கவில்லையென உறுதியளித்த அமைச்சர், இந்த இக்கட்டான தருணத்தில் சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகளை வழங்குவதில், அரசாங்கத்தின் கொள்கையை மீறுவதற்கு அமைச்சுக்கோ அல்லது தபால் திணைக்களத்திற்கோ முடியாதெனவும் தெரிவித்தார். பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள தபால் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்படமாட்டாதென, ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பல்பிட்ட தெரிவித்துள்ளார். வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்த பின்னரே பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றார்.

தற்போதைய நெருக்கடியின் கீழ், மேலதிக நேர கொடுப்பனவு தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்க முடியாது. இந்நிலையில் நேற்றைய தொழிற்சங்க நடவடிக்கை முற்றிலும் நியாயமற்றதென தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

"திணைக்களத்தில் 2,000 பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளது. அந்த வெற்றிடங்கள் அரசாங்கத்தின் ஒப்புதலுடன் கூடிய விரைவில் நிரப்பப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## போதைப்பொருள் பாவனையை...

எதிராக, நடவடிக்கை எடுப்பது அவசியம்.இதன் மூலமாகவே மாணவர்களைப் பாதுகாக்க முடியும்.ஒழுக்கமின்றி செயல்படும் மாணவர்களின் மாணவர் தகுதியை இரத்துச் செய்தல் போன்ற முடிவுகளும் எடுக்கப்படவுள்ளன.

அப்போதுதான், பயம் சந்தேகமின்றி பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கு கல்வி கற்க சந்தர்ப்பம் கிடைக்கும்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஸ்டான்லி விஜயசுந்தரவை கொலை செய்த சம்பவம் தொடக்கம் மாணவர்களால் பல்கலைக்கழக பேராசிரியர்கள் அறைக்குள் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட சம்பவங்கள் எமது நாட்டு சரித்திரத்தில் உள்ளன.

தற்போது அச்சரித்திரம் மீள உருவாகி வருகிறது. பல்கலைக்கழகத்தினுள் பாரியளவில் போதைப்பொருள் பயன்படுத்தப்படுவது தொடர்பாகவும் விரிவான ஆய்வுகளை நடத்தப்பட வேண்டும்.

பல்கலைக்கழக மாணவர்கள், கல்வி, மற்றும் கல்வி சாரா செயலணியினர் பயம், சந்தேகத்துக்கிடமின்றி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சூழலை உருவாக்கித் தருமாறு, பாதுகாப்பு அமைச்சரிடமும் மற்றும் சட்டத்துக்கு பொறுப்பான அனைத்து தரப்பினரிடமும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அமைச்சர் குணவர்த்தன அங்கு மேலும் தெரிவித்தார்.

நாட்டில் காணப்படும் பாரிய பிரச்சினை பொருளாதார பிரச்சினையே. போதைப்பொருள் பாவனை இன்று இரண்டாவது இடத்தில் உள்ளதாகக் கூறிய அமைச்சர் நாட்டின் எதிர்கால சந்ததியினரை போதைப் பொருள் அரக்கனிடமிருந்து மீட்பதற்கு அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்குமெனவும் தெரிவித்தார்.

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த...

50 கிலோ கஞ்சா எண்ணெய் அடங்கிய 88 கிலோ போதைப்பொருளை தமிழகத்தின் பரமகுடியில் பொலிஸார் பறிமுதல் செய்து, இருவரைக் கைது செய்துள்ளனர்.

சென்னையிலிருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக இவற்றை அனுப்பியது யார் என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே வேதாளை கடற்கரை வழியாக, இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தப்படவிருப்பதாக வருவாய் புலனாய்வு துறை அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து திங்கட்கிழமை இராமநாதபுரம் முதல் மதுரை வரை அதிகாரிகள் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது பரமக்குடியை அடுத்த சுங்கச்சாவடி அருகே வாகன சோதனையில் ஈடுபட்டபோது, சென்னையை சேர்ந்த கார் ஒன்றை தடுத்து நிறுத்தி விசாரணை செய்தனர்.

காருக்குள் இருந்தவர்கள் முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்ததால் சந்தேகமடைந்த புலனாய்வு அதிகாரிகள் காரை சோதனை செய்தனர். காரில் 88 கிலோ எடையுள்ள போதைப் பொருள் இருந்தது.

இதையடுத்து போதைப்பொருளையும், காரையும் பறிமுதல் செய்த அதிகாரிகள், காரிலிருந்த 2 பேரையும் இராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகத்திற்கு அழைத்து வந்து தீவிர விசாரணை நடத்தினர். விசாரணையில் மெத்தபெட்டமைன் என்ற கிரிஸ்டல் கற்கள் வடிவிலான ஐஸ் போதைப்பொருள் 38 கிலோவும், கஞ்சா எண்ணெய் 50 கிலோவும் இருந்தது உறுதி செய்யப்பட்டது.

இதுகுறித்து மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் தொடா'ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## தேசிய மீலாத்தின ஞாபகார்த்த...

புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு கொழும்பு 10, தபால் திணைக்கள கேட்போர் கூடத்தில் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இப்றாஹிம் அன்ஸார் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி முத்திரை வெளியிடும் நிகழ்வில், பிரதம அதிதியாக வெளிவிகார அமைச்சர் அலி சப்ரி கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், மதவிவகார அமைச்சின் செயலாளர் உட்பட உயரதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் மொஹமட் மற்றும் கல்விமான்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் இடம் பெறும் தேசிய மீலாத் விழாவின் போது அரசாங்கம் முஸ்லிம் சமூகத்தினை கௌரவிக்கும் விதத்தில் முத்திரை ஒன்றை வெளியிடுவதற்கு அனுமதித்துள்ளது.

அந்த வகையில் இம்முறை வெளியிடப்படும் முத்திரையில் ஜாமியா நளீமியா கலாபீடத்தின் முகப்புத் தோற்றம் பொறிக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இவ்வருட தேசிய மீலாத் விழா கடந்த ஒக்டோபர் மாதம் 09ஆம் திகதி பேருவளை ஜாமியா நளீமியா கலாபீட கேட்போர் கூடத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## சிறுநீரக மோசடி விவகாரம்...

அத்துடன் சிறுநீரக மோசடி வர்த்தகம் இடம்பெற்றதாக கூறப்படும் தனியார் வைத்தியசாலையின் நிர்வாகத்திடம் விரைவில் வாக்குமூலம் பதிவு செய்யப்படவுமுள்ளது.

இதனுடன் தொடர்புடைய பிரதான தரகர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். 41 வயதான இவர், கொழும்பு 14 கஜூமாவத்தை பகுதியைச் சேர்ந்தவரென தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுநீரகத்தை பணத்துக்காக வழங்குபவர்கள் மற்றும் பெற்றுக் கொள்ளுபவர்களை இணைக்கும் செயற்பாடுகளில் இவர் ஈடுபட்டு வந்துள்ளதாக தெரிய வருகிறது.

அத்துடன் வைத்தியசாலையின் பிரதான வைத்திய அதிகாரி உள்ளிட்ட 06 பணிப்பாளர்களுக்கு நீதிமன்ற அனுமதியின்றி வெளிநாடு செல்ல தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் சிறுநீரக வர்த்தகம் இடம்பெற்றதாக கூறப்படும் பொரளை கொட்டா வீதியிலுள்ள தனியார் வைத்தியசாலை நிர்வாகம் மீண்டும் ஒருமுறை அறிக்கை விடுத்து தெளிவுப்படுத்தியுள்ளது.

குறித்த வர்த்தகத்துடன் தமது வைத்தியசாலைக்கு தொடர்பில்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது, வைத்தியசாலையில் பல வருடங்களாக சிறுநீரக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படுவதாகவும் இதுவரை 1,200 சத்திரசிகிசைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி மன்ற தேர்தல்...

எஸ்.ஜி.புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை எதிர்வரும் (டிசம்பர்) 26 முதல் 30ஆம் திகதி வரையில் கோருவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து, உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் கட்டளைச் சட்டம் 2017 இன் விதிகளின்படி 2023 பெப்ரவரி பிற்பகுதியில் தேர்தல் நடத்தப்படும்.

வேட்புமனு தாக்கல் முடிந்து ஐந்து வாரங்கள் முதல் ஏழு வாரங்கள் வரை உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்ற அடிப்படையில் இந்த காலம் குறிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்கும் அரசாங்கத்தின் இரகசிய முயற்சிகள் பற்றிய ஊகங்களை நிராகரித்த எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல, தேர்தலை ஒத்திவைக்கும் அதிகாரம் நிறைவேற்று ஜனாதிபதிக்குக் கூட இல்லையென்று கூறினார். தேர்தல் ஆணைக்குழுவினால் நிறைவுறுத்தப்பட்ட 2022 வாக்காளர் பதிவேடு, எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பயன்படுத்தப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாவசிய பொருட்களின் விலை... (03ஆம் பக்கம் பார்க்க)

திறந்த சந்தையில் 410 ரூபாவாக இருந்த 01 கிலோ கோதுமை மா டிசம்பர் 1ஆம் திகதியாகும் போது லங்கா சதொச நிறுவனத்தின் விலை 265 ரூபாவாகக் குறைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், 280 ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலையை 229 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் சம்பா அரிசியின் விலையை 225 ரூபாவில் இருந்து 198 ரூபாவாகவும் குறைக்க சதொச நிறுவனத்தால் முடிந்ததாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் பாவனையாளர்களின் பாதுகாப்புக்காக சந்தைகளைக் கண்காணிக்குமாறும், சோதனைகளை நடத்துமாறும் பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் அளவை அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்துக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தர்.இதற்கு மேலதிகமாக, நியாயமான சந்தை முறைமையை நிறுவும் நோக்கில் 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்பட விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் தலைவர் உள்ளிட்ட முழுநேர உறுப்பினர்களின் தகுதிகளை இச்சட்டத்திருத்தத்தில் உள்ளடக்க எதிர்பார்த்திருப்பதாகவும், உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு எதிரான பாவனையாளர்களின் முறைப்பாடுளை விசாரிக்கும் முறையை வினைத்திறனாக்கும் பிரேரணைகள் இதில் உள்ளடக்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். மற்றும் வலுவான முறையில். புதிய சரத்துக்கள் உள்ளிட்ட திருத்தச்சட்ட மூலத்தை அடுத்த அமைச்சுசார் ஆலோசனைக் கூட்டத்தில் முன்வைக்கவிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இளைஞர்களை கூட்டுறவுத் துறைக்குள் ஈர்க்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்தும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இளம் தொழில்முயற்சியாளர்களைக் கண்டறிந்து அவர்களை உற்பத்தி செயல்முறைக்கு வழி நடத்தும் வகையில் நிவாரணத் திட்டங்களை கூட்டுறவுத் துறை மூலம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

## எதிர்கால நோக்கை... (03ஆம் பக்கம் பார்க்க)

மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக அடுத்த வருடம் புதிய சுற்றுலாக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்படும்.

பகிடிவதைகளை தடுப்பதற்கான ஒழுங்கமைக்கப்பட்ட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது அவசியம்.

பட்டதாரிகளுக்கு அரச வேலை வாய்ப்புகளை வழங்குவதில் பிரச்சினைகள் உருவாகியுள்ளன. புதிய தொழில் சந்தைக்கு ஏற்ற வகையில் பல்கலைக்கழக மாணவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் மற்றும் பயிற்சி நெறிகளை அறிமுகப்படுத்துவது அவசியம்.

பிராந்தியத்தின் கல்விக் கேந்திர நிலையமாக இலங்கையை, மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளது. இதன் மூலம் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் உள்ளிட்ட பிராந்திய நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி கற்கும் வாய்ப்பை வழங்க முடியும்.

குருநாகல் மாவட்டத்தில் மற்றுமொரு அரச பல்கலைக்கழகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என். ரணசிங்க மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, உபவேந்தர்கள், பீடாதிபதிகள் உள்ளிட்ட பலர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## மின் கட்டண நிலுவையை...

அவர் தெரிவித்தார்.

அமைச்சர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டால் அவர்களது உத்தியோகபூர்வ இல்லங்களை காலி செய்ய மூன்று மாத கால அவகாசம் வழங்கப்படுகின்ற போதிலும், சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் இடைக்காலத்தின் போது அத்தகைய வீடுகளுக்கான கட்டணங்களை செலுத்துவதில்லையெனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த முரண்பாடு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. செலுத்தப்படாத பட்டியல்களின் தொகை இலட்சக்கணக்கான ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ இல்லங்களின் செலுத்தப்படாத கட்டண பட்டியல்கள் மீதும் வட்டி சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதிக, எண்ணிக்கையிலான எம்.பி.க்கள் தங்கள் நிலுவைத் தொகையை செலுத்தவில்லையென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மின்சார கட்டணத்தை செலுத்தாத பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு, நோட்டீஸ் வழங்குவதற்கு சிலர், உயிருடன் கூட இல்லையென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதைக்கருதியே, புதிய பொறிமுறையொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும், இலங்கை மின்சார சபை சாத்தியமான இடங்களில் நிலுவைகளை வசூலிக்க பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 2,400 கிலோ கிராம்...

தமிழகத்திலிருந்து 2,400 கிலோ விரலி மஞ்சளை கடத்தி வந்து, விற்பனைக்காக கொண்டு சென்ற போதே, இவற்றை பொலிஸார் கைப்பற்றினர்.

இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது, ஆனைக்கோட்டைப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான வகையில் பயணித்த வாகனமொன்றை பொலிஸார் வழிமறித்து சோதனையிட்டனர். இதன்போது பெருந்தொகையான விரலி மஞ்சள் மூடைகள் மீட்கப்பட்டன. கைதான சந்தேக நபர்கள் இருவரும் சுதுமலைப் பகுதியை சேர்ந்தவர்களென தெரியவருகிறது.

இரண்டு, சந்தேக நபர்களையும் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆஜர் படுத்த மானிப்பாய் பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

## இலங்கை இந்திய கப்பல்...

'இலங்கை தம்பதிவ' யாத்திரையென அழைக்கப்படும் புத்தகாயா செல்லும் இலங்கை யாத்திரிகர்களுக்கும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்ளுக்கும் இந்த பயணிகள் கப்பல் சேவை பெரும் நிவாரணமாக அமையுமெனவும் அமைச்சர் வலியுறுத்தினார். பயணக் கட்டணம் குறித்து கப்பல் உரிமையாளர்கள் கூறுகையில், ஒரு பயணிக்கான கட்டணம் 60 அமெரிக்க டொலர் என்பதுடன் 100 கிலோ எடையுள்ள பொருட்களையும் எடுத்துச் செல்லலாமென்றும் தெரிவித்தனர்.

## மாநகர சபைகளாக ...

செலவிடாமல் ஒரு சில மாவட்டங்களில் காணப்படும் நகரங்களை மாநகர சபைகளாக தரமுயர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள கடந்த ஆகஸ்ட் (08) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அமைச்சரவையின் இந்த அங்கீகாரத்தை கருத்தில் கொண்டு, அம்பாறை மற்றும் மன்னார் ஆகிய இரண்டு நகர சபைகளிலும் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திப் பணிகளை இலகுபடுத்தும் பொருட்டு, இந்நகர சபைகளை, மாநகர சபைகளாக தரமுயர்த்துவதற்கு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரான பிரதமர் தினேஸ் குணவர்த்தன யோசனை சமர்ப்பித்திருந்தார். இந்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## யாழ் பலாலி அபிவிருத்திக்கு...

நிகழ்ச்சியிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அபிவிருத்திக்காக இலங்கை அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்த கோபால் பாக்லே, இந்தியா யாழ்ப்பாணம் மற்றும் இலங்கையின் பிற இடங்களுக்கிடையேயான நேரடி மற்றும் விரைவான விமானப் பயணங்கள், வர்த்தகம் மற்றும் சுற்றுலாவில் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றங்களை ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இது, இரு நாடுகளின் மக்களிடையே பாரம்பரிய உறவுகளை வலுப்படுத்துவதுடன் சிறிய மற்றும் நடுத்தர வணிகர்களுக்கும் பயனளிக்குமென்றும் தெரிவித்தார்.

## முகக்கவசம் அணிவது முகக்கவசம்...

இன்றைய சூழலில் சுவாச நோய்கள் மற்றும் வைரஸ் நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதால், பாடசாலை மாணவர்கள் தொடர்ந்தும் முகக் கவசம் அணிவது சிறந்ததென்று சிறுவர் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

'தற்போது நிலவும் குளிர் மற்றும் தூசி நிலை காரணமாக மாணவர்களுக்கு வைரஸ் காய்ச்சல் பரவும் அபாயம் காணப்படுகிறது.

எனவே மாணவர்கள் இன்னும் சில நாட்கள் அல்லது சில வாரங்களுக்கு முகக்கவசம் அணிந்து பாடசாலைக்குச் செல்வதே சிறந்தது. இன்புளுவன்ஸா போன்ற நோய்கள் இந்நாட்களில் பரவலாகக் காணப்படுகின்றன. எனவே, இது பாடசாலைகளிலும், தினப் பராமரிப்பு நிலையங்களிலும் விரைவாகப் பரவக் கூடும்.

குழந்தைகளுக்கு இருமல் அல்லது சளி இருந்தால், அவர்களை வீட்டில் வைத்திருங்கள். பாடசாலை செல்லும் மாணவர்கள் முடிந்தவரை முகக்கவசம் அணிவது மிகவும் சிறந்தது.' என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## முடிவுக்கு வந்தது தபால்...

இடமாற்றம் தொடர்பாக மேன்முறையீட்டு சபைக்கு தொழிற்சங்க பிரதிநிதிகளை நியமித்தல் சட்டபூர்வ இல்லை என்றாலும் நாம் ஒப்புதல் அளித்துள்ளோம். ஆட்சேர்ப்பு பற்றி தொழிற்சங்கங்களுக்கும் எனக்கும் இலக்குகளை நிறைவேற்றுவது தொடர்பாக சிரமங்கள் காணப்படுகின்றன . அதற்காக உள்வாரி ஆட்சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.வெளியிலிருந்துபுதிதாக ஆட்சேர்ப்பு அரச கொள்கைகளுக்கமைய இடம்பெறாது இதற்கு தேவையான அமைச்சரவை பத்திரம் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதென்றார்.

## வெளிநாட்டிலிருந்து பொதி... (03ஆம் பக்கம் பார்க்க)

பணம் வைப்பிலிடவோ? அல்லது வேறு வழிகளில் பணம் அனுப்பவோ? வேண்டாமென இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வு பிரிவு பொதுமக்களை கோரியுள்ளது. இது தொடர்பில் கிடைக்கும் தொலைபேசி அழைப்பு மற்றும் குறுந்தகவல் தொடர்பில் 0112 477 125 அல்லது 0112 477 504 என்ற இலக்கங்கள் ஊடாக நிதி புலனாய்வு பிரிவுக்கு அறியப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## இந்திய கடற்படை கப்பல்... (03ஆம் பக்கம் பார்க்க)

ஐ.என்.எஸ். சஹ்யாத்ரி கப்பல் மேற்கு கடல் பகுதியில் இலங்கை கடற்படையுடன் இணைந்து கடற்படை பயிற்சியை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிராந்திய கடற்படைகளுடனான இத்தகைய கடற்படை பயிற்சிகள், எதிர்காலத்தில் பொதுவான கடல் சார் சவால்களுக்கு முகம் கொடுக்கத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதாக அமைய உள்ளது.






மாவனல்லை சாஹிரா தேசிய பாடசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபவனி அதிபர் ஏ. முஹமட் நௌசாட் தலைமையில் இடம்பெற்றது.

(படங்கள்: மாவத்தகம தினகரன் நிருபர்)

# மூவின இளைஞர், யுவதிகளை உள்ளடக்கி விஷேட செயலமர்வு



பாலமுனை தினகரன் நிருபர்

மத சகவாழ்வை முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ், அம்பாறை மாவட்டத்தில் மூவின இளைஞர், யுவதிகளை உள்ளடக்கி விஷேட செயலமர்வு நடாத்தப்பட்டது.

'வன்முறைத் தீவிரவாதம்' எனும் தலைப்பில் நடாத்தப்பட்ட இச்செயலமர்வு (11) அக்கரைப்பற்று மெங்கோ கார்டன் தனியார் விடுதியில் இடம்பெற்றது.

தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் அட்டாளைச்சேனை பிரதேச சர்வ மத குழு மற்றும் றுகுனு லங்கா அமைப்பு ஆகியவை இணைந்து இச்செயலமர்வை நடாத்தின.

இச்செயலமர்வில் பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர்கள், இளைஞர் அமைப்புக்களின் பிரதி நிதிகள், சர்வ மத குழுவின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

றுகுனு லங்கா அமைப்பின் தலைவர் எம்.எஸ்.எம். ஜகுபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தேசிய ஒருமைப்பாட்டு உத்தியோகத்தர் பிரதீஸ் மற்றும் மௌலவி இல்ஹாம் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

வன்முறைத் தீவிரவாதத்தை தடுத்து, மத சகவாழ்வு, சமூக நல்லிணக்கம், இன ஒற்றுமையை ஏற்படுத்துவதில், இளைஞர், யுவதிகளின் பங்களிப்பு தொடர்பிலும் இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது.

# மருதமுனையில் கடலரிப்பை தடுக்கும் வேலைத்திட்டம்

பெரியநீலாவணை விசேட நிருபர்



மருதமுனையில் கடலரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், மருதமுனைக் கடற்கரையில் கடலரிப்பைத் தடுக்கும் நோக்கில் மண் மூடைகளைக் கட்டி தற்காலிக தடுப்புச் சுவர்களை இடும் நடவடிக்கையிலும் ஜியோ டெக்ஸ் கார்ப்பட் விரிப்புகளை இடுவதிலும் கரையோர பாதுகாப்பு திணைக்களம், கல்முனை பிரதேச செயலகம், கல்முனை மாநகர சபை, சிவில் சமூகத்தினர், மக்கள் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் வங்களா விரிகுடாக் கடற்பரப்பில் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தையடுத்து, மருதமுனை கடற்கரையில் கடலரிப்பு ஏற்பட்டதுடன், தென்னை மரங்களும் முறிந்து விழுந்துள்ளன. மேலும், மருதமுனை பிரதேசத்தின் அடையாளமாகக் காணப்பட்ட 'லைட் ஹவுஸ்' கடல் அலையினால் சேதமடையும் அபாயத்தில் காணப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்குச் சென்ற கரையோரம் பேணல் பாதுகாப்பு திணைக்களத்தின் கிழக்கு மாகாண பிரதம பொறியியலாளர் எம்.துளசிதாசன் முயற்சியினால் கடலரிப்பை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.





கண்டி பூரணவத்தை லைட் ஹவுஸ் தேவாலயத்தின் நத்தார் கெரோல் கீதம் போதகர் வணபிதா கொட்வின் சிவராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் விசேட போதகராக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த வணபிதா டேவிட் பிரேங்கலின் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

# அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச உணவு விழாவில் இலங்கைக்கு பாராட்டு



அமெரிக்காவில் இயங்கும் இஸ்லாமிய பிரசார (தஃவா) அமைப்பு நடாத்திய சர்வதேச உணவு விழாவில், இலங்கையின் உணவுப் பண்டங்களும் பரிமாறப்பட்டன. இந்நிகழ்வில் "இர்விங்" நகர மேயர், கலந்துகொண்டு இலங்கை உணவுகளை உட்கொண்டார்.இதில் கருத்து தெரிவித்த அவர்,முதற்தடவையாக இலங்கை உணவுகளை சுவைத்து, ருசியை உணர்ந்ததாகத் தெரிவித்தார்.அக்கரைப்பற்றிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் ஆதம்லெவ்வை ஔபர் உட்பட இலங்கையர் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம் : 4/3/8/ඉ.මා.වසා./දි-II

காணி அமைச்சின் இல.:4-3/3/2017/NRD/402.

கீழ்க்காணும் உப அட்டவணையில் குறிப்பிடப்படும் காணித் துண்டுகள் ஒரு பொதுத் தேவைக்காக அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இந்த காணித்துண்டுகள் தொடர்பாக காணி எடுத்தற் சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழ் உரிமைகள் குறித்த வினவல் நடாத்தப்படும் திகதி ஆரம்ப உரிமை கோருவோருக்கு தனித்தனியாக அறிவிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம்29ம் திகதியின் 2303/53 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் 111 ஆம் பகுதியைப் பார்க்கவும்.

| | |
|---|---|
| மாகாணம் | : மத்திய மாகாணம் |
| மாவட்டம் | : மாத்தளை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : கலேவெல |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : E431D, திவுல்கச்கொடுவ |
| கிராமத்தின் பெயர் | : பெலிகழவ |
| இடத்தின் பெயர் | : மானின்கமுவ வத்த மற்றும் வேறு இடம் |
| வரைபட இலக்கம் | : இ.வ.இ.339, பிற்சேர்க்கை இலக்கம் 12, தாள் இல.10 |
| துண்டு இலக்கம் | : 1021 தொடக்கம் 1024 வரை (துண்டு 03) |
| விஸ்தீரணம் | : ஹெக்டயார் 1.3881 |

..................................................

**எம்.கே.பி.ஆரியரத்ன**
**பிரதேச செயலாளர் மற்றும் காணி எடுத்துக்கொள்ளல் உத்தியோகத்தர்,**
**கலேவெல பிரதேச செயலகம்.**

**2022/12ஆம் மாதம் 12 ஆம் திகதி**
**பிரதேச செயலகம், கலேவெல.**

# டெங்கை கட்டுப்படுத்துவதற்காக அக்கரைப்பற்றில் புகை விசிறல்



ஒலுவில் விசேட நிருபர்

அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நுளம்புகள் பெருகுவதைத் கட்டுப்படுத்தும் வகையில் புகை விசிறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி, வைத்தியர் எப்.எம்.ஏ.காதர் தெரிவித்தார்.

அத்துடன், கிணறுகளில் டெங்கு நுளம்புகளின் குடம்பிகள் உருவாகாமல் தடுப்பதற்கு மருந்துகள் இடப்படுவதுடன், குடிநீர் கிணறுகளில் டெங்கு நுளம்புகளை அழிப்பதற்காக மீன் குஞ்சுகள் விடப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் அதிகளவில் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு சோதனை நடவடிக்கைளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களை வைத்திருப்பவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

## ஏலவிலை கூறலுக்கான அழைப்பு

சுகாதாரம் போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

**பொது வைத்தியசாலை (போதனா) பேராதெனிய**

இந்நிறுவனத்துடன் இணைந்த கலஹா தேசிய பிக்கு கிலானோபஸ்தான மத்திய நிலையத்திற்கு சமைக்கப்படாத பச்சை உவு வகைகளை வழங்குவதற்கான விலைமனுக்கோரல் 2022.12.14 முதல் 2023.01.05 வரை மேற்கொள்ளப்படும் என்பதுடன் அதற்கான பெறுகை அறிவித்தல் பேராதெனியா வைத்தியசாலையின் Perahospital@gmail.com என்ற இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தெனவும் அறிவிக்கப்படுகின்றது.

**தலைவர்**
**பெறுகைக்குழு,**
**பொது வைத்தியசாலை, பேராதெனிய.**
**2022.12.14**

## அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதிகளை ஆராயும்:-

| இல. | பெயர் மற்றும் விலாசம் | பதவி |
|---|---|---|
| 1 | திரு. கே.கே. தெஷாந்த குமாரசிறி இலக்கம். பி/1/2, 117வத்த, அல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-08 | எத்தியோப்பியா கூட்டாட்சிக்கான இலங்கையின் தூதுவராகவும் ஆபிரிக்க ஒன்றியத்திற்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாகவும் பெயர் குறிப்பிடப்பட்டவர். |
| 2 | திரு.குணதாசசமரசிங்க 137/56, வரகாரோதவத்த, பண்டாரவளை. | கமத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் |
| 3 | திரு. டபிள்யூ.எஸ். சத்யானந்த ஸ்ரீ உபசேன மாவத்தை, பத்தேகம. | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் |

மேற்குறிப்பிட்ட பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, "செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப்பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே" எனும் முகவரிக்கு 2022 திசம்பர் மாதம் 27ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத்தபாலில் இன்றேல் தொலைநகல்இல. **011-2777389** ஊடாக அல்லது **highposts_c@parliament.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

அவ்வெழுத்துமூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையதளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. **(www.parliament.lk)**

**குழுச் செயலாளர்**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**
2022 டிசம்பர் மாதம்14ஆம் திகதி

## மரண அறிவித்தல்



**மண்ணில்**
**25.10.1947**

**விண்ணில்**
**12.12.2022**

**தங்கையா கணபதி**

வத்தளையை வசிப்பிடமாக கொண்டிருந்த திரு. தங்கையா கணபதி அவர்கள் 2022.12.12 திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இலக்கம் 67/19 சிறில் பீரிஸ் மாவத்தை, பள்ளியாவத்தை, வத்தளை இல்லத்தில் வைக்கப்பட்டு 2022.12.14 புதன் கிழமை 3.00 மணிக்கு ஹேகித்த பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

**தகவல்:**
**மகன் - க.பல்பநாதன் (குமார்) - 0773619968**
**மருமகன் - ரூபன் - 0771771727**


திகதி 12.12.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4967
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.10,101,780.00
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 1 1 2 2 6 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.19,710,564.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 276
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.9,119,100.00
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 12 13 34 57 விசேட இலக்கினம் கன்னி
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,615,367.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3209
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,734,480.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 35 42 46 53
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.62,152,842.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 997
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.2,553,820.00
வெற்றி இலக்கினம் H வெற்றி இலக்கங்கள் 17 51 59 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.136,509,294.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1422
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.2,210,520.00
வெற்றி இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 4 8 1 5 9 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,949,797.20

கோடி 28+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1315
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,589,420.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.285,956,258.00
V 08 41 59 64 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# கிழக்கின் குரல்



## திருக்கோணேஸ்வரர் ஆலய வளாகத்தை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்த கோரிக்கை

**கந்தளாய் தினகரன் நிருபர்**



திருக்கோணேஸ்வரர் ஆலய வளாகத்தை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தக் கோரியும் அவ்வாலய வளாகத்தினுள் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள கடைகளை அகற்றுமாறு கோரியும் மூதூர் பிரதேச சபையில் பிரேரணையொன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மூதூர் பிரதேச சபையின் அமர்வு நேற்று (13) நடைபெற்ற போது, உபதவிசாளர் சி.துரைநாயகம் இத்தனிநபர் பிரேரணையை முன்வைத்து உரையாற்றினார்.

அவர் மேலும் உரையாற்றிய போது, "பல ஆயிரம் ஆண்டுகால பழமையான வரலாற்றையும் இந்துசமயத்தின் அடையாளச் சின்னங்களையும் கொண்டுள்ள திருக்கோணேஸ்வர ஆலயமும் அதனைச் சூழவுள்ள இயற்கை வளங்களும் இலங்கையின் மிகப்பெரிய பொக்கிஷங்களாகும். இவற்றை பாரம்பரியத்துடனும் எழிலுடனும் பாதுகாக்க வேண்டியது அனைவரதும் பொறுப்பாகும்.

இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் அளவீட்டுக்கமைய திருக்கோணேஸ்வரர் ஆலயத்தைச் சூழ 18 ஏக்கர் 1 ரூட் 29 பேர்ச் காணியும் பாபநாச தீர்த்தக் கிணற்றைச் சூழ 3 ஏக்கர் 2 ரூட் 1 பேர்ச் காணியும் கோட்டை வாசலின் முன்னாலுள்ள எல்லைப் பிள்ளையார் கோவிலைச் சூழ 26 பேர்ச் காணியுமாக திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்குரிய காணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வாலய வளாகம் இந்துக்களின் தொல்பொருட்கள் நிறைந்த இடமாக இருப்பதால், தொல்லியல் திணைக்களத்தால் தொல்லியலுக்குரிய இடமாக இவ்வாலய வளாகம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், இவ்வாலய வளாகத்தினுள் அத்துமீறிய கடைகளும் கட்டுமானங்களும் மனித நடமாட்டங்களும் ஆலயத்தின் புனிதத்தை பாதிக்கும் விதமாகவும் ஆலய வளாகத்தைச் சூழவுள்ள இயற்கை வளங்களுக்கும் வன விலங்குகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் இன்றுவரை காணப்படுகின்றது. இந்நிலைமை தொடருமானால், ஆலயத்தின் புனிதத்தன்மை பாதிக்கப்படுவதுடன், திருக்கோணேஸ்வரத்துக்கு உரித்தான இயற்கை வளங்களையும் வன விலங்குகளையும் இழக்க வேண்டியேற்படும். அத்துடன் இவ்வாலயமானது, சுற்றுலாப் பயணிகளை கவர்வதாக உள்ளதுடன், பாரிய அந்நியச் செலாவணியையும் ஈட்டுகின்றது.

இதனால், இந்துசமய விழுமியங்களை பாதிக்காத வகையில் பாரம்பரிய அம்சங்களை பாதுகாக்கும் வகையில் ஆலயத்தில் புனரமைப்புச் செய்கின்ற ஆலய நிர்வாகத்தின் நடவடிக்கைக்கு தொல்லியல் திணைக்களம் அனுமதி வழங்கி ஒத்துழைப்பு நல்க வேண்டும்" என்றார்.

## கல்முனை பஸ்நிலையத்தில் நிலவிய சர்ச்சைக்குத் தீர்வு



**சாய்ந்தமருது விசேட, கல்முனை விசேட நிருபர்கள்**

கல்முனை பிரதான பஸ் நிலையத்தில் இ.போ.சபைக்குச் சொந்தமான பஸ்களையும் தனியார் பஸ்களையும் தரிக்கச் செய்வதில் அவ்விரு தரப்பினர்களுக்கிடையில் நிலவிய சர்ச்சை, கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம். றகீப்பின் தலையீட்டினால் சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்டது.

இப்பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக கல்முனை பஸ் நிலையத்துக்கு நேற்று முன்தினம் (12) சென்ற கல்முனை மாநகர முதல்வர், இரு தரப்பினரதும் கருத்துகளையும் உள்வாங்கி, எவருக்கும் பாதகமில்லாத வகையில் இட ஒதுக்கீட்டை மேற்கொண்டதன் மூலம் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டதாக, கல்முனை மாநகர முதல்வர் செயலகம் தெரிவித்தது.

மேற்படி இரு பிரிவினரின் பஸ்களையும் நிறுத்துவதற்கான இடங்கள் வெள்ளைக் கோட்டினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

## பெண் ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம்



**பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்**

மனித மேம்பாட்டு அமைப்பின் பிரதேச பெண் ஒருங்கிணைப்பாளர்களுக்கான கூட்டம், சாய்ந்தமருது அல் ஹிலால் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது, அமைப்பினுடைய ஆவணப் பராமரிப்பு மற்றும் பெண்கள் எதிர்கொள்ளக்கூடிய சவால்களை எவ்வாறு முகங்கொடுப்பது என்பது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.



அக்கரைப்பற்று பிரதேச சபையின் புதிய உறுப்பினராக முஸம்மில் கடந்த சனிக்கிழமை பதவியேற்றுக் கொண்டார். தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா முன்னிலையில் கொழும்பில், இவர் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வதையும் கட்சி முக்கியஸ்தர்களையும் படத்தில் காணலாம்.

படம்: பாலமுனை தினகரன் நிருபர்

## ஊடகவியலாளர் கார்த்திகேசுவின் கடிகாரப்பறவைகள் நூல் வெளியீடு

**வாச்சிக்குடா விசேட நிருபர்**



மகாகவி பாரதியாரின் 140ஆவது ஜனன தினத்தையொட்டி, அம்பாறை மாவட்ட திருவதிகை கலைக்கூடத்தின் ஏற்பாட்டில் முதலாவது நூலாக வெளிவரும் திருக்கோவில் ஈழகவி கார்த்திகேசுவின் கடிகாரப்பறவைகள் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் (12) மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அபிவிருத்தி உத்தியோகத்தரும் ஊடகவியலாளரும் சமூக ஆர்வலரும் கவிஞருமான திருக்கோவில் கார்த்திகேசுவின் படைப்பில் உருவான சிறப்புக் கவிதை நூலே இவ்வாறு வெளியிடப்பட்டது.

இக்கவிதை நூலினை அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் வெளியிட்டு வைத்தார்.

## போரதீவுப்பற்றில் இடைநடுவில் கைவிடப்பட்ட எல்லைக்கல் இடும் பணி



**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் தொல்லியல் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் எல்லைக் கற்கள் இடுவதற்காக அத்திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் (12) வருகை தந்த போதிலும், அது இடைநடுவில் கைவிடப்பட்டது.

மேற்படி பிரதேச செயலாளர் பிரிவில் வேத்துச்சேனை, வெல்லாவெளி கல்லடிப் பிள்ளையார் ஆலயம் உட்பட 26 இடங்கள் தொல்லியல் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

தமது நடவடிக்கைக்கு பொதுமக்களும் மக்கள் பிரதிநிதிகளும் எதிர்ப்புத் தெரிவித்ததை அறிந்த தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், இது தொடர்பில் வெல்லாவெளி பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகியுடன் கலந்துரையாடினர்.

இதனையறிந்த மக்கள் பிரதிநிதிகளாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் உள்ளிட்டோர், வெல்லாவெளி பிரதேச செயலாளருடனும் தொல்லியல் திணைக்களத்திலிருந்து வருகை தந்த அதிகாரிகளுடனும் கலந்துரையாடினர்.

தமிழ் மக்களின் பூர்வீக இடங்களை தொல்லியல் திணைக்களம் அடையாளப்படுத்தி எல்லைக் கற்கள் இடுவதற்கு பொதுமக்களும் மக்கள் பிரதிநிதிகளும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். ஆகையால், இது தொடர்பில் எதிர்வரும் தைப்பொங்கலுக்குப் பின்னர் கலந்துரையாடுவதற்கு பொதுமக்களும் மக்கள் பிரதிநிதிகளும் வெல்லாவெளி பிரதேச செயலாளரும் தொல்லியல் திணைக்கள அதிகாரிகளும் தீர்மானமொன்றுக்கு வந்தனர்.

அத்துடன், தொல்லியல் திணைக்கள தலைமைக் காரியாலயத்திலுள்ள அதிகாரியொருவருடன் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தொலைபேசியில் கலந்துரையாடியதை தொடர்ந்து, இந்நடவடிக்கை கைவிடப்பட்டது.

## குற்றச்செயல்களுக்கு இடமளிக்க இயலாது!

### கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**



"எமது பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் துறை சார்ந்தோர் ஏதாவது குற்றம் செய்தால், அது தொடர்பில் எனக்கு தெரியப்படுத்துங்கள். ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டால் எவ்வித தயக்கமுமின்றி அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். றம்சீன் பக்கீர் தெரிவித்தார்.

கல்முனைக்குடி கிராம அலுவலகர் பிரிவிலுள்ள சிவில் பாதுகாப்பு குழுக்களின் கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்ற போதே, அவர் இவ்வாறு கூறினார். இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் வறுமை மற்றும் அது போன்ற எத்துன்பம் வந்தாலும், குற்றச்செயல்களுக்கு இடமளிக்க முடியாது. நாட்டின் சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்பட வேண்டும்.

தற்போது கல்முனை பிரதேசத்தில் குற்றச்செயல்கள் குறைவடைந்தாலும், இன்னும் குற்றச்செயல்களுடன் தொடர்புடையோர் இருந்து கொண்டே இருக்கின்றனர். சிறுவர் துஷ்பிரயோகம் உள்ளிட்ட பல குற்றச்செயல்களை நாம் நாளாந்தம் அவதானிக்கிறோம். எனவே, சமூகத்திலுள்ள அனைவரும் இணைந்து குற்றச்செயல்களை ஒழிப்பதற்கு முயற்சிக்க வேண்டும்" என்றார்.

## அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றியவருக்கு அபராதம்

**பாலமுனை தினகரன் நிருபர்**

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகன உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் 10,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றி வந்த வாகனத்தை பொலிஸார் கைப்பற்றியதுடன், அதனை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (12) ஆஜர்படுத்திய போதே, அபராதம் விதிக்கப்பட்டது.

## மூதூரில் இரத்ததான நிகழ்வு

**அன்புவழிபுரம் தினகரன் நிருபர்**

கிழக்கு சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில், மூதூர் தள வைத்தியசாலையில் இரத்ததான முகாமொன்று அண்மையில் நடத்தப்பட்டது. இதன்போது, 223ஆம் படைப்பிரிவின மூதூர் கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமின் இராணுவ வீரர்கள், அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்க உறுப்பினர்கள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் ஆகியோர் இரத்ததானமளித்தனர்.

குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து பொதுமக்களுக்கு உதவும் வகையில் இந்த இரத்ததான முகாம் நடத்தப்பட்டதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் ஜனன தின நிகழ்வு நாளை

**மட்டக்களப்பு விசேட நிருபர்**

அருள்மிகு அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 170ஆவது ஜனன தின நிகழ்வு, மட்டக்களப்பின் கல்லடி இராமகிருஷ்ணமிஷனில் நாளை15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கல்லடி இராமகிருஷ்ணமிஷன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவாதனந்தாஜீ மகராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வின் போது, அன்றையதினம் அதிகாலை 5 மணிக்கு மங்களாரத்தி, திருப்பள்ளியெழுச்சி, கொடியேற்றம், பூஜை வழிபாடு, பஜனை, ஹோமம், சொற்பொழிவு என்பன நடைபெறவுள்ளன.

இன்று மாலை 4.30 மணிக்கு அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் ரதபவனியும் நடைபெறவுள்ளதுடன், ஆன்மிக புத்தகங்கள் 15 சதவீதம் முதல் 50 சதவீதக் கழிவு விலையில் விற்பனை செய்யப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## கல்முனையில் 18ஆம் திகதி வரை இறைச்சி விற்பனைக்கு தடை

### கல்முனை மேயர் ஏ.எம்.றகீப் அறிவிப்பு

**கல்முனை விசேட நிருபர்**

கல்முனை மாநகர சபை எல்லைக்குள் சட்டவிரோதமாக இறைச்சி விற்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென, அம்மாநகர மேயர், சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் (12) வெளியிட்ட அறிக்கையில்,

"ஜனாதிபதி மற்றும் கிழக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய, கல்முனை மாநகர சபை எல்லையிலுள்ள மாடறுக்கும் மடுவம் மற்றும் இறைச்சிக் கடைகளை எதிர்வரும் 18ஆம் திகதி வரை மூட வேண்டுமென்பதுடன், இறைச்சி விற்பனையும் தடை செய்யப்பட்டுள்ளது.

அதிக குளிரால் கிழக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாக கால்நடைகள் உயிரிழப்பதுடன், நோயுற்றுள்ளதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. இவ்வாறு உயிரிழந்த கால்நடைகள் சட்டவிரோதமாக இறைச்சிக் கடைகளில் விற்பனை செய்யப்படலாமென்ற அச்சத்தினால், மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களுக்கிடையில் இறைச்சி கொண்டு செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், பொதுமக்களின் நலனைக் கவனத்தில் கொண்டு இந்நடவடிக்கையை எடுத்துள்ளோம். இதனை மீறுவோர் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

இதனை நடைமுறைப்படுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு பணித்துள்ளதுடன், இது தொடர்பில் கல்முனை மாநகர எல்லையிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இறக்காமம் பிரதேச சபையின் ஏற்பாட்டில் பல்வேறு நிகழ்வுகள்

**இறக்காமம் தினகரன் நிருபர்**



தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் வகையில் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவையின் அறிவுரைக்கமைய, இறக்காமம் பிரதேச சபையின் பொது நூலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு நிகழ்வுகள் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றன.

இதன்போது மாணவர்களின் நன்மை கருதி இணையவழிக் கற்றல் பிரிவு, பாரம்பரிய அரும்பொருட் காட்சியகம், வலது குறைந்தோருக்கான பிறைல் பிரிவு ஆகியன திறந்து வைக்கப்பட்டன.

பல்வேறு போட்டி நிகழ்ச்சியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு நினைவுச்சின்னம் மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் விசேட அம்சமாக பாடசாலை மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## தம்பலகாமத்தில் ஆயிரம் தென்னங்கன்றுகள் விநியோகம்

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

தம்பலகாமம், சிராஜ் நகரின் 8ஆம் வாய்க்கால் பகுதியில் 'பசுமைப் புரட்சி' திட்டத்தின் கீழ் 1,000 தென்னைமரக் கன்றுகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

அகில இலங்கை வாலிபர் பேரவையின் ஏற்பாட்டிலும் சிடி கார்டின் அனுசரணையிலும் அண்மையில் இவை விநியோகிக்கப்பட்டன.

இத்தென்னங்கன்றுகளை நாட்டி, பொதுமக்கள் பயனடைய வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 டிசம்பர் 14
புதன்கிழமை

## நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி:

# 24 இந்திய மீனவர்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனை

**யாழ்.விசேட நிருபர்**

நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த 24 இந்திய மீனவர்களுக்கும் ஒன்றரை வருட சிறைத்தண்டனை விதித்து, அதனை ஐந்து வருட காலங்களுக்கு ஊர்காவற்துறை நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் திகதி இலங்கை எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் 24 பேரும் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களின் ஐந்து படகுகளையும் அவர்களிடமிருந்து பறிமுதல் செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மறுநாள் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதை தொடர்ந்து அவர்களை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் இவ்வழக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஊர்காவற்துறை நீதிமன்ற நீதவான் செ.கஜநிதிபாலன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போது, இந்திய மீனவர்களுக்கு ஒன்றரை வருட சிறைத்தண்டனை விதித்து, அதனை ஐந்து வருட காலத்திற்கு ஒத்திவைத்தனர்.

அதேவேளை, மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட ஐந்து படகுகளையும் அடையாளம் காட்டி உரிமை கோருவது தொடர்பிலான வழக்கு விசாரணைகளை எதிர்வரும் மார்ச் மாதம் 24ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன் , அன்றைய தினம் படகு உரிமையாளர்களை நீதிமன்றில் ஆஜராகும் படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# இராணுவத்தினரால் வறிய குடும்பமொன்றுக்கு வீடு கையளிப்பு

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா இராசேந்திரகுளம் கிராம சேவகப்பிரிவில் மூன்று பிள்ளைகளுடன் வறுமையில் வாழும் குடும்பமொன்றுக்கு இராணுவத்தினரால் வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (12) இடம்பெற்றது.

வீடற்ற அனைவருக்கும் வீடு கட்டிக்கொடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ், வடமாகாணத்தில் பொருளாதார சிரமத்துடன் வாழும் வறிய குடும்பங்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணித்து கொடுக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய வறிய நிலையில் வாழும் குடும்பத்திற்கு வீடு கையளிக்கப்பட்டது.

சுமார் 35 இலட்சம் ரூபா தனியார் நன்கொடைகளோடு இராணுவம் முழு உழைப்பையும் ஏற்றுக்கொண்டுள்ளது. புதிய வீட்டின் பெறுமதி ரூ. 5 மில்லியனாகும்.

வன்னி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் தளபதி மேஜர் ஜெனரல் சி.டி. ரணசிங்க மற்றும் ஏனைய அதிகாரிகளின் பங்கேற்புடன் வவுனியா பிரதேச செயலக அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



## கூரிய ஆயுதங்களுடன் நால்வர் கைது

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட நால்வர், வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் பொலிஸ் விசேட அதிரடி படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே அவர்கள் வாள்கள் மற்றும், கூரிய ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நால்வரையும், அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட ஆயுதங்களையும் மேலதிக நடவடிக்கைக்காக மானிப்பாய் பொலிஸாரிடம், பொலிஸ் விசேட அதிரடி படையினர் கையளித்துள்ளனர்.

# யாழ்.செங்குந்தா பாடசாலையில் மதிய உணவுத் திட்டம் ஆரம்பம்

**கோப்பாய் குறூப் நிருபர்**



**ஆளுநர் பிரதம அதிதி**

யாழ்.செங்குந்தா பாடசாலையில் மாணவர்களுக்கான மதிய உணவுத் திட்டத்தை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சம்பிரதாயபூர்வமாக நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

குளோபல் அசோசியேசன் விஸ்வநாதன் ஒருங்கிணைப்பில் செங்குந்தா பழைய மாணவர்கள் இத்திட்டத்துக்கான நிதி அனுசரணையை வழங்கினர்.

முதற்கட்டமாக பாடசாலையின் வங்கி கணக்கில் தலா 2 இலட்சம் ரூபாய் நிதியை வட மாகாண ஆளுநரின் பெயரில் அன்பளிப்பு செய்துள்ளனர்.

மேலும் குறித்த திட்டத்தை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்காக புலம்பெயர்ந்து வாழும் குளோபல் அசோசியேசன் பங்குதாரர்களான தர்மலிங்கம், சண்முகதாஸ், சூரிய குமாரன் சதீஷ்குமார், ராஜலிங்கம் ராஜகுமாரன் ஆகியோரின் அனுசரணையுடன் சுமார் ரூ.10 இலட்சம் பெறுமதியான காசோலை பாடசாலை அதிபரிடம் ஆளுநரால் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வைத் தொடர்ந்து வட மாகாண ஆளுநருக்கு குளோபல் அசோசியேசன் நினைவு சின்னத்தை பாடசாலை அதிபர் வழங்கியதுடன் மாணவர்களுக்கான மூன்று வகையான மதிய சத்துணவை வடமாகாண ஆளுநர் சம்பிரதாயபூர்வமாக மாணவர்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் இராதாகிருஷ்ணன், வடமாகாண ஆளுநரின் பிரத்தியேகச்செயலாளர், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## சட்டவிரோத சுண்ணாம்புக்கல் அகழ்வு; மூவர் கைது, உழவு இயந்திரங்கள் மீட்பு

**யாழ் . விசேட நிருபர்**



யாழ்.வசாவிளான் குட்டியப்புலம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவற்றின் சாரதிகள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வு பிரிவினருக்கு, கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் போது உழவு இயந்திர சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், உழவு இயந்திரங்களும் சுண்ணாம்புக்கல்லுடன் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் அவர்களின் உழவு இயந்திரங்கள் மேலதிக நடவடிக்கைக்காக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# பிரதேச சபை சிற்றூழியர் மீது வாள்வெட்டு தாக்குதல்

## கண்டித்து கவனயீர்ப்பு போராட்டம்

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**



புதுக்குடியிருப்பு பிரதேச சபை சிற்றூழியர் மீது இனம்தெரியாத நபர்களினால் வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

31 வயதுடைய சிற்றூழியர், முறுகண்டி பகுதியில் கழிவகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை இனம் தெரியாத நபர்களினால் வாள்வெட்டு தாக்குதலுக்கு நேற்றுமுன்தினம் இலக்காகியுள்ளார்.

இவர் மாங்குளம் ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் சரியான நீதி கிடைக்க கோரியும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் உள்ள அனைத்து ஊழியர்களும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊழியர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்து, அரச ஊழியர்களுக்கு நாட்டில் பாதுகாப்பு இல்லையா?,சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்து,குற்றவாளிகளுக்கு சார்பாக சட்டத்தரணிகள் யாரும் முன்வரவேண்டாம், 'குற்றவாளிகளை கைதுசெய்' போன்ற கோரிக்கைகளை தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.




வங்காலை புனித ஆனாள் லிற்றில் பிளவர் பாலர் பாடசாலையின் 2022 ஆண்டுக்கான ஒளிவிழா மற்றும் சிறார்களுக்கான பட்டமளிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

படம்: மன்னார் குறூப் நிருபர்

# முதியோர் கொடுப்பனவு வழங்குவதில் இழுபறி

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

முதியோர் கொடுப்பனவு வழங்குவதில் ஏற்பட்டுள்ள நடைமுறை மாற்றம் காரணமாக முதியவர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாக பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தென்மராட்சிப் பிரதேசத்தில் இதுவரை காலமும் முதியோர் கொடுப்பனவு தபாலகங்கள் ஊடாகவே வழங்கி வைக்கப்பட்டன. இதனால் முதியவர்கள் சிரமமின்றி அருகிலுள்ள தபாலகங்களுக்குச் சென்று கையொப்பத்தை மாத்திரம் வைத்து தமது கொடுப்பனவுகளை பெற்று வந்தனர். ஆனால் தற்போது குறித்த கொடுப்பனவு சமுர்த்தி வங்கிகள் ஊடாக வழங்கப்படுகின்றது. அத்துடன் சமுர்த்தி வங்கிகளில் முதியவர்கள் படிவமொன்றை நிரப்பிய பின்னரே கொடுப்பனவை பெற முடிகிறது. இதனால் படிவம் நிரப்ப முடியாத முதியவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.அத்துடன் உத்தியோகத்தர்கள் முதியவர்களைக் கடிந்து கொள்ளும் நிலையும் காணப்படுகிறது. எனவே சிரமங்களைக் கருத்திற்கொண்டு ஏற்கனவே இருந்த நடைமுறையை பின்பற்றி தபாலகங்கள் ஊடாக முதியோர் கொடுப்பனவை வழங்க உரிய தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.









காவேரிக் கலா மன்றத்தின் அனுசரணையுடன் இருள் நீக்கும் பேரொளி மாபெரும் இன்னிசை நத்தார் ஆராதனை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள கானான் ஜெப ஆலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் காவேரிக் கலா மன்றத்தின் இயக்குனர் வணபிதா யோசுவா அடிகளார் உள்ளிட்ட முக்கிய போதகர்களுடன் மக்களும் கலந்து கொண்டனர்.

படங்கள்: இக்பால் அலி

# வாழும் மனிதர்களின் நல்வாழ்க்கையே இளைய தலைமுறைக்கான சிறந்த நூல்

ரொட்டேரியன்
சுப்பிரமணியம் கதிர்காமநாதன்

ஆறு கோடி ரூபா செலவில் கிளிநொச்சி வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை விடுதி, எண்பு முறிவு விடுதி போன்றவற்றை நிர்மாணித்து கொடுத்ததோடு கிளிநொச்சி வைத்தியசாலைக்கு, சமீபத்தில் 2.5 கோடி பெறுமதியான மருந்து வகைகளை அன்பளிப்புச் செய்தவர். இவ்வாறு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் எண்ணற்ற சமூகப் பணிகளைப் புரிந்து வரும் இவர் கிளிநொச்சி தொழிலதிபர் சுப்பிரமணியம் கதிர்காமநாதன் ரொட்டரிக் கழகத்தின் அங்கத்தவர்.புலம்பெயர் நாட்டில் வாழ்ந்தாலும் தான் பிறந்து வளர்ந்த தொப்புள் கொடி உறவுகளுக்காக 'நல்ல மதத்திற்கும் நல்ல மொழிக்கும் சொந்தக் காரன்' என்று அடிக்கடி கூறிக் கொண்டு நற்பணி புரிபவர். அத்தோடு காரைநகரில் முதியோர்களுக்கு மாதாந்தம் தேவையான உலருணவுப் பொருட்கள்,கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் உள்ள முதியவர்களுக்கு உலருவுணப் பொதிகள் தொடர்ந்தும் வழங்கி வருகிறார். எஸ். கே. அறிவுச் சோலை சிறுவர் இல்லத்திலுள்ள 150 க்கு மேற்பட்ட சிறுவர்களுக்கும் மற்றும் எஸ். கே. முதியோர் இல்லத்திலுள்ள முதியவர்களுக்கும் தொடர்ந்து உதவி வருபவர்.

இவர் தனது சேவை தொடர்பில் தினகரனுக்கு வழங்கிய கலந்துரையாடல்..

**கேள்வி: தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்களைத் தேடும் இன்றைய இளைய தலைமுறையினர்களுக்கு முன்னுதாரணமாய் விளங்கும் நீங்கள் உங்கள் வாழ்வின் வழிகாட்டிகளாக யாரை நினைத்து இன்று வரை போற்றி வருகிறீர்கள்.?**

பதில்: எனது வாழ்வின் வழிகாட்டிகள் எனது பெற்றோர்களே.தாய் அன்னலட்சுமி, தந்தை சுப்பிரமணியமும் தான் நான் ஆழமாக படித்த இரண்டு வாழ்க்கை தத்துவ நூல்கள். அந்த வாழ்க்கை அனுபவம் தான் எனது வாழ்வின் முன்னேற்றத்திற்கான வழிகாட்டிகள்.அவர்கள் இருவரும் எனக்கு வழிகாட்டினார்கள் என்பதை விட அவர்களே என் வாழ்க்கையின் வழியாக நின்றார்கள். பெற்றோர்கள் பிள்ளைகளுக்காக செய்யக் கூடிய மிகப்பெரிய தியாகம் எதுவென்றால் பெற்றோர்களாகிய நாம் பிள்ளைகளுக்கு முன்பாக சிறந்தவர்களாக வாழ்வதுதான். அவர்களது வாழ்க்கையில் காணப்பட்ட உண்மை, நேர்மை, கடின உழைப்பு, சுறுசுறுப்பு, சேமிப்பு மற்றவர் மீது காட்டும் பரிவு, உபசரிப்பு இவைகள் தான் அவர்கள் என் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக முன்மாதிரிகள் என்று கூறுவேன்.



**கேள்வி : சிறுபராயத்தின் வாழ்க்கை சூழல் குறித்த உங்களது பதிவு உங்களது ஊரை ஞாபகப்படுத்துகிறது. உங்களது ஊர்ச் சூழல் உங்களது முன்னேற்றத்திற்கு உதவியதா?**

பதில்: உலகத் தமிழர்களால் ஈழத்துச் சிதம்பரம் என்றும் சிவ பூமி என்றும் போற்றப்படும் காரை நகர்தான் என் ஊர். யாழ்ப்பாணத்தில் சப்த தீவுகளில் ஒன்று பக்திக்கும், அறவாழ்வுக்கும் இலக்கணமாக திகழும் இந்த ஊரின் சிறப்பு இங்கு வாழ்ந்தவர்களும் தற்போது வாழ்கிறவர்களும் தான். யாரையும் யாரும் நம்பி வாழாது தன்னையும் தன்திறனையும் தன் உழைப்பையும் நம்பி அறந்தவறாது வாழ வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் வாழ்ந்த மக்கள் கூட்டத்தின் நடுவில் தான் என் சிறு பராய வாழ்க்கை கட்டமைக்கப்பட்டது. அந்த சூழல் அபூர்வமானது. எப்போதும் சுறுசுறுப்பானது யாரையும் ஏமாற்றாது உழைத்து வாழும் ஓர் சமூகச் சூழல் இன்றைய இளைய தலைமுறையினர்களுக்கான சிறந்த களமாக இருக்கும் என்பதுதான் என் கருத்து.

**கேள்வி: உழைத்து முன்னேறும் பலர் தனது முன்னேற்றத்தில் மட்டுமே கருத்தாக இருக்கும் சூழலில் உங்களைப் போல சிலர் மட்டுமே, உங்கள் உழைப்பின் வருமானத்தில் பெரும்பகுதியை மக்கள் பணிக்காக வழங்குகின்றீர்கள், இந்த உயர்ந்த சிந்தனைக்கான காரணம் என்ன?**

பதில் : நாம் நல்ல மதத்திற்கும் நல்ல மொழிக்கும் சொந்தக்காரர். மக்கள் பணிக்காக நமது உழைப்பின் பலனில் கொடுக்க வேண்டும் என்ற தூண்டுதல் யாரும் அல்லது எதுவும் நமக்கு கொடுப்பதில்லை. வாழ்க்கையின் நோக்கும் குறித்த உண்மையைப் புரிந்து கொள்ளும் ஒருவர் அதை நிச்சயம் செய்வார். எனது பெற்றோர்கள் மற்றும் முன்னோர்கள் வீட்டுக்கு வரும் எல்லோரையும் ஏற்று உபசரிப்பார்கள், தமக்கு இல்லாவிட்டாலும் மற்றவர்களுக்கு முதலில் கொடுக்கும் அந்த உபசரிப்புப் பண்பை யாரும் சொல்லிக் கொடுக்க வில்லை என்று சொல்லுவார்கள். அதுதான் எனது வாழ்வின் நோக்கம் என்று கூறுவார்கள். நாம் மற்றவர்களுக்குச் செய்யும் உதவி, உபசரிப்பு எல்லாவற்றையும் நம் வாழ்வின் கடமை என்றே அவர்கள் சொல்வார்கள். அந்த வகையில் அவர்களை பின்பற்றி நானும் கடமையை செய்து வருகின்றேன் என்றே கூறுவேன்.

**கேள்வி: உங்கள் சேவை பற்றிய சிந்தனை மிகவும் வித்தியாசமானது. இது ஓர் புதிய தத்துவம் என்றே கருதுகின்றேன். உங்கள் சேவை மூலம் பயன்பெற்றவர்கள் பற்றி கூற முடியுமா?**

பதில்:யாரையும் என்னிடமிருந்து பயன் பெற்றவர்களாக நான் நினைப்பதில்லை. நமது பிள்ளைகள் நம்மிடம் பயன்பெறறவர்களாக கருதுவதில்லையே. எல்லோரும் இணைந்து வாழ்கின்றோம் என்றே கூறுவேன். சிறுவர்கள் முதியவர்கள், இளைஞர்கள், யுவதிகள் அனைவரும் என் வாழ்வில் பங்குகொள்ளுகிறார்கள். என் உழைப்பின் பலனில் பங்குகொள்ளும் அனைவரிடமும் நான் எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்றுதான். நீங்களும் ஒற்றுமையாக நேர்மையாக கடினமாக உழைத்து உங்கள் உழைப்பின் பலனில் மற்றவர்களையும் பங்கு கொள்ளச் செய்ய வேண்டும் என்பது தான்.





**கேள்வி : சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், மருத்துவப் பணிகள், கல்வி ஊக்குவிப்புப் பணிகள் என சமூகத்தில் பின்தங்கியிருக்கும் அனைவரும்உங்கள்பலனில்பங்குகொள்ள, ஆயிரக்கணக்கானோர் வாழ்வில் ஒளியேற்றிக் கொண்டிருக்கும் நீங்கள் இளைய தலைமுறையினர்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள். ?**

பதில் : உலகத்தின் எல்லா பாகத்திலும் எல்லா காலத்திலும் உதவி தேவைப்படும் மக்களும் அவர்களுக்கு உதவி செய்கிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் உதவி பெற்றவர்கள் பின்பு உதவி செய்கிறவர்களாக முன்னேறியிருக்கிறார்கள். எமது நாட்டிலும் அந்த முன்னேற்றம் அதிகமாக வளர வேண்டும். நாம் இலவசக் கல்வியைப் பெறுகிறோம் என்றால் நாம் கற்றுத்தேறிய பின்னர் நாம் நமது முன்னேற்றத்தின் பலனை உலக மக்கள் அனுபவிக்க அனுமதிக்க வேண்டும். அப்போதுதான் எல்லோரும் எல்லாம் பெற்று வாழும் ஒரு சமூகத்தைக் காண முடியும் என்று நான் நினைக்கின்றேன்.

**கேள்வி : இலங்கையின் பொருளாதார சுபீட்சத்திற்கான சிறந்த வழிமுறை எதுவென்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

பதில் : இலங்கை வளமுள்ள நாடு. நமது வளங்களை மையமாகக் கொண்ட



பொருளாதாரக் கொள்கைகளை வடிவமைக்கும் திட்டங்களில் புதிய அணுகுமுறைகளும், புதிய வடிவங்களும் அவசியமென்று நினைக்கின்றேன். எமது பொருளாதார வடிவமைப்பு என்பது சமூகத்தின் எல்லா நிலைகளிலும் இருந்து மலர்ந்து வர வேண்டும். இன்றுவரை நமது பல பாரம்பரிய தொழில் முறைமைகளுக்கான சந்தை வாய்ப்பும் புதிய வடிவமைப்பும் பூரணப்படவில்லை.



அவைகளில் நாம் இன்னும் முன்னேற்ற வேண்டியுள்ளது.குறிப்பாக விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளில் சர்வதேச சந்தைகளுக்கு ஏற்றவகையிலான புதிய வடிவங்கள் அவசியமானது என்று நான் நினைக்கின்றேன். பொருளாதாரம் குறித்த சிந்தனை அனைவர் மனதிலும் எழுந்து வர வேண்டும். நமது பிள்ளைகள் அது குறித்துச் சிந்திக்கத் தூண்ட வேண்டும்.

**கேள்வி : சிறுகைத் தொழில் முயற்சிகள் குறித்து தாங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றம் குறித்து எங்கு அதிகமாக உரையாடப்பட வேண்டும் என நினைக்கிறீர்கள்?**

பதில் : உரையாடல் வீட்டில் தொடங்க வேண்டும். பாடசாலை, சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகங்களில் இவை குறித்துப் பேச வேண்டும். நமது பிள்ளைகளுக்கு எப்படி பணம் உழைக்கலாம் என்பதைக் குறித்து திறந்த மனதுடன் உரையாடக் கற்றுக் கொடுக்க வேண்டும். செலவழிப்பதில் சிக்கனத்தையும் வருமானம் தேடுவதில் உயர்ந்த இலாபத்தையும் ஈட்டும் முறைகள் குறித்து எல்லா இடங்களிலும் கலந்துரையாட வேண்டும்.






**கேள்வி : சமூகப் பணி செய்யும் நிறுவனங்கள் ஏழைகளுக்கு உதவி செய்தால் மட்டும் போதும் என்று நினைக்கும் போது தாங்கள் உயர்ந்த தத்துவத்தோடு பணி செய்வது சிறப்பாக உள்ளது. தாங்கள் அனுபவத்தில் தங்களது சிந்தனைக்கேற்று பணி செய்யும் அமைப்புக்கள் குறித்து கூற முடியுமா?**

பதில் : பலர் செய்கிறார்கள். பல அமைப்புக்கள் செய்கின்றன. அவர்களை வாழ்த்துகின்றேன்.

**கேள்வி : நீங்கள் ரொட்டரிக் கழக அங்கத்தவர் என்று கேள்விப் பட்டேன். அது தொடர்பான அனுபவத்தைக் கூற முடியுமா?**

பதில் : நான் கிளிநொச்சி ரோட்டரிக் கழக அங்கத்தவர். ரோட்டரிக் கழகம் உலக முழுவதும் வியாபித்திருக்கும் ஒரு சேவை அமைப்பு. பதினைந்து இலட்சம் அங்கத்தவர்கள் தமது திறனாலும் உழைப்பாலும் உழைப்பின் பலனாலும் சேவை செய்கிறார்கள்.கிளிநொச்சி ரோட்டரிக் கழகமும் அப்பகுதி மக்களுக்கு மிகச் சிறந்த சேவையை வழங்குகிறது என்று கூறுவேன். அவர்கள் ஊடாக காத்திரமான பல பணிகளை எம்மக்கள் வாழ்வுயரச் செய்கின்றேன்.

**கேள்வி : இன்றைய இளைய தலைமுறையினர்களுக்கு உங்கள் வாழ்க்கை அனுபவத்தில் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

பதில் : அவர்களுக்குப் போதனை செய்வதற்கான எந்த தத்துவமும் என்னிடம் இல்லை. நல்ல மனிதர்களை வாழ்க்கையில் சந்திக்க முயற்சி செய்யுங்கள். இயலுமானால் அவர்களையும் முந்திச் செல்ல முற்படுங்கள் என்று மட்டுமே கூறுவேன்.

**கேள்வி : நீங்கள் ஆன்மீக பணிகளுக்கு அதிகமான பங்களிப்பு செய்யும் ஒருவர். உங்கள் ஆன்மீகம் குறித்துச் சொல்ல முடியுமா?**

பதில் : நான் முதலில் கூறிவிட்டேன். எதுவும் தூண்டி ஏற்படுவதில்லை. எல்லாம் இயல்பில் இருந்து வருவது. எனது வாழ்வின் சிறப்பு. நான் பிறந்த மண், குறிப்பாக ஈழத்துச் சிதம்பரநாதனாய் எங்கள் ஊர் காவல் தெய்வமாக இருக்கும் அந்த நடராஜா பெருமான் அருளிய வாழ்க்கை செல்வங்கள் தான் எங்கள் வாழ்க்கைப் பண்புகள். அதில் ஒரு பண்புதான் ஆன்மீகம். ஆன்மீகம் என்பது நம்பிக்கை என்பதை விட அது வாழ்க்கை நெறி. அதை மிகச் சரியாகக் கடைப்பிடிக்கும் ஒருவர் செய்யும் செயலும் சொல்லும் ஒன்றாக இருக்கும். அப்படி இருக்கவே நானும் விரும்புகின்றேன். அதுவே என் ஆன்மீகமும், ஆன்மீகப் பணியுமாகும்.



**கேள்வி: உங்களுக்கு பொதுப்பணியிலான ஆர்வம் எப்பொழுது தூண்டப்பட்டது என்று சொல்ல முடியுமா?**

பதில் : நான் என்னுடைய தந்தையாருடன் பதுளையில் பணி செய்த காலத்திலே அங்கே நாங்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட போது 1978 ஆம் ஆண்டு என நினைக்கிறேன்.

அந்தக் காலத்தில் பயங்கரமான சூறாவளி, கிழக்கு மாகாணத்தைத் தாக்கிய போது குறிப்பாக பதுளைப் பிரதேசத்தில் இருந்து நாங்கள் உணவுப் பொருட்களை எடுத்துச் சென்று அந்த மக்களுக்கு வழங்கிய நிகழ்விலிருந்து என்னுடைய பொதுப் பணி ஆரம்பிக்கின்றது. அந்த நாளில் ஆரம்பித்த பணியை இன்று வரையிலும் என்னை இந்தப் பொதுப்பணிகளில் ஈடுபட வைக்கிறது என்று நான் கூறிக் கொள்வதில் நிறைவடைகிறேன். எப்பொழுதும் ஓர் இறைவார்த்தை இருக்கிறது. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்பதும் அந்த எண்ணத்திற்கு ஏற்றவாறு என்னாலான முயற்சிகளை 'எம் மக்கள் வாழ்வுயர' மகுட வாசகத்தின் கீழ் தொடர்ந்து செய்து வருவதையிட்டு மன நிறைவடைகின்றேன். அதற்கான வாய்ப்பை அதற்கான உயர்நிலை வாழ்வையும் இறைவன் எனக்குத் தந்ததிற்காக நான் இறைவனுக்கு நன்றி கூறிக் கொள்கின்றேன்.

**கேள்வி: உங்களுடைய சேவைக் காலத்தில் மறக்க முடியாமல் இருக்கின்ற சேவைகள் பற்றிக் கூற முடியுமா?**

பதில் : மிகக் கொடிய ஒரு போர் நடந்து எமது பிரதேச மக்கள் அல்லல்பட்ட நேரத்தில் நான் மிகக் காத்திரமான பணிகளை செய்வதற்கான ஒரு வாய்ப்பு கிடைத்தமையிட்டு நான் இறைவனுக்கு நன்றி கூறிக் கொள்கின்றேன்.அந்த வகையில் மீள்குடியேற்றக் காலத்திலே அதிகளவிலான மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்ததை ஒரு முக்கியமான நிகழ்வாக நான் சொல்ல விளைகின்றேன்.

அதே போல போரினால் பாதிக்கப்பட்டு தாய் தந்தையர்களை இழந்து ஆனாதரவாக இருந்த பிள்ளைகளுக்கு ஒரு சிறுவர் இல்லத்தை ஆரம்பித்து அந்த சிறுவர் இல்லத்தின் ஊடாக அவர்களுக்கான ஒரு பாதுகாப்பையும் அவர்களுக்கான ஒரு மேம்பாட்டையும் செய்து வருவதையிட்டு மன நிறைவடைகின்றேன்.

அதை போல யுத்த காலத்தில் பாதிப்புக்கு உள்ளான முதியவர்கள் அல்லது பராமரிப்பார் அற்ற நிலையில் உள்ளவர்களுக்கான ஒரு முதியோர் இல்லத்தை அமைத்து அந்த முதியோர் இல்லத்தையும் நடத்தி வருவதையிட்டு மன நிறைவடைகின்றேன்.

அதே போன்று யாழ். போதனா வைத்தியசாலையில் சிடி ஸ்கேனர் இயந்திரம் அதே போல கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் இரண்டு சத்திர சிகிச்சைக்குரிய கூடங்கள் தேவைப்பட்ட போது என் சொந்த நிதியில் கண் சத்திர சிகிச்சை விடுதியையும், எண்பு முறிவு சத்திர சிகிச்சை விடுதியையும் முழுமையாக்கி கொடுப்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தமையிட்டு நான் இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

சுனாமியின் போது கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு பிரதேசத்தில் மக்கள் வீடுகளை இழந்து நிர்க்கதியான நிலையில் 1000 இடைத்தங்கல் முகாம்களை நிர்மாணிப்பதற்காக உதவி செய்துள்ளேன்.

கலந்துரையாடல்:
இக்பால் அலி ...

# நகர்வலம்





சகோதர மொழி சிங்கள பத்திரிகையில் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தொடர்ச்சியாக எழுதிய பத்திகளின் தொகுப்புகளை உள்ளடக்கிய “Beyond Common Narratives” எனும் தலைப்பிலமைந்த ஆங்கில மொழியிலான நூலின் முதற் பிரதியை இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் எம்.எச். சைத் அவர்களிடம் நேற்று (13) தூதுவரின் வாசஸ்தலத்தில் வைத்து கையளித்தார்.

அநுராதபுரம் மாவட்ட மருந்தகமொன்றில்

## காலாவதியான மருந்து பொருட்கள் விற்பனை

**வைத்தியர் தம்பதியர் கைது**

அநுராதபுரம் மாவட்ட குறூப் நிருபர்

தனக்கு சொந்தமான மருந்தகத்தில் (பார்மசி) காலாவதியான மருந்துகளை விற்பனைக்காக வைத்திருந்த குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட அநுராதபுரம் போதனா வைத்தியசாலை வைத்தியர் மற்றும் அவரது மனைவிக்கு அநுராதபுரம் மேலதிக நீதவான் ருத்ரிகா த சில்வா தலா ரூ.15,000 தண்டப் பணம் விதித்து தீர்ப்பளித்தார்.

இவர்கள் இருவரும், அநுராதபுரம் பகுதியில் பார்மசி ஒன்றை செய்து வருவது விசாரணைகளிலிருந்து தெரிய வருகிறது.

மேற்படி மருந்தகத்தில் பணிபுரிந்த ஊழியரும் தான் காலாவதியான மருந்துப் பொருட்களை விற்பனை செய்ததை ஒப்புக் கொண்டதால்அவருக்கும்ஐயாயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

நுகர்வோர் அதிகாரசபையின் அநுராதபுரம் மாவட்ட பொறுப்பதிகாரி மற்றும் சிரேஷ்ட விசாரணை அதிகாரி பெரேராவினால் இந்த மருந்தகத்திற்கு எதிரான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பொதுமக்கள் மூலம் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றுக்கு அமைவாகவே குறித்த மருந்தகத்தை பரிசோதித்த நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் குழு காலாவதியான பெருமளவான மருந்துப் பொருட்களையும் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

## காகில்ஸ் வங்கிக்கிளை அநுராதபுரத்தில் திறப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

காகில்ஸ் சிலோன் நிறுவனத்தின் 24வது புதிய காகில்ஸ் வங்கிக் கிளையினை அநுராதபுர மாவட்ட அரசாங்க அதிபர் ஜனக்க ஜயசுந்தர மற்றும் காகில்ஸ் வங்கி வலையமைப்பின் முகாமையாளர் (மேற்பார்வை) செனரத் பண்டார உள்ளிட்ட அதிகாரிகளினால் அநுராதபுரத்தில் திறந்து வைக்கப்பட்டது.

அநுராதபுரம் ரெக்ஸ் கட்டிடத்தில் புதிதாக திறந்துவைக்கப்பட்டுள்ள வங்கிக் கிளையின் ஊடாக விவசாயிகள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. காகில்ஸ் புட்சிட்டி கவுண்டர் ஊடாக பணம் வைப்புச் செய்ய மற்றும் பணம் மீளப்பெறக் கூடிய வசதிகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## தம்பான வீதி புனரமைப்பு; மின்சாரமும் விநியோகம்



யானைகள் அதிக நடமாட்டமிக்க செல்ல கதிர்காமம் தம்பான வீதியில் வசிக்கும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை முகங்கொடுத்து வந்ததோடு இவ்வீதியும் நீண்டகாலமாக புனரமைப்பின்றி குண்டும் குழியுமாக காணப்பட்டது. யானைகளின் நடமாட்டம் அதிகரிப்பினால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் அதிக காலம் முகம்கொடுத்து வந்தனர்.

றுஹுணு மாகம்பத்துவ பிரதான சங்க நாயக்கர் மற்றும் கதிர்காமம் சாசன தலைவருமான சத்தர்ம கீர்த்தி அதி வணக்கத்திற்குரிய கபுகம சரணதிஸ்ஸ தேரரின் ஏற்பாட்டில் நிஹால் மாயாதுன்னவின் செலவில் தம்பான வீதி தற்போது புனரமைக்கப்பட்டு மின்சாரமும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கதிர்காமம் கொச்சிபதான விகாரையில் 75 அடிகள் உயரத்தில் சைத்தியமும் நிஹால் மாயாதுன்னவின் நிதியுதவி அன்பளிப்பில் நிர்மாணிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

## கட்டார் நாட்டுடனான தொடர்பு வரலாற்று முக்கியத்துவமானது

**சுதந்திரதின வாழ்த்துச் செய்தியில் மௌலவி தாஸீம்**



இலங்கை நாட்டுடன் கட்டார் அரசாங்கம் அனைத்து வகையிலும் கைகோர்த்து செயற்படுவதோடு கடந்த காலங்களில் எமது தாய் நாட்டுக்கு கட்டார் அரசாங்கம் வழங்கி வருகின்ற உதவிகள் ஒத்தாசைகள் மற்றும் எமது நாட்டில் மேற்கொண்டு வருகின்ற வேலைத் திட்டங்களை இச்சந்தர்ப்பத்தில் நன்றியோடு நினைவுகூர்வது காலத்தின் தேவையாகுமென அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் உதவிப் பொதுச்செயலாளரும்AMYSநிறுவனத்தின் பணிப்பாளருமான மௌலவி எம்.எஸ்.எம். தாஸீம், கட்டார் நாட்டின் சுதந்திர தினத்தை முன்னிட்டு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது, சுதந்திர தினத்தை கொண்டாடும் கட்டார் அரசுக்கு முதலில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய கிழக்கு நாடுகளில் குறிப்பாக சவுதி அரேபியா, குவைத், ஐக்கிய அரபு இராச்சியம் இன்னும் சில நாடுகள் இலங்கையின் அபிவிருத்தியில் பாரிய பங்களிப்பை செய்து வருவதைப் போல் கட்டார் அரசும் எமது நாட்டில் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருவதோடு வேலைவாய்ப்புகளையும் எமது நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ளதை இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுகிறேன்.

குறிப்பாக கட்டார் நாட்டில் FIFA உலகக் கிண்ண உதைப்பந்தாட்ட போட்டிகள் நடைபெற்று வருகின்றன. கட்டார் ஒரு இஸ்லாமிய நாடாகும். இஸ்லாமிய விழுமியங்களைப் பாதுகாத்து மிகவும் சிறப்பான முறையில் சகல நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. உண்மையில் இவையனைத்தும் மிகவும் பாராட்டத்தக்கது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் அறிவோர் ஒன்றுகூடல்

அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வு இன்று 14ஆம் திகதி புதன் கிழமை மாலை

5.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் ஓய்வுநிலை ஆசிரியர் க. விநாயகமூர்த்தி 'பேராசிரியர் கைலாசபதியின் நினைவுகள்' எனும் தலைப்பில் உரை நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்விற்கு கொழும்புத் தமிழ்ச் சங்க பேரவை உறுப்பினர் சட்டத்தரணி திருமதி சுகந்தி இராஜகுரேந்திரா அவர்கள் தலைமை தாங்குவார்.

## வாகன விபத்தில் இளைஞன் பலி; கல்நேவயில் சம்பவம்

(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)

கல்நேவ ஹிரிபிட்டிய எனும் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 25 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கல்நேவ பொலிசார் தெரிவித்தனர். இவ்விபத்து சம்பவம் 12 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 5.10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பழைய மாணவர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு ஒரே சம வயதுடைய நான்கு நண்பர்கள் கார் ஒன்றில் கல்நேவையிலிருந்து புல்நேவ நோக்கி பயணித்துள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தில் இவர்கள் பயணித்த கார் வண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரமொன்றுடன் மோதி இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் வாகனத்திற்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன் பின் ஆசனத்தில் அமர்ந்து சென்ற எலபதுகம கல்நேவையைச் சேர்ந்த இளைஞனே உயிரிழந்துள்ளார்.

## பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் புத்தளம் நிகழ்வில் பங்கேற்பு

(புத்தளம் தினகரன் நிருபர்)

ஐ.தே.கட்சியின் புத்தளம் தொகுதி முகாமையாளரும், சமூக சேவையாளருமான நுஸ்கி நிஸாரின் அழைப்பை ஏற்று பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்கி அண்மையில் புத்தளம் வருகை தந்தார்.

இவரின் வருகையை யொட்டி விஷேட கூட்டம் ஒன்று புத்தளம் நூமான் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. தெரிவு செய்யப்பட்ட மாதர் சங்க அங்கத்தவர்களுக்கு இதன் போது தையல் இயந்திரங்களையும் அவர் இலவசமாக வழங்கி வைத்தார்.

புத்தளம் பாத்திமா கல்லூரி மற்றும் தில்லையடி முஸ்லிம் பாடசாலைகளுக்கு கணினி உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்விலும் அவர் பங்கேற்றார்.

ஐ.தே.கட்சியின் புத்தளம் தொகுதி அமைப்பாளர் ஜேசுதாஸ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம். நவவி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



## களுத்துறை முஸ்லிம் மகளிர் கல்லூரியில் பரிசளிப்பு விழா



(பேருவளை விசேட நிருபர்)

களுத்துறை கல்வி வலயத்திலுள்ள சிறந்த முன்னணி பாடசாலைகளில் ஒன்றான களுத்துறை முஸ்லிம் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அதிபர் திருமதி சாபி அலவி தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

கொழும்பு கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மும்தாஜ் பேகம் பிரதம அதிதியாகவும் களுத்துறை கல்வி வலய பிரதி கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜெயகுமார், உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எம்.இல்யாஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரம், உயர்தர பரீட்சைகளில் திறமை சித்தி பெற்ற மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவிகள் விழாவில் பரிசு, சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

விழாவில் உலமாக்கள், களுத்துறை முன்னாள் நகர பிதா எம்.எம். ஜௌபர், தற்போதைய நகர சபை உறுப்பினர் முஹம்மத் ஹிஷாம், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் உட்பட பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவிகள், சங்க உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## ஹம்பாந்தோட்டை இக்ரா மாணவி தேசிய ரீதியில் மூன்றாம் இடம்

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்



புத்தசாசன, சமய மற்றும் கலாசாரஅமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியன ஏற்பாடு செய்திருந்த இவ் வருடத்திற்கான தேசிய இலக்கிய விருது வழங்கல் நிகழ்வில் ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலய மாணவி செல்வி அலிஸா பின்தி ரிஸ்மி கதை கூறல் போட்டியில் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தினை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் இரண்டில் கல்வி கற்றுவரும் இம் மாணவி, இவ் வருடம் நடைபெற்ற பிரதேச இலக்கியப் போட்டியில் பாலர் பிரிவில் கதை கூறல் போட்டியில் பாடசாலை சார்பாக கலந்து கொண்டு அதில் வெற்றி பெற்று மாவட்ட மற்றும் மாகாண போட்டிகளிலும் கலந்துகொண்டு அவற்றிலும் வெற்றிபெற்றார். அதன்பின் தேசிய போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டு அதில் பங்குபற்றி மூன்றாம் இடத்தினை பெற்றுள்ளார். இதற்காக தேசிய இலக்கிய விருது வழங்கல் விழாவில் பதக்கம் மற்றும் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸாரின் கட்டளையை மீறி பயணித்த

## மோ. சைக்கிளில் போதைப்பொருள் மீட்பு; சந்தேக நபர்கள் தப்பியோட்டம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

பொலிஸாரின் கட்டளையை மீறி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று போதைப்பொருளுடன் நொச்சியாகம பகுதியில் கடந்த (10) கைப்பற்றப்பட்டுள்ளது.

போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களும் நொச்சியாகம நகர கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களும் சேர்ந்து மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு கட்டளையிட்டுள்ளனர்.

எனினும் கட்டளையை மீறி குறித்த மோட்டார் சைக்கிள் பயணித்ததால் பொலிஸார் சந்தேக நபர்களை பின்தொடர்ந்துள்ளனர். நொச்சியாகம அரோனாவ பகுதியில் வைத்து சந்தேக நபர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் பொலிசாருடன் மோதியுள்ளது.

இதன் போது மோட்டார் சைக்கிள் ஓட்டுனரும் மற்றுமொருவரும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை தாக்கி தப்பிச் சென்றுள்ளனர்.

சந்தேக நபர்கள் கைவிட்டுச் சென்ற மோட்டார் சைக்கிளை சோதனையிட்ட பொலிஸார் அதன் எரிபொருள் தாங்கியிலிருந்து 4 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோயினையும் கையடக்க தொலைபேசி ஒன்றையும் கைப்பற்றினர்.

தாக்குதலினால் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர், நொச்சியாகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

க.பொ.த உ/த பரீட்சைக்கு தோற்றும்

## தென் மாகாண மாணவர்களுக்கு கல்விக் கருத்தரங்கு

(வெலிகம தினகரன் நிருபர்)

ஜனவரி மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதியும் பரீட்சை பெறுபேற்றை மேம்படுத்தும் நோக்கிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கல்விக் கருத்தரங்கொன்று வெலிகம பதுர் மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வாரஇறுதி நாட்களில் மாத்திரம் இக்கருத்தரங்கு நடைபெற்று வருகின்றன. இம்மாத 10, 11, 17, 18, 26, 27ஆம் திகதிகளிலேயே இக்கருத்தரங்குகள் வெலிகம அறபா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) வெபா மண்டபத்தில் நடைபெறுகின்றது. தமிழ், புவியியல், இஸ்லாம், இஸ்லாமிய நாகரீகம், அரசியல், விஞ்ஞானம் மற்றும் பொருளியல் ஆகிய பாடங்களே இடம்பெற்று வருகின்றன.

நாட்டிலுள்ள பிரசித்திபெற்ற வளவாளர்களால் இக்கருத்தரங்கு நடாத்தப்படுகின்றன. இக்கருத்தரங்கில் மாணவர்கள் பாடசாலை சீருடையுடன் மாத்திரம் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவதோடு குறிப்பிட்ட தினங்களில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை இக்கருத்தரங்கு நடைபெறும். இக்கருத்தரங்கில் தென் மாகாணப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் மாத்திரம் இதில் கலந்து கொள்ள முடியும்.

## புத்தளத்தில் 5ம் தர இலவச கருத்தரங்கு

(புத்தளம் தினகரன் நிருபர்)

இவ்வருடம் ஐந்தாம் தர புலமை பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி இலவச கருத்தரங்கு புத்தளம் சாஹிரா ஆரம்ப பாடசாலையில் ஞாயிற்றுக்கிழமை (11) நடைபெற்றது.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிந்தக்க அமல் மாயாதுன்னவின் கல்வி மேம்பாட்டுக் குழுவினால் நடாத்தப்பட்ட இக்கருத்தரங்குக்கு சமூக ஆர்வலர் லிப்டி ஜமால்தீன் பங்களிப்பு செய்தார்.

பிரதான வளவாளராக சவாஹிர் சாலிஹ் கலந்து கொண்டதோடு பாராளுமன்ற உறுப்பினர் சிந்தக்க அமல் மாயதுன்ன பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.



# மக்கள் வங்கி

## விலைமனு அறிவித்தல்

### கெஸ்பேவ கிளை 327

மாம்பே, கெஸ்பேவ (வரைபட இல. 9418 இல் துண்டம் A) என்ற இடத்தில் பெறுமதி வாய்ந்த ஆதனம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன

**ஆதனத்தின் விஸ்தீரணம்: ஏ:0-றூ:0-பே:20.0**

**காணி, கட்டடங்கள் மற்றும் பயிர்கள்**

1) மேலே குறிப்பிடப்பட்ட ஆதனத்திற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுவை மக்கள் வங்கியின் வெளிப்பிராந்திய முகாமையாளர் கோருகின்றார்.

2) விலைமனு ஆவணங்களை கெஸ்பேவ கிளையின் கணக்கிலக்கம் 327-1001-72473892 சேகரிப்பு நானாவிதக் கணக்கிற்கு (Collection A/C Miscellaneous) திருப்பிச் செலுத்தப்படாத ரூபாய் 3,000.00 தொகையைச் செலுத்தி காலை 9.00 முதல் மாலை 3.30 வரை 27.12.2022 ஆம் திகதி வரை இல. 140/2, ஹொரண வீதி கெஸ்பேவ என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளை முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3) மேலே சொல்லப்பட்டவாறு கெஸ்பேவ கிளையின் கணக்கிலக்கம் 327-1001-72473892 சேகரிப்பு நானாவிதக் கணக்கிற்கு திருப்பிச் செலுத்தப்படக் கூடிய ரூபாய் 50,000,00 தொகையை ஏதேனும் மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி பற்றுச் சீட்டின் மூலப் பிரதியை விலைமனு ஆவணத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

4) விலைமனுவானது 28.12.2022ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு 28.12.2022 அன்று பி.ப. 3.00 மணிக்கு இல. 140/2, ஹொரண வீதி கெஸ்பேவ என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையின் வளவில் திறக்கப்படும்.

5) விலைமனு தொடர்பிலான ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் விலை மனுவிற்கான விண்ணப்பத்துடன் வழங்கப்படும்.

6) ஏற்கனவே நிலவுகின்ற நிலைமையில் ஆதனத்தைக் கொள்வனவு செய்வதற்கு விண்ணப்பதாரி உடன்பட வேண்டும். மேலதிக விபரங்களை இல. 140/2, ஹொரண வீதி கெஸ்பேவ என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையின் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பிலக்கங்கள் 011-2702474/ 0769919474

**பிராந்திய முகாமையாளர் மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமை அலுவலகம்**
**இல. 177A, ஹைலெவல் வீதி,**
**நுகேகொட**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk
AA- (lka) Fitch Rating, AA - Brand Finance Rating

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
பாதுகாப்பு அமைச்சு

## தாக்கக் குறைப்பு செயற்பாடுகளினால் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்றிட்டம் (RLVMMP)

ஆசிய உட்கட்டமைப்பு மூதலீட்டு வங்கியினால் (AIIB) நிதியிடப்பட்டது

## கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியை நீடிப்பதற்கான அறிவித்தல்

கீழே தரப்பட்டுள்ள பொதிக்கு கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி பின்வரும் வகையில் நீடிக்கப்பட்டுள்ளதென ஆர்வமுள்ள தரப்பினருக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பொதி | வேலையின் விபரம் | கேள்விகளைக் கோரி பிரசுரிக்கப்பட்ட திகதி | கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் |
|---|---|---|---|
| 1 | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஆய்வுகூடம் மற்றும் வெளிக்கள உபகரணங்களின் பெறுகை **(IFT** இலக்கம்: RLVMMP/GOODS/ NCT/04-LOT 1/2/3/4/5/6/7) | 23-11-2022 | 02-01-2023ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை |

இதன் பிரகாரம் கேள்விகள் செல்லுபடியாகும் 119 நாட்கள் (2023 ஜனவரி 02ஆம் திகதி முதல் 2023 மே 01 வரை) மற்றும் கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் 147 நாட்களாகும். (2023 ஜனவரி 02ஆம் திகதி முதல் 2023 மே 29ஆம் திகதி வரை)

ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த சர்வதேச மற்றும் உள்நாட்டு கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை RLVMMP செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011 2559869)

மேற்படி கேள்வி அறிவித்தலின் ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகள் எவ்வித மாற்றமுமின்றி அவ்வாறேயிருக்கும்.

**தலைவர்,**
**செயற்றிட்டப் பெறுகைக் குழு,**
**தாக்கக் குறைப்பு செயற்பாடுகளினால் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்றிட்டம்,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**99/1, ஜாவத்த வீதி, கொழும்பு-05.**

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம் : 4/3/8/ද.මා.වසා./න
காணி அமைச்சின் இல.:4-3/3/2017/NRD/612.

கீழ்க்காணும் உப அட்டவணையில் குறிப்பிடப்படும் காணித் துண்டுகள் ஒரு பொதுத் தேவைக்காக அரசாங்கத்தால் சுவீகரி க்கப்பட்டுள்ளன. இந்த காணித்துண்டுகள் தொடர்பாக காணி எடுத்தற் சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழ் உரிமைகள் குறித்த வினவல் நடாத்தப்படும் திகதி ஆரம்ப உரிமை கோருவோருக்கு தனித்தனியாக அறிவிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம்29ம் திகதியின் 2303/53 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதி விஷேட வர்த்தமானியின் 111 ஆம் பகுதியைப் பார்க்கவும்.

| | |
|---|---|
| மாகாணம் | : மத்திய மாகாணம் |
| மாவட்டம் | : மாத்தளை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : கலேவெல |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : E433B, புவக்பிடிய |
| கிராமத்தின் பெயர் | : கலேவெல |
| இடத்தின் பெயர் | : கொனபான ஹேனவத்த, புவக்பிடிய குலம் மற்றும் வேறு இடம் |
| வரைபட இலக்கம் | : இ.வ.இ.385, பிற்சேர்க்கை இலக்கம் 7, தாள் இலக்கம் 7 |
| துண்டு இலக்கம் | : 261 தொடக்கம் 278 வரை (துண்டு 18) |
| விஸ்தீரணம் | : ஹெக்டயார் 0.2292 |

..................................................
**எம்.கே.பி.ஆரியரத்ன**
**பிரதேச செயலாளர் மற்றும் காணி எடுத்துக் கொள்ளல் உத்தியோகத்தர்,**
**கலேவெல பிரதேச செயலகம்.**

**2022/12ஆம் மாதம் 12 ஆம் திகதி**
**பிரதேச செயலகம், கலேவெல.**

SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service
The easiest & convenient way to send your
Marriage Proposal Ads,
classified@lakehouse.lk
for 15 Words - Rs. 1,000/-
For each additional word Rs. 25/-
Easy way to make your payment :- BOC - Acc.No. 000000377
LAKE HOUSE BRANCH
Open Light for Online Transfer
For Inquiries - Piyumi - 011 2 429 383 | Ramani - 011 2 429 347 | Gayani - 011 2 429 342 / 343

நீர் வழங்கல் அமைச்சு
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

# விலைக்கோரல் அறிவித்தல் - 2022-12-14

பின்வரும் வேலைகள் / வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| **சிவில் கேள்விகள்** | | | | | | | |
| 01 | பெலியத்த நீர் வழங்கல் திட்டத்திற்கான மேம்படுத்தல் வேலைகள் ஒப்பந்த இல: RSC(S)/P&C/C/IMPROVEMENT/ BELIATTA/RH/2022-143 | 4,000/-+ VAT | ரூபா 60,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் கட்டிட நிர்மாணத் துறையில் C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு | 3.91 மில்லியன் | பிஓநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை Tele:041-2222105 Fax 041-2221329-2 | 28/12/2022 பி.ப. 2.00 |
| 02 | மேற்கு மத்திய பிராந்திய புதிய சேவை இணைப்புகளை வழங்குவதற்கு அகழ்தல், மீள்நிரப்புதல் மற்றும் குழாய்களைப் பதித்தல் ஒப்பந்த இல: WC/DIS/2022/01 | 10,000/-+ VAT ** | ரூபா 100,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் ஐந்து வருடங்கள் தொடர்ச்சியான அனுபவம் சகிதம் நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C6 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | பிஓநி (மேற்கு - மத்திய) தேநீவவச, இல. 175A, கலுதொட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட. Tele:/Fax: 0112856420-2/ 0112812672 | 28/12/2022 மு.ப. 10.00 |
| 03 | மகுள்எல்ல நீர் வழங்கல் திட்டத்தின் பூஸ்டர் பம்பி இல்லத்தில் கொங்கிறீட் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(UVA)/REH/ BADULLA/2022/207 | 12,500/-+ VAT ** | ரூபா 183,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 18.29 மில்லியன் | பி.ஓ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை. Tele: 0552230934 Fax: 0552230974/ 0552222448 | 28/12/2022 பி.ப. 2.00 |
| **வழங்கல் கேள்விகள்** | | | | | | | |
| 04 | நாத்தாண்டிய நீர் வழங்கல் திட்டத்திற்கு Borehole type Submersible நீர் பம்பித் தொகுதி மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஒப்பந்த இல: RSC/(NW)/M-PUT/P/RH/NATH/2022/42 | 12,500/- + VAT | ரூபா 185,000/- | நீர்ப் பம்பித் தொகுதிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 12.31 மில்லியன் | பிஓநி (வடமேல்) அலுவலகம், தேநீவவச, தம்புள்ளை வீதி, குருநாகல். Tele: 037-2223158 Fax : 037-2230086 | 04/01/2023 பி.ப. 2.00 |
| **சேவைக் கேள்விகள்** | | | | | | | |
| 05 | வெலம்பொட நீர் வழங்கல் திட்டத்தின் நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி, நீர்த்தேக்கம் மற்றும் பம்பி இல்லம், கட்டிடங்கள் மற்றும் வளவுகளுக்கு சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல: ප්‍රාසේම(ම)/මද/සේවා/ක්‍රිහාන/වෙළම්බොඩ/2022/228 | 6,000/- + VAT | ரூபா 62,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027 2022-12-21ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பேராதனை, கெட்டம்பே முகாமையாளர் (மத்திய தெற்கு) அலுவலகத்தில் கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். (T:P. – 081 2388086 / Ext-201) | 28/12/2022 பி.ப. 2.00 |
| 06 | பேராதனை, கெட்டம்பேயிலுள்ள பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்திற்கு (மத்திய) ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல: RSC-C/P&C/SER/O&M/ JANITORIAL/2022/208 | 6,000/- + VAT | ரூபா 58,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele: 081-2386068 Fax: 081-2388027 2022-12-21ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பேராதனை, கெட்டம்பே, பிஓநி- மத்திய அலுவலகம், P&C பிரிவில் கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். (T:P. – 081 2388086 / Ext-360) | 28/12/2022 பி.ப. 2.00 |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | | |
| 07 | பொறுப்பதிகாரிக்கு (மொரட்டுவ) 04 எண்ணிக்கையான க்றூ கெப்கள் மற்றும் பொறுப்பதிகாரிக்கு (தெஹிவளை) 03 எண்ணிக்கையான க்றூ கெப்பகளை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல: W-S/P&C/H(06)/DEHI/O&M/**2022/50** | 2,000/- + VAT | ஒரு வாகனத்திற்கு ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் சம்பந்தப்பட்ட வாகனத்தின் உரிமையாளர்கள் | பி.ஓ.நி. (மேற்கு - தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ. Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946 | | 29/12/2022 மு.ப. 10.00 |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

# பெறுகை அறிவித்தல்

## பண்டாரவளை மாநகர சபைக்குச் சொந்தமான சீவலி வீதி வர்த்தக கட்டிடத் தொகுதியில் கடை அறைகளைக் குத்தகைக்கு விடுதல்

பண்டாரவளை மாநகர சபைக்குச் சொந்தமான பண்டாரவளை, சீவலி வீதியின் ஆரம்ப இடத்திற்கு அருகில் நிர்மாண வேலைகள் பூர்த்தியடையும் தருவாயில் உள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் சொத்துக்களை 30 வருடத்திற்கு நீண்டகால குத்தகைக்கு விடுவதற்காக குத்தகைதாரரை தேர்ந்தெடுப்பதற்காக 2022.12.30ம் திகதி மு.ப. 10.00 வரை பொறியிடப்பட்ட பெறுகை கேள்விகள் 18 வயதிற்கு கூடிய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. பெறுகை கேள்விப் படிவங்களை 2022.12.13 முதல் 2022.12.29 வரை அலுவலக நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை பண்டாரவளை மாநகர சபையில் அட்டவணை இல. 01இல் குறிப்பிடப்படும் மீளளிக்கப்படாத படிவக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் நிபந்தனை தொகுப்புக்கள் இரு பிரதிகளுடன் விநியோகிக்கப்படுவதுடன், இக்கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் நிபந்தனை தொகுப்புகளில் மூலப்பிரதி மற்றும் இரண்டாம் பிரதியை வேறு வேறு கடித உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் சொத்து விபரங்களைக் குறிப்பிட்டு பொறியிட்டு 2022.12.30 மு.ப. 10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு “தலைவர், கேள்விச் சபை, மாநகர சபை, பூங்கா வீதி, பண்டாரவளை” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

03. 2022.12.30ம் திகதி மு.ப. 10.00 இற்கு பண்டாரவளை மாநகர சபை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**நிபந்தனைகள்:**

01. சீவலி வீதி வர்த்தக கட்டிடத் தொகுதியின் கடை அறைகளை குத்தகைக்கு விடுதல் சம்பந்தமாக 2022.05.31ம் திகதி தினமின/ தினகரன்/ டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் ஒப்பந்த இல. 02 தவிர்த்து மற்றும் 03இல் குறிப்பிடப்படும் திகதி 2022.12.29ம் திகதியென கவனத்தில் கொள்ளுதல் மற்றும் ஏனைய நிபந்தனைகள் அவ்வாறே பொருத்தமாக்கிக் கொள்ளல் வேண்டும்.

**அட்டவணை இல. 01**

| தொடர் இல. | சொத்து விபரம் | கடை இலக்கம் | குறைந்தபட்ச கேள்வி (ரூ) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூ) | மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|---|
| 01 | சீவலி வீதி வர்த்தக கட்டிடத் தெகுதியின் (தரை மாடி) | GF-06 | 7,200,000.00 எழுபத்தி இரண்டு இலட்சம் | 100,000.00 ஒரு இலட்சம் | 20,000.00 இருபதினாயிரம் |

**ஜனக்க நிஷாந்த ரத்நாயக்க**
**(நகர முதல்வர்)**
**தலைவர், கேள்விச் சபை,**
**மாநகர சபை, பண்டாரவளை.**

2022.12.09
**பண்டாரவளை நகர சபை அலுவலகத்தில்**
**057-2222275**

# பிழை திருத்தம்

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

**எனது இல.:** DIV/MW/LND/3/1/2-1

**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் இல: 4-3/9/2014/WS/15**

2020 ஒகஸ்ட் 27ஆம் திகதிய 2190/29ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் III பகுதி காணியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டம் 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் கு.2458 துண்டு இல. 01இல் குறிப்பிட்டுள்ள திகதிக்கு பதிலாக வேறொரு தினத்திற்கு மாற்றுவதனால் அந்த அறிவித்தலை கீழே குறிப்பிட்டுள்ளவாறு திருத்தப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

நீக்கப்பட வேண்டிய திகதி
**2020.11.18**

நீக்கப்படவேண்டிய திகதிக்கு பதிலாக மாற்றபட வேண்டிய திகதி
**2023.01.04**

**எம்.எஸ்.ஜானக**
**பிரதேச செயலாளர்,**
**மாவதகம.**

2022ஆம் வருட டிசெம்பர் மாதம் 09ஆம் திகதி
**மாவதகம பிரதேச செயலகத்தில்**

# இலங்கை திரிபோஷ லிமிட்டட்

## 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்தல்

2023ஆம் வருடத்தில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் பொருட்கள், சேவைகள் மற்றும் ஒப்பந்தங்களை வழங்குவதற்காக இலங்கை திரிபோஷ கம்பனியில் பதிவுசெய்வதற்கு எதிர்பார்க்கும் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்க்காணும் நிபந்தனைகளின் கீழ் 2023 ஜனவரி 06ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கும் அட்டவணையில் குறிப்பிடப்படும் உருப்படிகள் மற்றும் இலக்கங்களை சரியாக உள்ளடக்கி எழுத்துமூல வேண்டுதலுடன் ஒரு வகுதிக்கான விண்ணப்பப்படிவத் தொகுதியொன்றிற்கு 1000.00 ரூபா மீளளிக்கப்படாத வைப்புத்தொகையை ரொக்கப் பணமாக இலங்கை திரிபோஷ லிமிட்டட்டினால் பேணப்படும் இலங்கை வங்கியின் ஜா-எல கிளையின் 71324617 எனும் நடைமுறைக் கணக்கிற்கு வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை (Bank slip) thriposha.finance@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 2023 ஜனவரி 06ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான காலத்திற்குள் அனுப்பியதன் பின்னர் குறித்த பதிவு செய்யும் ஆவணத்தொகுதி மின்னஞ்சல் (Email) ஊடாக உங்களுக்கு வழங்கப்படும்.

02. பூர்த்தி செய்யப்பட்ட சகல விண்ணப்பப்படிவத் தொகுதிகளை 2023 ஜனவரி 06ஆம் பி.ப. 2.00 மணிக்கு முன் thriposha.finance@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியின் ஊடாக அனுப்புதல் வேண்டும் அல்லது இலங்கை திரிபோஷ லிமிட்டட் நிறுவனத்தின் பாதுகாப்பு பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விகள் உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையை பொறியிட்டு, அதன் இடதுபக்க மேல் மூலையில் “2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்” என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

03. ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் நபர்களால் தமது தகுதியை எழுத்து மூல சான்றுகள் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

04. மேல் மாகாணத்திற்குள் உள்ள வழங்குநர்கள் விடயத்தில் விசேட கவனம் செலுத்தப்படும்.

பின்வரும் தொ.பே இலக்கத்தின் ஊடாக இது பற்றிய மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
- தொ.பே. 0112236588 / 0112237418 தொலைநகல் இல. - 0112237363

**தலைவர்,**
**இலங்கை திரிபோஷ லிமிட்டட்**
**த.பெ - 17, கப்புவத்த, ஜா-எல.**

**அட்டவணை**

2023ஆம் வருடத்தில் இலங்கை திரிபோஷ லிமிட்டட்டில் பதிவு செய்து கொள்ளும் வழங்கல் உருப்படிகள் மற்றும் அதற்காக அறவிடப்படும் பதிவுக்கட்டணங்கள்

| இலக்கம் | வழங்கல் உருப்படிகள் | பதிவுக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 1 | All types of Hardware | 1000.00 |
| 2 | All types of Electrical items, Equipment & Spares | 1000.00 |
| 3 | பெயாரிங் Bearings & V Belts | 1000.00 |
| 4 | Electronic components including Computers, Computer Parts, Toners | 1000.00 |
| 5 | காகிதாதிகள் Stationery | 1000.00 |
| 6 | அச்சு வேலைகள் Printing | |
| 7 | உராய்வு நீக்கி எண்ணெய்கள் Lubricants | 1000.00 |
| 8 | கன்வெயார் பெல்ட் Conveyor Belt | 1000.00 |
| 9 | பொறியியல் உபகரணங்கள் Engineering Equipment | 1000.00 |
| 10 | சீருடைகள் Uniforms, T-Shirts & Shoes & Safety Shoes | 1000.00 |
| 11 | உணவுப் பொருட்களை பதப்படுத்தும் இயந்திராதிகள் Food Processing Machinery | 1000.00 |
| 12 | பாதுகாப்பு உபகரணங்கள் Safety Equipment | 1000.00 |
| 13 | அலுவலக உபகரணங்கள் (மரச்சாமான்கள், உருக்கு, பிளாஸ்டிக் பொருட்கள்) Office Equipments | 1000.00 |
| 14 | துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் Sanitary Equipment | 1000.00 |
| 15 | ஆய்வுகூட உபகரணங்கள், இரசாயனப் பொருட்கள் மற்றும் சேவைகள் Laboratory Equipment, Chemicals & Services | 1000.00 |
| 16 | கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துதல் Sweeping (விலங்குணவுகளுக்குத் தகுதியான கழிவுப் பொருட்கள்/ Used Polythene/ Waste Papers etc) | 1000.00 |
| 17 | தொலைபேசி / இணையதள சேவைகள் Telephone & Internet Services & Related Services | 1000.00 |
| 18 | தீயணைப்பு உபகரணங்கள் Fire Equipment | 1000.00 |
| 19 | உயர்அழுத்த வாயு மற்றும் பராமரிப்பு சேவைகள் (ஒட்சிசன், ஆகன், எஸிட்லின்) Air Compressors & Repairing Services | 1000.00 |
| 20 | போக்குவரத்துச் சேவைகள் Transportation & Related Services | 1000.00 |
| 21 | விளம்பர நடவடிக்கைகள் Advertising & Related Services | 1000.00 |
| 22 | Labour Outsourcing (Manpower on Contract Basis) | 1000.00 |
| 23 | கொதிகலன் பாகங்கள் Boiler Parts | 1000.00 |
| 24 | பீடைக் கட்டுப்பாட்டுச் சேவைகள் Pest Control & Related Services | 1000.00 |
| 25 | Consultancy Services IT & Taxation | 1000.00 |
| 26 | Domestic & International Courier Services | 1000.00 |
| 27 | Security Services | 1000.00 |
| 28 | Translator Service (Sinhala, Tamil & English) Relating Government Cabinet Papers & Others | 1000.00 |
| 29 | Health Insurance | 1000.00 |
| 30 | Shopping Bags & Garbage Bags (Polysack bags & Eco-Friendly | 1000.00 |
| | **BUILDING MATERRIALS, MAINTENANCE ITEMS & TOOLS** | |
| 31 | Fire Extinguishing Equipment & Safety Equipment | 1000.00 |
| 32 | All kinds of Building material, construction.(fine-sand, coarse sand, metals & related items) | 1000.00 |
| 33 | Machinery tools & spares | 1000.00 |
| 34 | Timber | 1000.00 |
| 35 | Plastic, Plastic Pallets & Fiber glass Products | 1000.00 |
| 36 | Aluminum Fitting Glass, Glassware & Related | 1000.00 |
| 37 | Bathroom fittings, Wall & floor tiles | 1000.00 |
| 38 | Steam Line Installation | 1000.00 |
| 39 | Steam Line Parts Suppliers | 1000.00 |
| 40 | Fire System Supply & Installation | 1000.00 |
| 41 | All types of Balance Supply & repairing | 1000.00 |
| 42 | Sewage treatment plant supply & maintenance item supply. | 1000.00 |
| 43 | Diesel Steam Boiler Repairing | 1000.00 |
| 44 | Water treatment plant material supply. | 1000.00 |
| | **ELECTRICAL ITEMS & SERVICES** | |
| 45 | IT Hardware & Software Supply, Service & Maintenance | 1000.00 |
| 46 | Telephone Equipment | 1000.00 |
| 47 | Supply & Installation of Network Cabling & Equipment (CCTV) | 1000.00 |
| | **ENGINEERING SERVICES** | |
| 48 | Repairs to Electric Motors, Water Pumps, Fans, including Re-Winding | 1000.00 |
| 49 | Repairs to Generators | 1000.00 |
| 50 | Repairs & Servicing to Air Conditioners | 1000.00 |
| 51 | Construction and repairs to Buildings/ Roads/ Other Structure | 1000.00 |
| 52 | Electrical services Wiring, | 1000.00 |
| 53 | Repairs to Water Supply, Sewerage and Sanitary Plumbing | 1000.00 |
| 54 | Fabrication and Installation of Iron / Aluminum fixtures related to Buildings | 1000.00 |
| 55 | Consultancy Service for Buildings / Building Services / Related Machinery & Equipment | 1000.00 |
| 56 | Consultancy Service for Electrical Services | 1000.00 |
| 57 | Supplying and Fixing Fixed Timber Furniture / Carpentry Works | 1000.00 |
| 58 | Drafting / Blue Printing Drawing, Auto Cad Drawings & Preparation of Bill of Quantity (BoQ) for Maintenance Work | 1000.00 |
| 59 | Hiring of Machineries (JCB, Excavator, Compressor, Forklift, Boom truck crane, etc.) | 1000.00 |
| 60 | Mechanical engineering works (fabricating, milling, machining, welding, etc.) | 1000.00 |
| | **VEHICLE SERVICE** | |
| 61 | Body Repair & Painting (Tinkering) | 1000.00 |
| 62 | Electrical Works (Auto) | 1000.00 |
| 63 | Battery, Tyre & Tube | 1000.00 |
| 64 | Vehicle Spare Parts (Body parts) | 1000.00 |
| 65 | Vehicle Repairing (Running Repairs - Engine & Gear Box) | 1000.00 |
| 66 | Cushion Works (All Interior works) | 1000.00 |
| 67 | Air Conditioning | 1000.00 |
| 68 | Engine Tuning (E.F.R) | 1000.00 |
| 69 | Auto Vehicle Repairing | 1000.00 |
| 70 | Electrical Engineering Works (Installations) | 1000.00 |
| 71 | Civil Engineering Works | 1000.00 |
| 72 | Mechanical Engineering Works | 1000.00 |

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# ஏல விற்பனை அறிவித்தல்

# இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

கடன் தொடர்பு இலக்கங்கள் : 77444394, 80120240, 81254475, 81256302

சிங்ஹ லங்கா ரைஸ் மில் மற்றும் வரையறுக்கப்பட்ட சிங்ஹ லங்கா ரைஸ் மில் (தனியார்) PV 114394) நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வசதிகள்.

1. **தியபெதும, கட்டுகெலியாவ, வரையறுக்கப்பட்ட சிங்ஹ லங்கா (தனியார்) ரைஸ் மில் நிறுவனத்தின் திரு.லுனுகம விதானேலாகே நதீஷா சுராஜ் சமித ஜயவிக்ரம ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.**

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிஸக் குடியரசின் 2019.09.12ஆம் திகதி 2141ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019 செப்டெம்பர் 02ஆம் திகதி திங்கட்கிழமை டெய்லி நியூஸ், தினகரன் மற்றும் தினமின ஆகிய பத்திரிகைகளிலும் அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T&H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர். திரு.துசித்த கருணாரத்ன அவர்கள் 2023.01.04 ஆம் திகதி புதன் கிழமை மு.ப.11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

**1.** வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், எலஹர பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் சிங்ஹல பற்றுவ, தியபெதும கிராம உத்தியோகத்தர் பிரிவில் இஹகுளுவெவ கிராமத்தில் அமைந்த **“ராஜயா இடம”**என அழைக்கும் காணி அளவையாளர் நாயகம் அதிகாரமளித்த F.T.P25ல் விபரித்த **துண்டு 350** என அடையாளமிட்ட காணித்துண்டு **வடக்கில்** துண்டு இல.349 கெவது இடமயும், **கிழக்கில்** அரசாங்கக் காணி துண்டு இல.413ம், **தெற்கில்** துண்டு இல.351 கெவது இடமயும், **மேற்கில்** துண்டு இல.357 பாதை ஒதுக்கமும் எல்லைகளாகக் கொண்டு **இரண்டு ஏக்கர்கள் இரண்டு றூட்கள் மற்றும் முப்பத்தொன்பது பேர்ச்சுகள் (ஏ2.றூ2.பே.39)** விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது **பொலன்னறுவ** மாவட்ட காணிப்பதிவகத்தில் **LDO/E/27/169** ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் டப்ளியூ.ஏ.பிரேமரத்ன தயாரித்த 18.11.2014 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல.2014/701ன் படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிட்ட** இஹகுளுவெவ கிராமத்தில் அமைந்த **“கொட இடம”** என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் டப்ளியூ.ஏ.பிரேமரத்ன தயாரித்த 18.11.2014 திகதியிட்ட வரைபடம் இல.2014/701ல் விபரித்த துண்டு இல.1 என அடையாளமிட்ட காணித்துண்டு **வடக்கில்** துண்டு இல.349ம், **கிழக்கில்** துண்டு இல.413ம். **தெற்கில்** துண்டு இல.351ம், **மேற்கில்** துண்டு இல.357ம் எல்லைகளாகக் கொண்டு **இரண்டு ஏக்கர்கள் இரண்டு றூட்கள் மற்றும் முப்பத்தொன்பது பேர்ச்சுகள் (ஏ2.றூ2.பே.39) அல்லது ஹெக்டயர்கள் ஒன்று தசம் ஒன்று ஒன்று பூச்சியம் நான்கு (ஹெக்டயர்கள் 1.1104)** விஸ்தீரணமுடைய காணியும் **அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.**

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை**

**கீழ் குறிப்பிட்ட ஒதுக்கங்கள் மற்றும் நிபந்தனைகள் முதலாவது அட்டவணையின் ஆதனம் இல.01 க்கு சம்பந்தப்பட்டவை ஆகும்.**

**ஒதுக்கங்கள்:**

**01. வைத்திருப்பவையின்பேரில் அல்லது கனிப்பொருள்கள் எல்லாவற்றுக்கும் (இவ் வழங்கலில் பெறுமதி வாய்ந்த கற்கள் உட்பட) உரிமையும் எவையேனும் அத்தகைய கனிப்பொருள்களை அகற்றுவதற்கோ, தேடி எடுப்பதற்கோ,வேலை செய்வதற்கோ அகழ்வதற்கோ வைத்திருக்கும் உரிமை அரசாங்கத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.**

**02. இவ் வழங்கல் திகதியில் தற்சமயம் வைத்திருப்பவை மீதான வழி உரிமை அல்லது ஏனைய பணிகளுக்கு சொந்தக்காரருக்கான உரித்து உரிமை.**

**நிபந்தனைகள்**

**01. உரிமையாளர் குறித்த உப பிரிவின் விஸ்தீரணத்தில் 1/4 ஏக்கர் மேட்டுநிலம் ................................ ஹெக்டயர்கள் ஏக்கர்கள் நீர்ப்பாசனக்காணி அலகு அல்லாது காணப்படும் பிரிக்கப்பட்டதொரு பாகத்தை விற்பனை செய்யலாகாது.**

**02. இங்கு குறித்த ஆகக்குறைந்த பகுதி 1/4 ஏக்கர்கள் தவிர்ந்த வைத்திருக்கும் பிரிக்கப்படாத பங்கை உரிமையாளர் விற்பனை செய்யலாகாது.**

**03. நிபந்தனை 1ல் குறிப்பிட்ட உப பிரிவின் அலகு தவிர்ந்த விஸ்தீரணத்தில் வைத்திருக்கும் பிரிக்கப்பட்ட குறைந்த பாகத்துக்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக முடியாது**

**04. நிபந்தனை 2ல் குறிப்பிட்ட ஆகக்குறைந்த பகுதி தவிர்ந்த வைத்திருப்பவைகளின் பிரிக்கப்படாத பங்குக்கு ஒருவரும் உரிமையாளராக முடியாது.**

**05. வைத்திருப்பவை அல்லது நீர்ப்பாசன வசதியளிக்கக்கூடிய எவையேனும் பகுதி அல்லது இதன் பின்பு நீர்ப்பாசன கட்டளைச்சட்டத்தின் முன் ஏற்பாடுகளின் (அத்தியாயம் 453) கீழ் மற்றும் அதன் கீழான எவையேனும் விதிகளுடன் நீர்ப்பாசன பிரதேசம் தொடர்பில் நிர்மாண வேலையில் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்ட எவையேனும் நீர்ப்பாசன வேலை அல்லது இதன் பின்பு நிர்மாணிக்கப்படுபவை தொடர்பில் உரிமையாளர் இணங்க வேண்டும்.**

**06. அரசாங்க அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகார சபையிடமிருந்து எழுத்தில் அனுமதி பெற்றால் அன்றி எந்தவொரு கனிப்பொருளை தேடவோ, அகழ்வதற்கோ, அல்லது காணியை விற்பதற்கோ உரிமையாளருக்கு முடியாது**

**07. பிரதேச செயலாளரின் எழுத்து மூலமான முன் அனுமதி இன்றி இதன் எந்தவொரு பகுதியையும் வைத்திருக்க ஏற்பாடு இல்லை.**

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.**

**இலங்கை வங்கி**
**(தியபெதும)**
**திகதி : 2022.11.18**

**திருமதி.ஜீ.பீ.டீ.சீ.சமரசிங்ஹ**
**முகாமையாளர்**

Repeat Your Ad For Better Offers

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# ஏல விற்பனை அறிவித்தல்

# இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

கடன் தொடர்பு இலக்கங்கள் : 80120240, 81254475, 81256302

சிங்ஹ லங்கா ரைஸ் மில் மற்றும் வரையறுக்கப்பட்ட சிங்ஹ லங்கா ரைஸ் மில் (தனியார்) நிறுவனத்திற்கு PV 114394 வழங்கப்பட்ட கடன்களுக்கான பகுதியளவு கொடுப்பனவு)

1. **தியபெதும, கட்டுகெலியாவ, எனும் இடத்தில் உள்ள வரையறுக்கப்பட்ட சிங்ஹ லங்கா (தனியார்) ரைஸ் மில் நிறுவனத்தின் ஷானக விராஜ் ஜயவிக்ரமவின் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.**

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிஸக் குடியரசின் **2019.09.12ஆம் திகதி திங்கட்கிழமை 2141ஆம்** இலக்க வர்த்தமானியிலும் 2019.09.02ஆம் திகதி டெய்லி நியூஸ், தினகரன் மற்றும் தினமின ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சொத்தையும் நிலமனையையும் இல.182/3 (50/3), விஹார மாவத்தை கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த **ஏலநிறுவனத்தின் ஏலதாரர். திரு.துசித்த கருணாரத்ன அவர்கள் 2023.01.04 ஆம் திகதி புதன் கிழமை மு.ப.11.30 மணிக்கு** அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

**1.** மேற்குறிப்பிட்ட வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், எலஹர பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் சிங்ஹல பற்றுவ, கட்டுகெலியாவ கிராம உத்தியோகத்தர் பிரிவு இல.28ல் இஹகுளுவெவ கிராமத்தில் அமைந்த **“ரஜயே இடம”**என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ.ஜீ.ரேணுகா அயோனி தயாரித்த 10.11.2016 திகதியிட்ட வரைபடம் இல.1074ல் விபரித்த துண்டு 02 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு **வடக்கில்** F.T.P.25ல் துண்டு இலக்கங்கள் 350 மற்றும் 413ம், **கிழக்கில்** F.T.P.25ல் துண்டு இலக்கங்கள் 413 மற்றும் 352ம், **தெற்கில்** மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.1074ல் துண்டு இல.1ம், **மேற்கில்** F.T.P.25ல் துண்டு இல350ம் எல்லைகளாகக் கொண்டு **ஒரு ஏக்கர் (ஏ1.றூ0.பே.0)** அல்லது ஹெக்டயர்கள் பூச்சியம் தசம் நான்கு பூச்சியம் நான்கு ஏழு (ஹெக்டயர்கள் 0.4047) விஸ்தீரண முடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது **பொலன்னறுவ மாவட்ட** காணிப்பதிவகத்தில் **LDO/E/27/169**ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2ஆவது ஒதுக்கங்கள் மற்றும் நிபந்தனைகள் சம்பந்தப்பட்டவை ஆகும்

**ஒதுக்கங்கள்:**

**01. வைத்திருப்பவையின்பேரில் அல்லது கனிப்பொருள்கள் எல்லாவற்றுக்கும் (இவ் வழங்கலில் பெறுமதி வாய்ந்த கற்கள் உட்பட) உரிமையும் எவையேனும் அத்தகைய கனிப்பொருள்களை அகற்றுவதற்கோ, தேடி எடுப்பதற்கோ,வேலை செய்வதற்கோ அகழ்வதற்கோ வைத்திருக்கும் உரிமை அரசாங்கத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.**

**02. இவ் வழங்கல் திகதியில் தற்சமயம் வைத்திருப்பவை மீதான வழி உரிமை அல்லது ஏனைய பணிகளுக்கு சொந்தக்காரருக்கான உரித்து உரிமை.**

**நிபந்தனைகள்**

**01. உரிமையாளர் குறித்த உப பிரிவின் விஸ்தீரணத்தில் 1/4 ஏக்கர் மேட்டுநிலம் ஹெக்டயர்கள் ஏக்கர்கள் நீர்ப்பாசனக்காணி அலகு அல்லாது காணப்படும் பிரிக்கப்பட்டதொரு பாகத்தை விற்பனை செய்யலாகாது.**

**02. இங்கு குறித்த ஆகக்குறைந்த பகுதி 1/4 ஏக்கர்கள் தவிர்ந்த வைத்திருக்கும் பிரிக்கப்படாத பங்கை உரிமையாளர் விற்பனை செய்யலாகாது.**

**03. நிபந்தனை 1ல் குறிப்பிட்ட உப பிரிவின் அலகு தவிர்ந்த விஸ்தீரணத்தில் வைத்திருக்கும் பிரிக்கப்பட்ட குறைந்த பாகத்துக்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக முடியாது**

**04. நிபந்தனை 2ல் குறிப்பிட்ட ஆகக்குறைந்த பகுதி தவிர்ந்த வைத்திருப்பவைகளின் பிரிக்கப்படாத பங்குக்கு ஒருவரும் உரிமையாளராக முடியாது.**

**05. வைத்திருப்பவை அல்லது நீர்ப்பாசன வசதியளிக்கக்கூடிய எவையேனும் பகுதி அல்லது இதன் பின்பு நீர்ப்பாசன கட்டளைச்சட்டத்தின் முன் ஏற்பாடுகளின் (அத்தியாயம் 453) கீழ் மற்றும் அதன் கீழான எவையேனும் விதிகளுடன் நீர்ப்பாசன பிரதேசம் தொடர்பில் நிர்மாண வேலையில் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்ட எவையேனும் நீர்ப்பாசன வேலை அல்லது இதன் பின்பு நிர்மாணிக்கப்படுபவை தொடர்பில் உரிமையாளர் இணங்க வேண்டும்.**

**06. அரசாங்க அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகார சபையிடமிருந்து எழுத்தில் அனுமதி பெற்றால் அன்றி எந்தவொரு கனிப்பொருளை தேடவோ, அகழ்வதற்கோ, அல்லது காணியை விற்பதற்கோ உரிமையாளருக்கு முடியாது**

**07. பிரதேச செயலாளரின் எழுத்து மூலமான முன் அனுமதி இன்றி இதன் எந்தவொரு பகுதியையும் வைத்திருக்க ஏற்பாடு இல்லை.**

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.**

**இலங்கை வங்கி**
**(தியபெதும)**
**திகதி : 2022.11.18**

**திருமதி.ஜீ.பீ.டீ.சீ.சமரசிங்ஹ**
**முகாமையாளர்**

# இலங்கை திரிபோஷ லிமிட்டட்

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்காக மத்திய வளிச்சீராக்கல் முறைமையை வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பு

1. இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்காக மத்திய வளிச்சீராக்கல் முறைமையை வழங்கல். நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கம்பனி பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டவராகவும் உற்பத்தியாளருடன் அதிகாரம் பெற்ற விநியோக உரிமையைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் sub-speciality Mechanical Ventilation and Air Conditioning இன் கீழ் மின்னியல் மற்றும் பொறிமுறை சேவையில் (Electrical and Mechanical Service) விஷேடத்துவத்தில் ஈஎம் II அல்லது மேற்பட்ட தரத்தை நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை ஜா-எல, கப்புவத்த, நீர்கொழும்பு வீதி, த.பெட்டி 17, இலங்கை திரிபோஷ லிமிட்டெட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் பெற்றுக் கொள்ளலாம்.
5. 2023.01.05 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பத்தையும் (இந்த விண்ணப்பமானது தொடர்பு இலக்கம், மின்னஞ்சல் முகவரி மற்றும் இந்த கேள்விக் காலம் முழுவதுமாக தொடர்பு கொள்ளக்கூடிய அதிகாரமுள்ள நபரின் விபரங்கள் ஆகியவற்றை அடக்கியிருத்தல் வேண்டும்) ஒப்பந்தங்களின் பதிவாளரினால் வழங்கப்பட்ட பிசிஏ-3 மற்றும் ரொக்கப் பண முறைமையில் 8,000 ரூபாவையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஜா-எல, கப்புவத்த, நீர்கொழும்பு வீதி, த.பெட்டி 17, இலங்கை திரிபோஷ லிமிட்டெட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு 2023.01.06 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை திறக்கும் திகதியாகிய 2023.01.06 இலிருந்து 2023.04.07 ஆம் திகதி வரையும் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் ஒப்பந்தக் காலமானது உண்மையான ஆரம்ப திகதியிலிருந்து 119 நாட்களுக்கும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 450,000 இலங்கை ரூபா பெறுமதியில் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதுமாகவிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து (2023.01.06) 119 நாட்களுக்கு 2023.05.05 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கீழேயுள்ள முகவரியில் குறிப்பிட்டுள்ள நேரத்தின் பின்னர் உடனடியாகவே (2023.01.06 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு) திறக்கப்படும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:

**தலைவர்,**
**உயர்மட்ட பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோஷ லிமிட்டட்,**
**த.பெட்டி 17,**
**நீர்கொழும்பு வீதி,**
**கப்புவத்த,**
**ஜா-எல.**

## முத்திரையிடப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பு

### மில்கோ தலைமை அலுவலகம் மற்றும் தொழிற்சாலைக்கு சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்குதல்

### மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்

(அரசுரிமை தொழில் முயற்சி)

**இலங்கையில் ''ஹைலண்ட்'' என்ற வர்த்தக நாமத்தின் கீழ் பாற்பண்ணை உற்பத்திகளை தயாரிக்கும் முதன்மையான பால் பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் நிறுவனமே மில்கோ (பிறைவட்) லிமிட்டெட் ஆகும்.** மில்கோ தலைமை அலுவலகத்திற்கு சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு சேவைகளை 2023-01-01ஆம் திகதி முதல் **ஒரு வருட காலப்பகுதிக்கு வழங்குவதற்காக ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்டின் கேள்விக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.**

- முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைக்கோரல் இல. : M/PUR/TEN/2022/09
- முடிவுறுத்தப்படும் மற்றும் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் : 30.12.2022ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு
- மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் : ரூபா 3000.00

மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்டிற்குரிய பின்வரும் தொழிற்சாலை, மற்றும் மில்கோ தலைமை காரியாலயத்திற்க சேவையினை வழங்குவதற்கு தொழிற் பரப்பினை பரீட்சித்து பார்த்தன் பின் விலைமனுக்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

I. கொழும்பு - நாரஹேன்பிட்ட பால் தொழிற்சாலை
II. கொழும்பு - கொள்ளுபிட்டி தலைமை காரியாலயம்
III. கண்டி - திகன பால் தொழிற்சாலை

**பொது நிபந்தனைகள்:**

1. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியாக வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்பு பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்கான செல்லுபடியாகும் வியாபாரப் பதிவுச் சான்றிதழ்
3. கடந்த மூன்று வருடங்களில் (2020, 2021 மற்றும் 2022ஆம் வருடங்கள்) அரசாங்கத் திணைக்களங்கள், தனியார் அமைப்புகளுக்கு சுத்திகரிப்பு சேவைகளை வழங்கிய அனுபவம். (ஆவணச் சாட்சிகளை வழங்குதல் வேண்டும்)
4. சேவைகள் மற்றும் வரிச் செலுத்தல்கள் தொடர்பில் அரசாங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.
5. கொவிட்-19 அல்லது வேறு ஏதாவது தொற்றுகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை கொன்டிருப்பவராக வேண்டும்.
6. சேவைக்கு தேர்ச்சிபெற்ற பணியாளர்களை மட்டுமே ஈடுபடுத்துதல் வேண்டும்.
7. சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டுச் சேவைகளை சிறந்த முறையில் மேற்கொள்ளும் இயலுமை இருத்தல் வேண்டும் என்பதுடன் நாளாந்த சேவைகளை மேற்கொள்ளும் நாட்களில் குறைந்தபட்ச தொழிலாளர்களுக்கிடையில் ஒரு ஆண் தொழிலாளரும் இருத்தல் வேண்டும்.
8. 2022.12.15ஆம் திகதி முதல் 29.12.2022ஆம் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் (வாரத்தின் வேலை நாட்களில்) எழுத்து மூலமான விண்ணப்பம் அத்துடன் 3000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தின் வங்கி வரவுத்துண்டின் மூலப் பிரதி என்பவற்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கொழும்பு-03, காலி வீதி, 345ஆம் இலக்கத்திலுள்ள 5ஆம் மாடியின் மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்டிலிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள தரப்பினர் பெற்றுக்கொள்ளலாம். (மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்டின் **004100180210331** எனும் கணக்கிலக்கத்திற்கு ரொக்கப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும்)
9. இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட பத்தாயிரம் ரூபா (10,000.00 ரூபா) பெறுமதியான நிபந்தனையற்ற கோரிக்கை வங்கி உத்தரவாதமொன்று விலைக்கோரல் பிணைமுறியான சகல விலைமனுக்களுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. கேள்வி ஆவணங்களை கொள்வனவுப் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
11. எவ்விதக் காரணமும் காட்டாமல் எந்தவொரு கேள்வியையும் அல்லது சகல கேள்விகளையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை கேள்விக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
12. மில்கோ நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்கள் இந்த கேள்வியில் பங்குபற்ற முடியாது.

இந்த கேள்வி கோரல் பற்றிய மேலதிக தகவல், விபரம் அல்லது விளக்கம், தேவைப்படின் மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கொள்வனவு முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 011-4500530-534.

**தலைவர் - கேள்விக்குழு**
**மில்கோ (பிறைவட்) லிமிடட்**
**இல. 345, ஐந்தாம் மாடி, காலி வீதி, கொழும்பு-03.**

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம்: GDS/L/8/432C/1
காணி அமைச்சின் இல.: 4-3/20/2019/NRD/372A

கீழ்க்காணும் உப அட்டவணையில் குறிப்பிடப்படும் காணித் துண்டுகள் ஒரு பொதுத் தேவைக்காக அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இந்த காணித்துண்டுகள் தொடர்பாக காணி எடுத்தற் சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் உரிமைகள் குறித்த வினவல் நடாத்தப்படும் திகதி ஆரம்ப உரிமை கோருவோருக்கு தனித்தனியாக அறிவிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29ம் திகதியின் 2303/52 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதி விஷேட வர்த்தமானியின் 111 ஆம் பகுதியைப் பார்க்கவும்.

| | |
|---|---|
| மாகாணம் | : மத்திய மாகாணம் |
| மாவட்டம் | : மாத்தளை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : கலேவெல |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : E432 C தண்டுயாய |
| கிராமத்தின் பெயர் | : தண்டுயாய |
| இடத்தின் பெயர் | : தண்டுயாய, தண்டுயாயவத்த மற்றும் வேறு இடம் |
| வரைபட இலக்கம் | : இ.வ.இ. 346, பிற்சேர்க்கை இல. 88 தாள் இலக்கம் 82 |
| துண்டு இலக்கம் | : 2040 தொடக்கம் 2064 வரை (துண்டு 22) |
| விஸ்தீரணம் | : ஹெக்டயார் 0.3577 |

.....................................
**எம்.கே.பி. ஆரியரத்ன**
**பிரதேச செயலாளர் மற்றும் காணி எடுத்துக்கொள்ளல் உத்தியோகத்தர்,**
**கலேவெல பிரதேச செயலகம்.**

**2022/12ஆம் மாதம் 12 ஆம் திகதி**
**பிரதேச செயலகம், கலேவெல.**


Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer







## 2012 இல 22 ஐக் கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தல்கள்கட்டளைச் சட்டத்தின் 66எ பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்.

தென் மாகாண, உள்ளூராட்சித் திணைக்களத்தின் உள்ளூராட்சி ஆணையாளரான விக்கிரமசேகர ஆகிய நான் 2012 இல 22 ஐக் கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66எ பிரிவின் கீழ் என்னிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் தென் மாகாணத்தினுள் அமைந்துள்ள இங்கு கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையின் கீழ் பெயர் குறிப்பிடப்படும் உள்ளூராட்சி நிறுவனத்திற்கான உப தவிசாளரை தேர்ந்தெடுக்கும் பணிக்கு 2022.11.25 ஆம் திகதியில் கூட்டப்பட இருந்த, பின்னர் ஒத்திவைக்கப்பட்ட கூட்டம் மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66இ (4) பிரிவின் பிரகாரம் அட்டவணையின் கீழ் நேர் எதிரே காட்டப்பட்டுள்ள திகதியில் குறித்தநேரத்தில் அங்கு குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மீண்டும் கூடப்படும் என இத்தால் அறியத்தருகிறேன்.

**ரணில் விக்கிரமசேகர,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**தென் மாகாணம்.**

**2022 டிசம்பர் மாதம் 08ஆந் திகதி,**
**6 ஆம் மாடி, காலி மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள,**
**தென் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தில்.**

**அட்டவணை**

| தொடர் இல | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | தேர்ந்தெடுக்கப்படும் பதவி | கூட்டப்படும் திகதி | கூட்டப்படும் நேரம் | கூட்டப்படும் இடம் |
|---|---|---|---|---|---|
| 1. | அம்பலாங்கொடை நகர சபை | கௌரவ உப தவிசாளர் | 2022.12.23 | மு.ப. 10.00 | அம்பலாங்கொடை நகர சபையின் பொது நூலகக் கட்டிடத்தின் மேல் மாடியில் அமைந்துள்ள சபைக் கூட்ட மண்டபத்தின் (நகரசபையின் முன்னால் அமைந்துள்ள பிரதான நூலகத்தில்) |

**Repeat Your ad For Better Offers**

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)
## 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம்: GDS/L/8/E432/1
காணி அமைச்சின் இல.: 4-3/20/2019/NRD/372

கீழ்க் காணும் உப அட்டவணையில் குறிப்பிடப்படும் காணித் துண்டுகள் ஒரு பொதுத் தேவைக்காக அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இந்த காணித்துண்டுகள் தொடர்பாக காணி எடுத்தற் சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் உரிமைகள் குறித்த வினவல் நடாத்தப்படும் திகதி ஆரம்ப உரிமை கோருவோருக்கு தனித்தனியாக அறிவிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29 ம் திகதியின் 2303/52 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதிவிஷேட வார்த்தமானியின் 111ஆம் பகுதியைப் பார்க்கவும்.

| | |
|---|---|
| மாகாணம் | : மத்திய மாகாணம் |
| மாவட்டம் | : மாத்தளை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : கலேவெல |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : E432 கலேவெல நகர |
| கிராமத்தின் பெயர் | : கலேவெல |
| இடத்தின் பெயர் | : தண்டுயாயவத்த மற்றும் வேறு இடம் |
| வரைபட இலக்கம் | : இ.வ.இ.346, பிற்சேர்க்கை இல. 89, தாள் இலக்கம் 83 |
| துண்டு இலக்கம் | : 2065 தொடக்கம் 2072 வரை (துண்டு 08) |
| விஸ்தீரணம் | : ஹெக்டயார் 0.1055 |

..................................................
**எம்.கே.பி.ஆரியரத்ன**
**பிரதேச செயலாளர் மற்றும் காணி எடுத்துக் கொள்ளல் உத்தியோகத்தர்,**
**கலேவெல பிரதேச செயலகம்.**

**2022/12ஆம் மாதம் 12 ஆம் திகதி**
**பிரதேச செயலகம், கலேவெல.**

## மீட்கப்படாத தங்க ஆபரணங்களின் ஏல விற்பனை

பான் ஏஷியா வங்கியின் அனைத்துக் கிளைகளிலும் அடகு மற்றும் ஈடு வைக்கப்பட்டவையும் 31.08.2022 ஆம் திகதி அல்லது அதற்கு முன் மீட்கப்பட வேண்டியவையும் ஆனால் 06.01.2023 ஆம் திகதி மீட்கப்படாமலிருப்பவையுமான அனைத்துத் தங்க ஆபரணங்களும் 07.01.2023 ஆம் திகதி தொடக்கம் மு.ப.9.00 மணிக்கு பகிரங்க ஏல விற்பனை மூலம் (கையிருப்பு உள்ளவரை) விற்பனை செய்யப்படும்.

**குருநாகல் கிளை**
இல.22, சூரதிஸ்ஸ மாவத்தை, குருநாகல்.

ஏலவிற்பனையை பிற்போடும் மற்றும் இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்குண்டு.

பான் ஏஷியா வங்கி
**உன்னதமான உள்நாட்டு வங்கி**

உதவிப் பொது முகாமையாளர் (செயற்பாட்டு மற்றும் நிர்வாகம்)
இல.450, காலி வீதி, கொழும்பு - 03.

## கடுவெல மாநகர சபை

## 2023 ஆம் ஆண்டிற்கான ஆதன மதிப்பீட்டு பதிவேட்டினை பரிசீலனை செய்வதற்கு இடமளித்தலும் மதிப்பீடுகள் பற்றிய ஆட்சேபனைகளை ஏற்றுக்கொள்ளுதலும்

2023 ஆம் ஆண்டில் கடுவெல மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் வரிப்பணம் செலுத்தப்படுவதற்கு கட்டுப்பட்ட ஆதனங்களின் மதிப்பீட்டுகளை உள்ளடக்கிய மதிப்பீட்டு பதிவேடு கடுவெல, பத்தரமுல்ல மற்றும் அத்துருகிரிய ஆகிய மாவட்ட அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளது. 2023 சனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வார நாட்களில் அலுவலக நேரங்களில் மேற்படி மதிப்பீட்டு பதிவேட்டினை பார்வையிட முடியும். சம்பந்தப்பட்ட ஆதன உரிமையாளர் அல்லது அதில் வதிபவருக்கு தனது அடையாளத்தை உறுதிப்படுத்திய பின்னர் மாத்திரமே சம்பந்தப்பட்ட ஆதனத்தின் விபரங்களை பரிசீலிக்க முடியும் என்பதுடன் தனக்கு சொந்தமில்லாத எந்தவொரு ஆதனத்தின் விபரங்களையும் பரிசீலிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாதென தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

2023 ஆம் ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மேற்படி வருடாந்த மதிப்பீடு சம்பந்தமாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2023 சனவரி மாதம் 31 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் "மாநகர ஆணையாளர், கடுவெல மாநகர சபை, கடுவெல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவோ அல்லது கடுவெல பத்தரமுல்ல மற்றும் அத்துறுகிரிய மாவட்ட அலுவலகங்களில் அதற்கென வைக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு ஆட்சேபனை புத்தகத்தில் குறிப்பிடவோ முடியும். ஆட்சேபனை தெரிவிக்கும் போது அதனை தனது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆதன உரிமையாளருக்கு அல்லது அதில் வதிபவருக்கு மாத்திரமே தெரிவிக்க முடியும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

மேற்படி ஆதனத்துடன் தொடர்புடைய அற்றோனி தத்துவத்தைக் கொண்டவரும் இவ்விடயத்தில் ஆதன உரிமையாளராக உள்ளடக்கப்படுகின்றார். ஆகவே, அற்றோனி தத்துவத்தைக் கொண்டுள்ளவர் சட்டத்தரணி ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டதும் பதிவுசெய்யப்பட்டதுமான அற்றோனி பத்திரத்துடன் அற்றோனி தத்துவம் வழங்கியவர் உயிருடன் இருக்கின்றார் என்பதையும் அற்றோனி பத்திரம் இரத்துசெய்யப்படவில்லை என்பதையும் குறிப்பிட்டு சத்தியக் கடதாசியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**2022.12.05**

**மாநகர ஆணையாளர்**
**கடுவெல மாநகர சபை.**

## பிழை திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

**எனது இல.: DIV/MW/LND/3/1/2-7**

**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் இல: 4-3/16/2017/PT/270**

2020 ஒக்டோபர் 05ஆம் திகதிய 2196/4 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் III பகுதி காணியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டம் 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் இ.கி.வ. 1107 வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள 0.0127 ஹெக்டயார் விஸ்தீரணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி நீக்கப்பட்டு அதற்கு பதிலாக வேறொரு தினத்திற்கு மாற்றுவதனால் அந்த அறிவித்தலில் கீழே குறிப்பிட்டுள்ளபடி திருத்தப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

நீக்கப்படவேண்டிய திகதி
**2020.11.11**

நீக்கப்படவேண்டிய திகதிக்கு பதிலாக மாற்றப்படவேண்டிய திகதி
**2023.01.25**

**எம்.எஸ்.ஜானக**
**பிரதேச செயலாளர்,**
**மாவதகம.**

2022ஆம் வருட டிசெம்பர் மாதம் 09ஆம் திகதி
**மாவதகம பிரதேச செயலகத்தில்**




## எல்ல பிரதேச சபை

## 2023 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

எல்ல பிரதேச சபைக்கு 2023ஆம் ஆண்டு சார்பாக பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்தல் மற்றும் சேவை வழங்கல் சார்பாக வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2023.01.05 பி.ப. 3.00 வரை நடைபெறும்.

2023 ஆண்டிற்காக எல்ல பிரதேச சபையின் வழங்குநராக பதிவு செய்வதற்கு எதிர்பார்ப்போர் எல்ல பிரதேச சபையின் www.Ellaps.lk இணைய தளத்திற்கு பிரவேசித்து மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**எல்ல பிரதேச சபை.**
**057-2228575**

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

## 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

**SPC/SUP/FI/002/2022/12**

1. 2023ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்துடன் பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
2. பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பிக்கும் அனைத்து நிறுவனங்களும் அந்த ஒவ்வொரு வழங்கல் அல்லது சேவையின் பொருட்டு மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணமாக 1000.00 ரூபாவைச் செலுத்துதல் வேண்டும். இதன் பொருட்டு அரசாங்க அச்சகக் கூட்டுத்தானத்தின் பெயரில் வரையப்பட்ட காசோலை அல்லது கூட்டுத்தாபனத்தின் காசாளரிடம் பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் உங்கள் விண்ணப்பங்களை 2023-01-31ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறல்லாவிடில் வழங்கல்கள் முகாமையாளரிடம் ஒப்படைக்கலாம்.
3. விண்ணப்பதாரர்கள் பின்வரும் விபரங்களை உள்ளடக்கி தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
    1) விண்ணப்பதாரர் / உற்பத்தியாளர் / ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி:
    2) தொலைபேசி இலக்கம் / தொலைநகல் இலக்கம் / மின்னஞ்சல் இலக்கம்:
    3) வியாபாரப் பதிவு இலக்கம் மற்றும் அச்சான்றிதழின் புகைப்படப் பிரதியொன்று
    4) பெறுமதிசேர் வரி (வெட்) இலக்கம் மற்றும் தடுத்து வைத்தல் வரியின் பதிவு இலக்கம்:
    5) பதிவு செய்து கொள்ள வேண்டிய வழங்கல்/ சேவையின் பெயர் மற்றும் தொடர் இலக்கம்
    6) கடன் வசதிகள் (ஒரு மாத காலத்திற்கு கடன் வசதியை வழங்க இணக்கம் தெரிவிப்பவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும்)
    7) 2022ஆம் வருடத்தினுள் அரச அல்லது தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொருள் மற்றும் சேவை தொடர்பான விபரங்கள் மற்றும் அந்த நிறுவனங்களின் பெயர்கள்:
    8) பதிவுக் கட்டணத்திற்காக சமர்ப்பிக்கப்படும் காசோலை அல்லது பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் தொகை:
4. கூட்டுத்தாபனத்தினால் விண்ணப்பதாரரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் அதற்காக செலுத்தப்பட்ட பதிவுக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. தாம் பதிவு செய்து கொண்ட பொருள் மற்றும் சேவையின் பொருட்டு அடுத்தடுத்து மூன்று முறை விலைகளைச் சமர்ப்பிக்கத் தவறினால் அவர்களின் பதிவு இரத்துச் செய்யப்படும்.
5. கூட்டுத்தாபனத்தினால் குறித்த வருடத்தினுள் கொள்வனவு செய்யப்பட வேண்டிய பொருள் மற்றும் சேவை வழங்கல்கள் பதிவு செய்யப்பட்டுள்ள வழங்குநர்களிடம் கொள்வனவு செய்யப்படும் என்பதுடன் ஏனைய பதிவு செய்யப்படாத வழங்குநர்களிடமிருந்து விலைகளைக் கோரும் உரிமையை கூட்டுத்தாபனம் தன்னகத்தே கொண்டுள்ளது.

**வழங்கல்கள்**

1. இறக்குமதி செய்யப்பட்ட சகல வகையான காகிதங்கள் மற்றும் அட்டை வகைகள்
2. அச்சு மைகள் (உள்நாடு மற்றும் வெளிநாடு)
3. அச்சு மைகள் (உள்நாட்டு, வெளிநாட்டு பிளெக்சோ மை, UV மை)
4. ஓப்செட் பிரின்டிங் பிளேட்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள்
5. கிரபிக் ஆர்ட் பிலிம்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள்
6. புத்தகம் கட்டுவதற்கான பொருட்கள் (பசை வகைகள் மற்றும் நூல் வகைகள்)
7. காகிதாதிகள் (மீள் விற்பனை மற்றும் அலுவலக உபயோகத்திற்கு)
8. கணனி/நகல் பிரதி இயந்திரங்கள், டோனர் மற்றும் அதனைச் சார்ந்த அச்சு உபகரணங்கள்
9. கணனி காகிதாதிகள்
10. கடித உறைகள் (மனிலா மற்றும் வெள்ளை)
11. மின்சாரப் பொருட்கள் (பீ.வீ.சீ. குழாய்கள், சுவிட்சுகள், ஹோல்டர்கள், மின்குமிழ்கள் மற்றும் ஏனையவை)
12. தொழிற்சாலை ஆயுதங்கள் / கருவிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள்
13. கனமான நூல்
14. பெனியன் வேஸ்ட், கைதுடைப்பான்கள், பொலிஷிங் துணிகள்
15. சீருடைகள் (காலணிகள், தொப்பிகள், இடை வார்கள், தோல் பைகள், பிரிவ் கேஸ்கள் போன்றன)
16. அச்சு இயந்திரங்களுக்கான உதிரிப்பாகங்கள்
17. வாகன உதிரிப்பாகங்கள் (பெட்டறிகள் உட்பட)
18. டயர்கள் / டியூப்கள் / டேப்கள்
19. வளிச்சீராக்கிகள்
20. பிளாஸ்டிக் நாட்குறிப்பு உறைகள்
21. எல். டி. பொலித்தீன் / HDPE பைகள்
22. லெமினேட்டிங் பிலிம்கள் மற்றும் பசைகள்
23. UV வார்னிஷ் (ஓவர் பிரின்ட்)
24. அச்சு இயந்திர பிளங்கட்கள்
25. பெயாரிங்குகள்
26. கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
27. மரம் மற்றும் உருக்குத் தளபாடங்கள்
28. அச்சு இயந்திரம் சார்ந்த இயந்திரோபகரணங்கள்
29. CTP பிளேட்கள்
30. நாட்குறிப்பு உறைகள் (ரெக்ஸின்)
31. வெட்டும் அச்சு இயந்திரங்களுக்குத் தேவையான கத்தி அலகுகள் மற்றும் பைபர் வெட்டும் கத்தி அலகுகள்

**சேவைகள்**

32. கட்டிட நிர்மாண வேலைகள்
33. வாகன திருத்தவேலைகள் மற்றும் சேவை செய்தல் மற்றும் வளிச்சீராக்கம் செய்தல்
34. (ஹோமாகம சுற்றுப்புறத்திலுள்ள திருத்தகங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்)
35. அச்சுத் தொழிலுக்குத் தேவையான அனைத்து வகையான புளொக்கள் மற்றும் கட்டர்கள் தயாரித்து வழங்குதல்
36. கலண்டர்களுக்கான உருக்குப் பட்டிகளை வழங்குதல்
37. பீடைநாசினி சேவைகள்
38. அச்சு இயந்திரங்களுக்குரிய இறப்பர் ரோலர்களை மீள்நிரப்புதல்
39. புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளை லெமினேட்டிங் செய்தல்
40. வாகனங்களை வாடகைக்கு வழங்குதல் (லொறி, போர்க் லிப்ட்)
41. அச்சு இயந்திரங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல்

மேலதிக விபரங்களை 011-2757501 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக வழங்கல் முகாமையாளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தவிசாளர்,**
**அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்,**
**பானலுவ, பாதுக்க.**

SPC

## இலங்கை தேசிய வைத்தியசாலை
### கொழும்பு-10.
## பெறுகை அறிவித்தல்

இலங்கை தேசிய வைத்தியசாலையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலையை நிறைவேற்றுவதற்காக ICTAD இல் பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. 2022.12.14 ஆம் திகதியிலிருந்து 2022.12.27 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவில் விலைமனுபடிவ மீளளிக்கப்படாத கட்டணமாக 4,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், பொது நிருவாக அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் கையேற்கப்படலாம். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையில் அடக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை 2022.12.28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு முன்னராக வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்த பின்னர் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் இந்த வேளையில் சமுகமளிக்கலாம்.

| இல. | வேலை | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு ரூபா. சதம் | தரம் | மீளளிக்கப்படும் விலைமனுப் பிணை ரூபா. சதம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா. சதம் | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01. | 11 ஆம் இலக்க வாட்டின் 16,17,18,19,20,21 மற்றும் 22 ஆம் இலக்க அறைகளின் பழுதுபார்த்தல்கள் வேலைகள். (AC-1/56/2019) | 20,372,057.00 | விஷேடத்துவம்: கட்டிடம் மற்றும் மின்னியலில் சி-6 அல்லது மேற்பட்டது மற்றும் ,ஈஎம் 4 அல்லது மேற்பட்டது. | 306,000.00 | 4,000.00 | விலைமனு ஆவணங்களை கையேற்கும் வேளையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள விலைமனுப் பெறுமதியானது 5,000,000 ரூபாவிற்கு மேற்படின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடமிருந்து சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**மருத்துவ கலாநிதி டபிள்யு.கே. விக்ரமசிங்ஹ**
**தலைவர், பெறுகைக் குழு**
**இலங்கை தேசிய வைத்தியசாலை**
**கொழும்பு-10.**

# ஜப்னா கிங்ஸ் அணி முன்னேற்றம்



லங்கா பிரீமியர் லீக் தொடரில் நடப்புச் சம்பியன் ஜப்னா கிங்ஸ் அணி கொழும்பு ஸ்டார்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 6 ஓட்டங்களால் வெற்றியீட்டி புள்ளிப்பட்டியலில் மீண்டும் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.

பல்லேகலவில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட ஜப்னா அணி 20 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 178 ஓட்டங்களை பெற்றது.

இந்நிலையில பதிலெடுத்தாட களமிறங்கிய கொழும்பு ஸ்டார்ஸ் அணிக்கு அதன் தலைவர் அஞ்சலோ மெத்தியுஸ் 38 பந்துகளில் 8 பௌண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்களுடன் 73 ஓட்டங்களை பெற்றபோதும் அந்த அணியால் இலக்கை எட்ட முடியாமல்போனது.

இதன்போது கடைசி ஓவருக்கு 22 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் மெத்தியூஸ் 3, 4 ஆவது பந்துகளில் அடுத்தடுத்து சிக்ஸர்களை விளாசினார். எனினும் கடைசி இரண்டு பந்துகளுக்கும் மூன்று ஓட்டங்களையே பெற முடிந்தது.

இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் கொழும்பு அணி 8 விக்கெட்டுகளை இழந்து 172 ஓட்டங்களையே பெற்றது.

## ஒப்சர்வர்–SLT மொபிடெல்

# பாடசாலை கிரிக்கெட் விருது விழா நாளை

44ஆவது ஒப்சர்வர்–SLT மொபிடெல் 2022 பாடசாலை கிரிக்கெட் வீரருக்கான விருது விழா நாளை வியாழக்கிழமை (15) பி.ப. 5.15 தொடக்கம் கொழும்பு 7, பி.எம்.ஐ.சி.எச் இல் நடைபெறவுள்ளது. இதில் 143 டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் டெஸ்ட் போட்டி ஒன்றின் இரண்டு இன்னிங்ஸ்களிலும் ஆட்டமிழக்காது சதம் பெற்ற ஒரே வீரரான அரவிந்த டி சில்வா பங்கேற்று நிகழ்வை அலங்கரிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் ஊடகத் துறை இராஜாங்க அமைச்சர் ஷாந்த பண்டார ஆகியோர் கௌரவ அதிதிகளாக பங்கேற்கவுள்ளனர்.

இந்த நிகழ்வையொட்டி பி.எம்.ஐ.சி.எச் இல் பெரிய திரையில் இலங்கை அணி வென்ற 2022 ஆசிய கிண்ண இறுதிப் போட்டியின் சுருக்க நிகழ்வு ஒளிபரப்பப்படவுள்ளதோடு அரவிந்த டி சில்வாவை கௌரவிக்கும் வகையிலும் பாடல் ஒளிபரப்பப்படவுள்ளது.

இதில் பல கலைஞர்கள் பங்கேற்கும் கண்கவர் கலை நிகழ்சிகளும் இடம்பெறவுள்ளன.

கொவிட் பெருந்தொற்று இடையூறுக்கு மத்தியிலும் நான்கரை தசாப்த வரலாற்றில் முதல் முறையாக ஒரே ஆண்டில் இரு விருது விழாக்களை நடத்த கடந்த ஆண்டில் முடியுமானது குறிப்பிடத்தக்கது.



இந்த விருது விழாவுக்கு SLT மொபிடெல் நிறுவனம் 15ஆவது ஆண்டாகவும் வெற்றிகரமாக அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. ஸ்ரீலங்கா டெலிகொம் குழுமத் தலைவர் ரொஷான் பெர்னாண்டோ இந்த நிகழ்வுக்கு முழு ஆதரவை வழங்கி வருகிறார்.

இந்த விருது நிகழ்ச்சியை குறையின்றி நடத்துவதற்கு சண்டே ஒப்சர்வர் மற்றும் SLT மொபிடல் உடன் இலங்கை பாடசாலை கிரிக்கெட் சம்மேளனம் மற்றும் இலங்கை கிரிக்கெட் நடுவர்கள் மற்றும் ஓட்டப் பதிவாளர் சங்கம் கைகோர்த்துள்ளது.

அதேபோன்று லேக் ஹவுஸ் நிறுவனத் தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் அநுரஷ பல்பிட்ட மற்றும் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையைச் சேர்ந்த சிசிர பரணதன்திரி (ஆசிரியர் பீடம்), ஜனக ரணதுங்க (சட்டம் மற்றும் நிர்வாகம்), மஞ்சுல மாகும்புர (செயற்பாடு) மற்றும் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் (நிதி) ஆகியோர் இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டுக்காக பின்னணியில் நின்று செயற்பட்டு வருகின்றனர்.

பாடசாலை கிரிக்கெட் வீரர்களின் திறமையை அங்கீகரிக்கும் இந்த விருது விழாவை பாடசாலை கிரிக்கெட் தேசிய சபை உருவாக்கப்படுவதற்கு முன்னரே 1970களில் இருந்து நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங் கையில் உருவான திறமை மி க்க பல கிரிக்கெட் வீரர்களும் இந்த விருதை வென்றவர்களாவர்.

## உலக டெஸ்ட் சம்பியன்சிப்:

# இறுதிப் போட்டிக்கு தெரிவாக இலங்கை அணிக்கு வாய்ப்பு



எதிர்வரும் டெஸ்ட் தொடர்களின் முடிவுகள் அடிப்படையில் இலங்கை அணிக்கு உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு முன்னேற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கு இலங்கை அணி முதலில் நியூசிலாந்துக்கு எதிரான எதிர்வரும் டெஸ்ட் தொடரில் 2–0 என வெற்றியீட்ட வேண்டும். தொடர்ந்து, இந்தியா மற்றும் தென்னாபிரிக்க அணிகள் தனது கடைசி போட்டிகளில் குறைந்தது ஒரு ஆட்டத்தில் தோல்வி அடைய வேண்டும்.

2021–23 உலக டெஸ்ட் சம்பியன்சிப் பருவம் கடைசி கட்டத்தை எட்டியுள்ளது.

ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்சிப் தரவரிசையில் இலங்கை அணி தற்போது 64 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தில் உள்ளது. இதில் 108 புள்ளிகளுடன் அவுஸ்திரேலியா முதலிடத்திலும் 72 புள்ளிகளுடன் தென்னாபிரிக்கா இரண்டாவது இடத்திலும் காணப்படுகின்றன.

இதில் இந்தியா 4ஆவது இடத்தில் இருப்பதோடு நியூசிலாந்து எட்டாவது இடத்தில் காணப்படுகிறது.

இலங்கை அணி வரும் 2023 மார்ச் மாதம் நியூசிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடவுள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டி 2023 ஜூன் மாதம் லண்டன், ஓவலில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மட்ட விளையாட்டுகளில் வென்ற மாணவர்கள் கௌரவிப்பு




**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட களுதாவளை மகா வித்தியாலய தேசிய பாடசாலை மாணவர்களை பாராட்டி வரவேற்கும் நிகழ்வு அதிபர் க. சத்தியமோகன் தலைமையில் நேற்று (13) நடைபெற்றது.

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட விளையாட்டுப் போட்டியில் 20 வயதின் கீழ் ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் தியாகராசா டிலுஜன் மூன்றாம் இடத்தையும், 18 வயதின் கீழ் ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் மேகரன் கதுஸ்கர் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

வலயத்திற்கும், கிராமத்திற்கும் பெருமைதேடித்தந்த இம் மாணவர்கள் பிரதான வீதியில் இருந்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு பாடசாலை சமூகம், கிராம மக்களால் பாராட்டி கௌரவிக்கப்ட்டனர். அதில் பிரதி அதிபர்களான செ.செந்தில்குமார், திருமதி கே.சுரேஸ்குமார், உட்பட ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

# சர்வதேச சதுரங்கப் போட்டி; பதுளை ஆத்ராவுக்கு வெற்றி

**லுணுகம நிருபர்**



ஆசிய நாடுகளுக்கிடையில் பாடசாலை மட்டத்திலான, இலங்கை சர்வதேச சதுரங்க சம்மேளத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்பது வயதுக்குட்பட்ட சர்வதேச சதுரங்கப் போட்டியில் பதுளை, சசெக்ஸ் தனியார் பாடசாலையின் பிரதீப்குமார் ஆத்ரா மூன்றாம் இடத்தை வென்றார்.

இதன்மூலம் அவர் மாகாண மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் சிறந்த போட்டியாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த டிசம்பர் 03 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை நடைபெற்ற இந்தப் போட்டியில் 12 நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் பங்கேற்றனர்.




ராஜகிரிய சந்திரா சில்வா விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (10) நடைபெற்ற இராஜதந்திர தூதரக அதிகாரிகள் மற்றும் ஐ.நா முகவரக உறுப்பினர்கள் பங்கேற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய வளைகுடா அணி மற்றும் பிரமுகர்களை படத்தில் காணலாம்.

# சர்வதேச செய்திகள்

# துப்பாக்கிச் சண்டையில் ஆஸியில் அறுவர் பலி





அவுஸ்திரேலியாவின் குவீன்ஸ்லாந்து மாநிலத்திலுள்ள புறநகர்ப் பகுதியில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 2 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

காணாமற்போன ஒருவரைத் தேடுவதற்காகச் சம்பவம் நடந்த இடத்திற்கு பொலிஸார் கடந்த திங்கட்கிழமை இரவு சென்றிருந்தனர். சம்பவ இடத்தில் ஒரு பெண் உட்பட மூவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். பொதுமக்களில் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆயுதமேந்திய இருவர் அங்கு சென்றிருந்த பொலிஸ் அதிகாரிகளைச் சுட்டனர் என்று முதற்கட்டத் தகவல்கள் கூறின. சம்பவத்தில் காயமுற்ற 2 பொலிஸ் அதிகாரிகள் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். அவர்களுக்கு கடுமையான காயங்கள் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது.

1996இல் டஸ்மேனியாவில் துப்பாக்கிதாரி ஒருவர் 35 பேரை சுட்டுக்கொன்ற சம்பவத்தைத் தொடர்ந்து அவுஸ்திரேலியாவில் கடுமையான துப்பாக்கி கட்டுப்பாட்டு சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. அது தொடக்கம் மூன்று பாரிய துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் நால்வர் கொல்லப்பட்டனர்.

# இந்திய–சீன எல்லைப் பகுதியில் இரு துருப்புகளும் மீண்டும் பூசல்

இந்திய, சீன எல்லையில் மீண்டும் இருநாட்டுத் துருப்பினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. இமயமலை எல்லைப் பகுதியில் இது இடம்பெற்றது.

இருதரப்பிலும் துருப்பினர் சிலர் காயம் அடைந்தனர் என்றும் அந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை (09) ஏற்பட்டது என்றும் ஏ.எப்.பி செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இந்தியாவின் அருணாச்சலப் பிரதேச எல்லையில் சீனாவினால் உரிமை கொண்டாடப்படும் தாவாங் பகுதியில் மோதல் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

அந்த எல்லை அருகே அண்மையில் இந்தியாவும் அமெரிக்காவும் இராணுவப் பயிற்சியை நடத்தின.

இந்திய–சீன எல்லையில் இருநாட்டவரும் செல்லக்கூடாத வட்டாரத்துக்கு அருகே சீனப் படை வீரர்கள் சென்றதாகக் கூறப்படுகிறது. இருதரப்பிலும் சிறு காயங்கள் ஏற்பட்டதாக நம்பப்படுகிறது.

இது பற்றி சீனத் தரப்பு எந்த அறிவித்தலையும் விடுக்கவில்லை என்றபோதும்



ஆறு படை வீரர் காயமடைந்தாக இந்திய இராணுவ வட்டாரம் குறிப்பிட்டுள்ளது. 'அந்தப் பகுதியில் இருந்து இரு இராணுவமும் உடன் விலகிக்கொண்டது' என்று இந்திய இராணுவம் குறிப்பிட்டது.

அமைதியை நிலைநாட்ட இரு தரப்பு கட்டளைத் தளபதிகளும் உடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டில் நேர்ந்த எல்லைப் பூசலிலிருந்து இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான பதற்றம் கடுமையாகி வருகிறது. அப்போது எல்லையில் நடந்த மோதலில் இருதரப்பிலும் உயிர்ச்சேதம் ஏற்பட்டது.

# பங்களாதேஷ் ஆடை ஏற்றுமதி அதிகரிப்பு



ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பங்களாதேஷின் ஆடை ஏற்றுமதிகள் சீனா மற்றும் ஏனைய நாடுகளை விடவும் கணிசமாக அதிகரித்திருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

கடந்த ஜனவரி தொடக்கம் ஓகஸ்ட் வரையான காலத்தில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பங்களாதேஷின் ஆடை ஏற்றுமதி சுமார் 15.37 பில்லியன் டொலர்கள் என 45.26 வீதம் அதிகரித்துள்ளது. இதன்படி ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆடை இறக்குமதியில் 23 வீதத்திற்கு மேல் பங்கு வகிக்கும் பங்களாதேஷ் ஒன்றியத்தின் இரண்டாவது மிகப்பெரிய ஏற்றுமதியாளராக தொடர்ந்து பதிவாகியுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 14ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.